ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

கோவிலன் வட்டப்பாறையில் வதைபட்ட
கோவிலன் கர்னகி நாடகம்

இஃது வீரபத்திர நாய்க்கரால்

இயற்றியதை

சூளை முனிசாமி முதலியார்

சகலசுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு

சென்னை சூளை

தனலக்ஷ்மி ரத்தன அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

ரிஜிஸ்டர்காப்பிரைட்

...] 1912 [அணா-5

...செங்கேஸ்வரர் கோவில் தெருவு சூளை

73

OFFICE ... 12 ... MADR...

O-2MMY, K.
N12
148520

உ

சிவமயம்.

கோவிலன் வட்டப்பாறையில்வதைபட்ட

கோவிலன் கர்ணகி நாடகம்.

விநாயகர் துதி-விருத்தம்.

ருள்ளகாவிரிப்பூம் பட்டணத்தில்
செட்டியெனும் மாணாக்கன்தபத்தினாலே
பாருள்ளோர்மெச்சுமொரு வண்ணமாலை
பத்தினியாளீன்ற கோவிலனாரென்னும்
பேருள்ளோன்சரித்திரத்தை யெவரும்கேழ்க்க
பெருமையுடனாடகமாய் பேசத்தும்பை
தாருள்ளக்கரிமுகவ ரெந்தநாளும்
தாக்ஷியணுகாமலருள் தருகுவாரே.

சிவன் துதி-கவி.

பிரைமதிசூடும் பிஞ்ஞகன்பாதம்
நரைமலர்சூடி நான்தொழுதேனே.

விஷ்ணு துதி-கவி.

ஆயர்கள்வெண்ணெய் அள்ளிவாயுண்ட
மாயனார்பாதம் வந்தனஞ்செய்தேன்

பார்வதி துதி-கவி.

இமையோர்பர்வத யிராஜபுத்திரியே
உமையவளேயென் னுளத்திருப்பாயே.

லக்ஷிமி துதி-கவி.

பக்ஷமாயரிமார் யிஷ்டமாய்வாழும்
லக்ஷிமியேயென் நாவில்நிற்பாயே

வாணி துதி-கவி

வெண்டாமரையில் வீற்றிருந்தாயே
தண்டமிழோத தயைபுரிவாயே.

142570

கோவிலன் கர்ணகி நாடகம்.

வேலர்துதி கவி.

சரவணபவனேபோற்றி சற்குருபரனேபோற்றி
[illegible]பொருளேபோற்றி பெறுமையுள்ளவனேபோற்றி
அரனிடமதலாய்போற்றி ஆறுமுகையாய்போற்றி
மூரகரிமருகாபோற்றி முருகனேபோற்றிபோற்றி

வீரபத்திரர்துதி-கவி.

அரனெதிராகச்செய்த யாகமுன்சென்றாய்போற்றி
கரமுள தக்கன்சென்னி கண்டிதம்செய்தாய்போற்றி
பரமனாரடிபணிந்து பகையிலேயென்றாய்போற்றி
திரமுள்ளவீரபத்ரா சேவடிபோற்றிபோற்றி.

புலவோர்கள்துதி-கவி

நாலாருபதிநெட்டு தொண்ணூத்தாரு
    நாடியதினுள்ளிருக்கும் பொருளையெல்லாம்
பாலாகவுண்டுமனம் தேரியாய்ந்த
    பாவணரெனும்புலவோர் பாதம்போற்றி
நூலாகபுகழேந்தி புலவோர்சொன்ன
    நோற்படியேகோவிலநார் கதையையானும்
காலாகவைத்துநா டகமேசெய்தேன்
    கருதுமொழிதனில்பிழையைக் கார்த்திடீரே.

ஆக்கியேயன்-கவி.

பன்னயமோங்குஞ்செட்டிப் பட்டினிலிருத்துவாழும்
வன்னியகொமரன்சேயாய் வந்திடும்வீரபத்திரன்
கொன்னியபெண்ணால்கெட்ட கோவிலன்கதையைப்பாரில்
நன்னயத்தமிழினாலே நாடகம்செய்ததாமே.

விநாயகர்வருகிற-கவி.

சந்தனம்பரிமளிக்க சாந்துசவ்வாதுவீச
துந்தமிவாத்தியங்கள் தொனித்திட நடனமாட
அந்தரத்தேவர்சூழ ஆகுவாகனமிதேரி
தந்தி[illegible] சபைதனில்வருகின்றாரே.

இப்

கடவுள் தன

யேழைகளுக்கு

விநாயகர்வருகிற-தரு.

வந்தார்சபைமுன்பாகவே ஓங்கணநாதர்.
வாறார்சபைமுன்பாகவே
வந்தார்சபைமுன்பாக வாகனமாகுவேரி
தந்தாரெவர்க்கும்வரம் சந்தோஷமனமீரி-வ
ஐந்துகரம்துலங்க ஆனைமுகமிலங்க
தொந்திவயர்குலுங்க தும்பிக்கையுமலங்க-வ
காதிற்குண்டலமாட கண்டிகைமார்பிலாட
பாதிமதிபணியும் பகவானளித்தமைந்தன்-வ
முப்புரிநூலுமாட முனிவர்மங்களம்பாட
சப்பாணியெனும்நாட சபையிலனைவோர்கூட-வ

பொது-வசனம்.

அகோ தெப்படியென்றால் மதுராபுரிபட்டணத்தை அரசா செய்து வராநின்ற பாண்டியராஜன்சபை கொலுவலங்கரிக்கத்தக தாய் கட்டியன் வருகிறவிதங்காண்க.

...டியன்வருகிர-கவி.

...பணிந்த நாதனாறருளினாலே
...ார் குடையிலாளும் மதிகுலபாண்டியராஜன்
...ன்வீற்றிருக்கும் சபாகொலுவலங்கரிக்க
...ரனும்பாகைபூண்டு கட்டியன்வருகின்றானே.

கட்டியன்வருகிர-தரு.

கட்டியக்காரனிதோவந்தான் பாண்டியனடியன்வாசல்
காவல்காரனிதோவந்தான்
கட்டியக்காரன்வந்தான் காலிற்சிலம்புகொஞ்ச
சுட்டிக்கலிக்கத்துரா சோதிமதிகமிஞ்ச-கட்டி
பாலாயீட்டியம்புடன் பருத்தகதையுமேந்தி
நாலாயிரம்பொன்பெற்ற ரங்குப்பாகையருந்தி-கட்டி
அங்கிநிஜாரணிந்து அழகாய்நடைநடந்து
செங்கோல்முறையரிந்து சேவகம்செய்யத்துணிந்து- கட்டி
தங்கக்கடகம்ரெண்டும் தகதகதகவென்ன
தரித்தபொட்டுநெத்தியை நெரித்துநிகநிகென்ன-கட்டி

பொது-வசனம்.

அகோ தெப்படியென்றால் மதுராபுரிபட்டணத்தை பரிபாலின
செய்து வராநின்ற பாண்டியமகாராஜன் கொலுவாகவருகிறவிதங்

...ாண்க.

பாண்டியராஜன் வருகிர-விருத்தம்.

மணிமகுடமன்னவர்கள் பணிந்துநிர்க்க
　　மாணிக்கயொளிமிகுந்த மகுடமின்ன
பணிகளதுபளபளென விழிகள்கூச
　　பாவையர்களிருபுரமும் கவரிவீச
கணிதயர்களெதிரில்பல நடனமாட
　　கரிபரிகளணியணியாய் புடைகள்சூழ
அணிமதுரைசொக்கறரு ளானபாண்டியன்
　　அரசுசெய்யத்துரிதமுடன் வருகின்ருனே.

பாண்டியன்வருகிர-தரு.

மதுரையெங்குமோர்குடையி　　லாண்டிடுவோன்
பாண்டியராஜன்　　வரசுசெய்திடவந்துமேவினானே
விதியுரைத்திடமந்திரிசூழ்ந்திடவே　　யுலகிலுள்ள
வேந்தர்வந்தடிமிசை　　தாழ்ந்திடவே
சுதியுமத்தளதாளம்கொட்டிடவே　　தம்பூருவீணை
சுரமரிந்துவரிசையு　　மீட்டிடவே-சரு

யெதிரில்றம்பயர்　　நடனமாடிட
யின்பமாய்பல　　பேர்கள்பாடி—

துதியுடன்மறை யோர்கள்நாடிட
சோபனஞ்நில மாதர்பாடிட-மதுரை

விலையிலாமணி முடி துலங்கிடவே குண்டலம்காதில்
வெய்யவனொளியா யிலங்கிடவே
கலகலவெனபணி குலுங்கிடவே
தண்டைகள்சத்தம் காலினிலதுவாய்புலம்பிடவே-சரு

சிலைகளேந்திய படைநெரிங்கிட
சேனைதேர்பரி தூள்பரந்திட
மலைகள்போல்மத கறிநிறைந்திட
பக்ஷகேதன மேபரந்திட-மதுரை

படபடெனவெடிசத்த மோங்கிடவே
பீரங்கியோடு பாலாவே லிருபக்கம்தாங்கிடவே
தடதடவெனமுற சடித்திடவே
பெக்காளபூரி சாருவோர்பலபேர்துடித்திடவே சரு

அடவுடன்குடை முடியில்தாங்கிட
ஆளும்செங்கோலென் னாளுமோங்கிட
திடமாயாரிலோர் கடமைவாங்கிட
தேய்பிரஜைகள் துயரம்நீங்கிட மதுரை

தங்கப்புயமிரு கண்கள்கூசிடவே
தாதியர்தள்வேண சாமரையிருபாலும்விசிடவே
மங்கைசந்தணவாடை பூசிடவே
வானவரெல்லாம்வாழ்த்தி மங்களமாகப்பேசிடவே சரு

யெங்குபாண மிரைச்சலண்டிட
யேகதீபமத் தாப்புமூண்டிட
திங்கள்செஞ்சடை யோனைவேண்டிட
தேறியவர்மன தன்புமூண்டிட மதுரை

பாண்டியராஜன் விசாரணை விருத்தம்.

பா தேன்பொழியுமதுரை வளநாட்டில்தேவாலயம்
திருவிழா நடந்துவருதோ
மந் தீரனேநம்முடைய தேவாலயங்களில்
சிரப்புடன் நடக்குதையா

பா அந்தணர்கள்செய்தப மனுஷ்ட்டானபூஜையும்
அரமும்நடந்துவருதா

மந் அய்யனேவேதிப றனுஷ்ட்டானபூஜையும்
அரமும் நடந்துவருதே

பா ஆகாசகெங்கையு மாத மும்மாரிபேய்ந்
தன்பாய் செழித்துவருதோ

மந் ஆருகுளமேரிவயல் மாரியதினலெங்கும்
அலேமோதிருக்குதையா

பா நொந்தகுடியோரவர்கள்செய்துவரும்பயிர்களும்
நோகாமலோங்கிவருதா

மந் அந்தந்தவூர்குடிகள் செய்தபயிரோங்கியே
அன்பாயிருக்குறார்கள்

பா உத்தமிகளெப்பொழுதும்புத்திகலேயாமலே
சுத்தமோடிருக்குறரோ

மந் சத்திபந்தப்பாத உத்தமிகள்வேணயேர்
தணலாயிருக்குறார்கள்

பா கோவுபுலிகூடியொரு குணமதாய்நீரதை
குடித்துகளியாரிவருதா

மந் கொற்றவாயுன்மகிமை யாலேபுலிபசுஜலம்
குடித்துகளியாரிவருதே

பாண்டியன்சொல்-கவி.

மந்திரியேயெந்தனிட வார்த்தைகேளும்
மதலேயிலாதுயரதினல் மயங்கியானும்
சிந்தைதனில் திருகுலிதன்னேவேண்டி
திருப்பணிகள்வேலேதனை முடிப்பேனென்று
யெந்தனிடநாவதின லுரைத்தேனப்பா
யிதுவரையில் சந்ததியுமில்லாத்தாலே
நொந்திடவேகதவடைத்து முத்திரித்து
நொடிதனிலேவந்தெனக்கு வுரைசெய்வீரே.

பாண்டியன் சொல்-வசனம்.

வாரும் மந்திரிமார்களே யெங்கள்வம்சத்தில் பாரம்பரையாய்பு த்திரருமில்லாதிருப்பதால் யெனக்குபுத்திர சோபம் மேலிட்டு நம

து பட்டணத்திலிரானின்ற காளிகாதேவியே யெனக்கு புத்திரருண்டானால் உனக்கு தேர்திருவிழா திரும்பணிவேலைமுதலாகியதும் மேலாய் நடத்திவைக்கிறேனென்று நான் பிரார்த்தனை செய்துயிருக்க யிதுவரையில்புத்திரனளிக்காதபடியினாலே அவளுக்கு பூசை புஷ்ப்பம் திருவிளக்கு முதலாகியது யினிநடத்தத்தகாது அவளுடையகதவையடைத்து முத்திரித்தும்யினியாரும் திருவிளக்குவைக்கக்கூடாதென்று பட்டணமுழுதுந் தெரிவித்து பதில்வந்து சொல்லுங்கோள் மந்திரிமார்களே.

மந்திரிசொல்-கவி.

சக்கரவர்த்தியான தயாபருசொல்லக்கேளீர்
நக்கனோடாடுங்காளி நல்விளக்கவித்தபின்பு
பக்கெனகதவைமூடி பாரியதாப்பாளிட்டு
ஒக்கவேமுத்திரித்து ஓடியேவந்தோமையா.

மந்திரிகள்சொல்-வசனம்.

சரணம் சரணமையா சுவாமிராஜாதிராஜனே தங்களிடஉத்தாரப்படிக்கு காளிகாதேவியினிட சன்னதிகதவை மூடிமுத்திரித்து வந்தோமையா சுவாமி.

பாண்டியன்சொல்-வசனம்

ஆனால் நம்மிடசமுகத்தில் வீற்றிரும் மந்திரிமார்களே.

பொது-வசனம்.

இப்படியாக-பாண்டியராஜன் கட்டளைப்படிமந்திரிமார்கள் காளிதேவிசன்னதியைமூடி யாருந் திருவிளக்கு யேத்தலாகாதென்று பட்டணமுழுதும் பறையறைவித்து அரசாண்டு வருகிறநாளில் அந்தப்பட்டணத்தி லிரானின்றதிலவணிகனாகிய மணியரசனீன்ற பிள்ளைகளில் யிளையவன்தன் வறுமையினாலே தன்பாகத்து யெண்ணையைலை கூறிவருகிற விதங்காண்க.

வாணியன்சொல்-கவி.

இப்படியிருக்குநாளில் யெழில்பெரும்மதுரைதன்னில்
செக்கடித்துண்ணுமந்த ஜெயமணியரசனீன்ற
மக்களிலிளையோனும்தன் வருமையாலெண்ணைவிற்க்க
அக்கரையாலேநின்று அழைத்தவன்கூருவானே



வாணியன் யெண்ணைவிர்க்கும் தரு

எண்ணைவாங்கலியோ சனங்களா
எண்ணைவாங்கலியோ

எண்ணையைப்பாருங்கள் யியாவரும்வாருங்கள்
திண்ணையிலிரக்குரேன் சிலவானால்கூருங்கள் எண்

நல்லண்ணைரொம்ப நலமாயிருக்குது
சில்லென்றுகண்மாசி திடமாயருக்குது எண்

புத்திரர்குஷ்டிக்கி போடயிதவான
சித்தாமணக்கெண்ணை தெளிவாயிருக்குது எண்

பணத்துக்கிலுப்பெண்ணை படியாயிருக்குது
கணக்குடன்வாங்கிநீர் காசுகள்தந்திடும் எண்

தணிமணிலாயெண்ணை சரசமாயிருக்குது
அனியாயமில்லாமல் அளந்துதருகிரேன் எண்

வேப்பெண்ணையெங்கும் விபரீதமில்லாமல்
ஆப்பிடரொம்ப வரிதாயிருக்குது எண்

வாணியன் சொல் கவி.

சத்திச்சாமுண்டிநீலி சங்கரியாளேயெங்கும்
சுத்திநான்யெண்ணைவித்து துயரமாய்வந்தேனம்மா
வித்திடும்படியேயிப்போ விமலிநீகிருபைசெய்தால்
சித்தமுமகிழவாயிற் றீபமுமேத்துவேனே

வாணியன்சொல் வசனம்.

சிங்கவாகனத்தின்பேரில் நடனம்செய்யும் காளிகாதேவியே நான்தெருத்தெருவாக விலைகூறிவந்தும் யாரும்யேனென்று கேளாதிருப்பது உன்மகிமைதானே யான் அறிகிலேன் அப்படிக்கியென் யெண்ணைகள் விலையாகிப்போனால் உன் சன்னதிநிறைய ஆயிரம் திருவிளக்கேத்திவைக்கிறேனம்மா தாயே,

வாணியன் சொல் தரு.

மதுராபுரிஜெனங்கள்யெண்ணை வாங்கலியோ
எண்ணைவாங்கலீயோ
இதுபுதுசாகஆடின நல்லெண்ணை
புண்ணியரேஸ்தானம் செய்யலியோ மதுரா

இதுவோயிலுப்பெண்ணை தானிதன்மீது
விருப்பது முத்தெண்ணை
அதுவோமணிலாயெண்ணை அதற்கப்பா
விருப்பது வேப்பெண்ணை மதுரா

பார்க்கணக்கரிந்தோர்களே பணத்துக்
கிலுப்பெண்ணை ரெண்டுபடி
திரவரிந்த பெரியோரே
செப்பினேன்தப்பல்ல உள்ளபடி மதுரா

வீசைக்கணக்கரிந்தோர்களே வேப்பெண்ணை
வோர்பலம் கால்பணந்தான்
ஆசையாகசொன்னதல்ல விலை
அப்பாலேவித்தது யிப்படிதான் மதுரா

மணங்குகணக் கரிந்தோர்
மணிலாயெண்ணை மயில்பணம்
வணங்கிபயந்துநான் சொல்குரேன்
வார்த்தைகள்ரெண்டல்ல நிக்ஷயந்தான் மதுரா

முத்தெண்ணைவித்தபின் கேழ்க்குரீர்
மூன்றுபலந்தா னிருக்குதம்மா
சுத்தகிரைய மொருபணம்
சூதல்லவாதல்ல தாருமம்மா மதுரா

வாணியன்சொல்-கவி.

கண்ணனோடாடுஞ்சூல கபாலியுன்னருளினாலே
எண்ணைகளெல்லாம்வித்து யின்பங்களானேனம்மா
கின்னேநான்கோரிப்போன நிலையதுபோலேயானும்
இன்னுநானுனக்குத்தீப மெரிந்திடயேத்துவேனே.

வாணியன்சொல்-வசனம்.

முக்கண்ணனோடு நிர்த்தனஞ் செய்யாநின்ற சூலகபாலியே உன்கிருபையினாலே யென்யெண்ணைகளெல்லாம்விற்று மனக்களிப்பையடைந்தேன் உனக்கு நான சொல்லிய பிரார்த்தனைப்படி நடத்துகிரேன் ஓ சூலகபாலியே.

வாணியன்சொல்-தரு.

திருப்பரங்குன்றம்வாழ் தெய்வகாளிகோயில்கண்டேன்
யென்விருப்பங்கள்நீங்கியே வேணசிலாக்கியம்கொண்டேன்
நதியிலிரங்கியே நானும்ஸ்தானபானம்செய்தேன்
கிட்டயெதிரில்னந்த வனம்யேகியேபுஷ்பம்கொய்தேன்
நேரமாகுமுன்னம் நிமலியைபூசிப்பேனேடி
யெதிரில்யாரோகதவை யடைத்துமண்ணறைந்தார்மூடி
மூடுங்கதவையுடைத்து அப்பாலெடுத்தெரிந்தேன்
மனம்வாடுமுக்கண்ணியாள் பாதத்தில்புஷ்பமும்சொரிந்தேன்
ஆயிரம்விளக்கினில் அன்பாகயெண்ணையைவாத்திட்டேன்
வார்த்துபேயுமழைமின்னல்போல பிரகாசமாயேத்திட்டேன்
தினகரன்னின்று திகைப்பதுபோலொளியாச்சுதே
யெந்தன்மனதிலெண்ணப்படி வைத்திடவேயிருள்போச்சுதே

வாணியன்சொல்-கலிப்பா.

செங்கன்மாவிட தங்கையே
யிங்கிதசிங்கவாகனி தீபமுமேற்றினேன்
கங்குல்வந்தென்னைக் கப்பிடாமுன்னமே
பொங்கரமாய்மனைப் போகநான்வேணுமே.

வாணியன்சொல்-வசனம்.

ஓ சூலகபாலியே அடியேன் அரண்மனைப்போய்சேரவேணும் கங்குலாகியயிருள் மூடாமுன்னம் உன்திருமுடியில் ஏர்வாச்சுதாரும் தாயே.

பொது கவி.

கணீலெனநடனமாடும் காளிசன்னதிபிலெங்கும்
அணியணியாகதீபம் அலங்கரித்திருக்கும்போது
நுணிபிருப்பரிகைமீதி லுலவியபாண்டியன்கண்டு
துணிவிலாசித்தமாகி சொல்லிவாய்மெல்லுவானே

பொது வசனம.

இப்படியாக காளிகாதேவி சன்னதியில் நிரையதீபம்யெரிய உப்பரிகைமீதில் உலாவியிருந்தபாண்டியன் தீபத்தைக்கண்டுயிரண்டு கண்ணிலும் அக்கினிபொரிபரக்க ஆருக்கோபத்துடன் மந்திரிகளைப்பார்த்து சொல்லுகிர விதங்காண்க.

பாண்டியன் சொல் தரு.

மதிமந்ரிமார்களேவாரீர் — காளி
மண்டபம்மதில்தீபம்பாரீர்
சதிகாரிநீலியாள்சன்னதி — வழியைநான்
தடுத்தேனேகெடுத்தேனே யெடுத்தேனேவிடுத்தேனே மதி

பகையானசூலிக்கு — நகைப்பாகப்போச்சுதே
பாங்காகதீபமும் — வோங்கவுமாச்சுதே
பாழாச்சேதாழாச்சே — பலமாச்சேநலமாச்சே மதி

குலத்தைவிளங்கவோர் — குழந்தையளிக்காமல்
பலயடக்கியபாலி — களிக்காமல்
பறைசாத்திநேன்குரைமாத்திநேன் நிரைவிளக்கரியஅரியவும்

பூசையும்புஷ்பமும் — பொங்கலுமாச்சுதே
ஆசையும்ஆண்மையும் — அதிகமாய்போச்சுதே
அழிக்குரேன்ஒழிக்குரேன் — ஆத்துரேன்மாத்துரேன் மதி

பாண்டியன் சொல் கவி.

ஆக்கினைக்கடந்துமீரிஅகத்தினால் விளக்குவைத்த
போக்கிரியலைத்தேடி புலமுடனரிந்துகட்டி
தூக்கியேநொடியிலிங்கே துரிதமாய்வருவதற்கு
சீக்கிரமுடனிரண்டு சேகுவரேகுவீரே.

பாண்டியன் சொல் வசனம்

வாருங்கள்சேவகமாரேநம்முடைய ஆக்கினைக்கடந்து தானென்றகெர்வத்தினால் விளக்குவைத்தவன் யின்னானென்றறிந்து பிடித்துவாருங்கோள் சேவுகரே.

சேவகர் சொல் கவி.

சாத்திங்கதவுடைத்தாய் சர்க்கரைப்பொங்கலிட்டாய்
யேத்தியேவிளக்குவைத்தாய் யிருகரம்குவித்துநின்றாய்
ஆத்திரமாசுதிப்போ யாரிடமொழியால்செய்தாய்
சேத்துன்னைகட்டாய்முன்னே தெரியவேவுரைசெய்வாயே.

சேவகர்சொல்-வசனம்.

வாரும்பிள்ளாய் திருடனே யெங்களரசன் பாண்டியராசன் முத்திரித்தகதவை வுடைத்தாய் நிரையவிளக்கேத்திவைத்து பொங்கவிட்டு துதிக்கிராய் யிதுகளெல்லாம் யாருடைய உத்திரவின்பேரில் செய்தாய் சொல்லும் பிள்ளாய் திருடனே.

வாணியன்சொல்-கவி

செப்புவாயென்றுரைத்த சேவுகமாரேகேளீர்
ஒப்பவாபோரீர்யானும் உரைத்திடுமொழிகளெல்லாம்
எப்போதும்போலேநானும் யேத்தியேவிளக்குவைத்தேன்
தப்பிதமென்றுரைக்க சரீரமுநடுங்குதையா.

வாணியன்சொல்-வசனம்.

கேளுங்கள் சேவுகமார்களே யெப்போதும் விளக்கேத்துகிர பாவனையாய் நான் யேத்தினேன் நீங்கள்சொல்லாநின்ற வார்த்தையினாலே யென்சரீரம் நடுங்குது நானென்ன செய்வேன் சேவுகமார்களே.

சேவுகர்சொல்-கவி.

அப்படியாகில் யிப்படியேநாம்
கைப்பிடியாக நெக்கிடுவோமே.

சேவுகர்சொல்-வசனம்.

வாரும் அண்ணமார்களே யிவனைக் கைப்பிடியாகப்பிடித்து நமது அரசன் முன்னேவிடுவோம் அண்ணமார்களே.

சேவுகர்சொல்-கவி.

கொற்றவாநீரும் கூரியப்படியே
குற்றவாளிதோபார் கொண்டுவந்தோமே.

சேவுகர்சொல்-வசனம்.

சரணம் சரணம் ருஜாதிராஜனே கோவிலில் விளக்குவைத்த திருடனை யிதோபிடித்துவந்தோம் மகாருஜனே.

பாண்டியன் சொல்-கவி.

மண்ணெடுத்தறைந்துமோதி வடைத்திடுங்கதவையென்ன
யென்னத்தினாலுடைத்தாய் யேகவப்புரமெரித்தாய்
கிண்ணத்திலெண்ணெமொண்டாய் கேளாமல்தீபம்வைத்தாய்
கண்ணியாள்மெய்ப்பதானுய் கருத்தைநுனரிகிலேனே.

பாண்டியன்சொல்-வசனம்.

வாரும்பிள்ளாய் திருடனே நான் காளிசன்னதியை மூடிமுத்தரித்திருக்க யென்னுயெண்ணங்கொண்டு முத்தரையை யுடைத்து ஆலயம்நிறையவிளக்கேத்தினாய் சொல்லும்பிள்ளாய் திருடனே.

வாணிய்ன்சொல்-கவி.

மதத்தினாலேத்தவில்லை வாண்மையாலுடைக்கவில்லை
விதத்தையுமரியச்சொல்வேன் வேந்தனேகாளியாட்க்கு

மிதத்துடன்யெண்ணெவித்தால் விளக்கதுவைப்பேனென்ற
உரைப்படியேத்திவைத்தேன் உண்மைவேரில்லேதானே.

வாணியன்சொல்-வசனம்.

சரணம் சரணம் பாண்டியமகாராஜனே யென்னுடைய கெருவத்தினல் நான் விளக்கேத்தவில்லே யென்யெண்ணேவிலேயானல் ஆயிரம் திருவிளக்கு யேத்துகிரேனென்று பிரார்த்தித்துக்கொண்டேன்யென்யெண்ணேவிலேயாகிவிட்டது ஆகையால்யென்கோரிக்கைப்போல் உம்மிட முத்திரையென்றறியாமல்விளக்கேத்தினேன் நானென்னசெய்வேன் மகாராஜனே.

பாண்டியன் சொல்-விருத்தம்.

யெத்திசையுமரிந்திடவே பரைகள்சாத்தி
யேகுமவள்வழியடைத்து மண்ணரைந்து
முத்திரைகளிட்டுவிளக் கவித்துபூசை
முழுதுளதுமொழிந்திருக்க வரியேனென்று
நெத்தியெலாமுடைத்தெடுத் தப்பாலெரிந்து
நிரையவிளக்கேத்திவைத்த கெருவிதன்னே
குத்திமயிர்பிடித்திழுத்து நீவிமுன்னே
கொல்லுவீர்கொன்றுபதில் சொல்லுவீரே,

பாண்டியன் சொல் வசனம்

வாருங்கள் சேவுகமாரே நாம் பட்டணமுழுதும் யாரும் காளிக்கி பூசைபுஷ்ப்பம் திருவிளக்கு முதலாகியதும் நடத்தக்கூடாதென்று தெரிவித்திருக்க நான் அரியேனென்று சொல்லாநின்ற கெருவியை அந்தகாளிக்கேபெலியிட்டு பதில்சொல்லும் சேவுகமாரே.

சேவகர் சொல் வசனம்

அப்படியேநல்லது மகாராஜனே.

வாணியன்புலம்பல் தரு.

நடவுமென்றெந்தனே அடிமேலடிக்குராரே
நானென்னபிழைசெய்தேன் சேவுகரே
முடவனேப்போலேநானும் விழிக்குரேநகப்பட்டு
முகத்திலிடிக்குரீரே சேவுகரே
க்ன்னமிட்டொருவரை சென்னித்துணித்தேனோநான்
கழுத்தையருக்கப்போரீர் சேவுகரே

யென்னுபிழைகள்செய்தேன் யென்றுவேந்தனுரைத்தார்
யேற்குமாயுங்களுக்கு சேவுகரே
திக்குத்திசையுங்காணேன் தெய்வமும்துணைகாணேன்
ஒன்மமழியலானேன் சேவுகரே
விக்கும்படிக்கோரினான் விமலிக்கிவிளக்கேத்தி
வீணாய்மடியலானேன் சேவுகரே
வணிகக்குலந்தழைக்க மணியரசன்வயத்தில்
வந்துதித்தேன்பழிக்காய் சேவுகரே
துணிக்கஅரசன்சொன்ன சேதிகள்கேட்டுயெம
தூதர்வந்திருக்குறார் சேவுகரே
பெந்தன்னுயிரொழிக்க வந்திவிளக்குவைத்தேன்
யிதுசரிதானோகுரு சங்கரியே
சொந்தயென்மனவியாள் தோகைவணிசமாது
துடிப்பாளேகேட்டவுடன் சங்கரியே
மங்கிமனம்கலங்கி பொங்கியுருகுவாளே
வாலிபக்காலமாச்சே சங்கரியே
கத்தியெடுக்குறாரே கனைத்துதுடிக்குராரே
கன்னிபதனமம்மா சங்கரியே
புத்திபழிந்துதம்மா பூவைபதனமம்மா
போகுரேன்யெமலோகம் சங்கரியே
பங்கும்பங்காளிதொந்தம் வெங்கலப்பாரையிலே
யடுத்துயிர்விடப்போரேன் சங்கரியே
ஆதியில்யென்தலையில் அமைத்தப்படியேபிர்மன்
அழைக்குரான்யெமன்வந்து சங்கரியே
காதில்கேளாததுபோல் கழுத்தருக்கத்துணிந்தாய்
கலங்கிமாரிடிக்குதே சங்கரியே

சேவகர்சொல்-கவி.

சங்கரியென்றால்நம்மை தடுப்பளோவேண்டாமென்று
அங்கழும்துடிக்குதிப்போ ஆக்கினைப்படியேயானும்
மங்கவேமயிர்பிடித்தேதன் மாகாளிமுன்னேதம்பி
வெங்கலப்பாரைமீது வீசிடாய்சிரசைதானே.

சேவகர்சொல்-வசனம்.

வாரும்தம்பி யிவன்யின்றைக்கெல்லாம் சங்கரிசாமுண்டியெ ன்றால் நம்மை வேண்டாமென்று தடுப்பாளோ யிதோயிவனுடைய

குடுமையை யிழுத்துப் பிடித்துக்கொண்டேன் உன்கையிலிரானின்ற வாளுக்குயிரைவிடும் நமது அரசனிடத்தில் போய் சொல்லவேண்டும் தம்பி.

பொதுகவி.

வீசிடவென்றுசொல்ல விளையவனெகிரித்துள்ளி
கூசிடாதோடிவந்து குரிப்பிடனுத்துப்பார்த்து
பேசிவாய்மூடாமுன்னம் பிடித்தகைவாளினாலே
நாசிகளுடனேசென்னி நருக்கினான்நரிக்கினானே.

பொது வசனம்.

இப்படியாக சேவுகமார்வணிகனுடைய சிரசைதுணிக்க அந்த சிரசானது துள்ளி அம்மன் மடிமீதில்போய்விழ யிந்தசேதியை அரசனுக்குத் தெரிவிக்கும்படி வருகிறசமையத்தில் வணிகமாதானவள் காதிற்கேட்டு புலம்பிவருகிற விதங்காண்க.

வணிகமாது சொல்-கவி.

வீசியசேதிகாமும் வேந்தனுக்குரைப்போமென்று
பேசியேயேகும்போது பிரேதமுமானேன்பாரீ
கேசியால்மாண்டாரென்று கேழ்வியால்துயரமுற்று
பூசிபோலொண்டியாக புலம்பியேவருகின்றாளே.

வணிகமாதுபுலம்பல்-தரு.

அய்யய்யோவென்று செய்வேனானும்
ஆளனைபரிதந்து கூளியானேன்

நய்யுதைதயோமனம் முய்யுதைதயோயெந்தன்
நாதனையுங்கண்கள் தேடுதைதயோ
மதுரையிலேயெண்ணை விர்க்கவந்தமன்னன்
வாளினாலேமாள் நாளிதுவோ
புதுமையாகக்கூடி பேசுராரேகேழ்க்க
பொங்குதைதயோமனம் மங்குதைதயோ
பரிதிசென்றுபாதி நேறமாச்சேமாசி
பரவயெங்குமந்த காறமாச்சே
துரிதமுடன்செல்ல தடமுங்காணேன்வழி
தேடலானேன்தேடி வாடலானேன்
கட்டும்போதுமன்னன் கதரினாரேகத்தி
காட்டும்போதுமனம் பிதரினாரோ
வெட்டும்போதுயென்னை நினைந்திட்டாரோகத்தி
நீட்டும்போதுமனம் துணிந்திட்டாரோ
அடிக்கும்போதுதிரேகம் மொடிக்கினாரோஅவர்
அதட்டும்போதுபயந்து நடிங்கினாரோ
பிடிக்கும்போதுயென்னை யெண்ணினாரோமனதில்
பெண்ணேயென்றுநினைந்து குண்ணினாரோ
வணிகனென்றபேரு மழியலாச்சேகூட
மனவியானும்வந்து ஒழியலாச்சே
துணியலியேவயர் தணியலியேயங்கம்
துடிக்குதைதயோயெங்கும் நடுக்குதைதயோ

வணிகமாதுசொல்-கவி

யெங்கையும்தேடிப்பார்த்து யிரவினில்வருகும்போது
வெங்கலப்பாரைமீது வீசியேகிடக்குதங்கம்
பங்கனார்சென்னிதானும் பார்க்கவேஓடிதேடி
சங்கரிமடியில்கண்டு தயங்கியேபுலம்புவாளே

வணிகமாது சொல் வசனம்.

சர்வலோகதயாபரி யென்புருஷனை பெலிகொள்ளவேணுமென்று யெத்தனைநாள் காத்திருந்தாய் நானென்னசெய்வேனம்மா சூரசுங்கரியே.

OFFICE OF THE ... REGISTERED ... MADRAS

வணிகமாதுபுலம்பல் தரு.

யென்னும்திரீகொடுத்தாய் சூலியாரே-சென்னி
யேந்திமடிமீதெடுத்தாய் நீலியரே

மன்னவனுயிர்பரிக்க சூலியாரே-மனதில்
வர்மமெண்ணிகொன்ருயடி நீலியரே

வருஷமொன்ருகலியே சூலியாரே-யென்னை
மாலையிட்டுமூலைவைத்தார் நீலியரே

புருஷனைபலிகொடுத்து சூலியாரே-யிங்கே
பூவையிருந்தென்னபலன் நீலியரே

கணவனைபரிகொடுத்து சூலியாரே-யிங்கே
கன்னியிருந்தென்னசுகம் நீலியரே

மணவனைப்பரிகொடுத்து சூலியாரே-யிங்கே
மங்கையிருந்தென்னபலன் நீலியரே

பத்தாவைநாநிழந்து சூலியாரே-யிங்கு
பாரிலிருந்தென்னபலன் நீலியரே

கொத்தாயிருவரையும் சூலியரே-யிப்போ
கொன்றுபழிதீருமம்மா நீலியரே

பொது-வசனம்.

இப்படியாக வணிகமாதானவள் முரையிடும்போது காளிகா தேவிமனம்தாளாமல் நடந்த சேதியைஆதியோடந்தமாய் தெரிவிக்கவேண்டுமென்று வணிகமாதுமுன்பாக பிரசன்னமாய் வருகிர விதங்காண்க.

காளிகாதேவிவருகிர-கவி.

மாரணமானேன்சென்னி மடிதனிலேந்திநின்ற
காரணக்கதைகள்தன்னை கன்னியர்க்குரைப்பதாக
ஆரணமனதாய்சிங்கப் புரவியின்மீதிலேரி
நாரணன்தங்கையாளும் நாடியேவருகின்ருளே.

காளியம்மன்வருகிர-தரு ஆனந்தக்களிப்பு.

மாதரிவீரியிதோவந்தாள் சிங்கவாகனமிதேரி
வருமருள்நேராய் மாதரி
ஆதரவுசொல்லிடவேபூராய் வந்தாள்
அஞ்சாதேயென்றுகை யமத்தியேசீராய்-மாத

நவரத்னமவுலியதுசூட்டி அதில்
நலமானகலிக்கத்துரு பலமாகநாட்டி
புவனம்கலங்கிடவில்பூட்டி மயிடனை
பொலிகொண்டபூதப் பிசாசுகளைகூட்டி-மாத

சிங்கப்பல்தன்னைக்கடித்து நீண்ட
செஞ்சடைதொங்காமல் சீராய்முடித்து
சங்கரனோடுநடித்து கையில்
தாங்கியசூலகபாலம்பிடித்து மாதரி

தங்கவளைகைதன்னிலாட காலில்
தண்டைச்சிலம்பு கலீலென்றுபாட
நங்கையர்நின்றெதிராட யெங்கும்
நமரிமேளதாளம் குமிரியேசாட-மாதரி

பலவிதப்பணி யாரமுங்குட்டியே
நலமுளகொங்கையில் ரவிக்கையுமாட்டியே-தர்தா

கோவிலங்கிசொல் கவி.

மங்களமான தாதி மார்களேசொல்லக்கேளீர்
திங்களும்பத்துஞ்சென்று செனித்திடுமதலையாலே
அங்கமும்வெயர்த்துயென்தன் அடிவயர்நோகுதம்மா
யெங்கையும்போகாதென்தன் யிடுப்பினைபிடித்திடீரே.

கோவிலங்கிசொல்-வசனம்.

வாருங்கள்யெனது அன்புபிரியமுள்ள தாதிமார்களே எனக்கு வயரானது நோகுது நீங்கள் யென்னைவிட்டு யெங்கையும் போகாதீர்கள் யெனது தாதிமார்களே.

கோவிலங்கி சொல்-தரு.

தாளவசம்சொல்லுங்கடி அம்மம்மாயினி
மீளநிசமில்லையடி
தாளவசம்சொல்லுமம்மா தையலேயெனக்குசும்மா
வாளதுபோல்யென்வயத்தில் வாட்டுதேநானென்னசெய்வேன்-தா

பக்கம்புண்ணாய்நோகுதடி யெந்தனுடைய
பழுவெலும்பொடியுதடி
உட்க்காந்திருப்போமென்றால் உளைக்குதேநானென்னசெய்வேன்
நிக்காதெனையெடுத்து நிருத்திபிடித்திடுங்கள்-தாளவ

கோத்துயிழுப்பதுபோல் ஓயாமலென்தன்
குலையைவலிக்குதடி
பார்த்துயிருக்கலாமா பதைத்துதுடிக்கலாமா
வேர்த்துஉடலமுங்கண் பூர்த்துயிருளலாமா-தாள

சுத்தியுலகமெல்லாம் கரகரவென்று
சுழலுதேநானென்னசெய்வேன்
கத்திரிக்கோலாலே கத்திரிப்பதுபோல
புத்திமயங்குதடி பிழைப்பனோயினிமேலே-தாள

சேடியரேவாடியிங்கே போகாதேயெங்கும்
சிலுக்குதேயென்னுடம்பே

ஓடிஓடிவயற்றில் உருளுதேபிரளுதே
கூடியகாலந்தானே கூத்தன்போலேகாணுதே-தாள
அம்புவிழிமாதர்களா பிடையில்கட்டும்
ஆடைநழுகுதடி
தும்பிபரப்பதுபோல் சுத்துதடிதலையை
தென்புடன்பார்க்கவொன்றும் தெரியலேயேநிலயே-தாள்

கோவிலங்கி சொல்-கவி.

பெருத்திடுமிந்த பிரயாசைதானேன்
மருத்துவமாதை வழைத்திடுவீரே.

கோவிலங்கி சொல்-வசனம்.

வாருங்கள்தாதிமார்களே யென்வயர் வேதனைபொருக்க முடியாது மருத்துவக்கிழவியை அழைத்துவாருங்கள் தாதிமார்களே.

மருத்துவக்கிழவி வருகிர கவி.

தாதியர்மொழியைக்கேட்டு தள்ளாடிதடியையூணி
சேதிகளறிவோமென்று சிவ்வெனவெழுந்திருந்து
கோதியேநரைத்தகூந்தல் கூனுடன்குனிந்துபட்டண
வீதிகளெல்லாம்தாண்டி விருத்தியும்வருகின்றாளே.

மருத்துவக்கிழவிவருகிர-தரு.

கிழவிவந்தாளே மருத்துவக்
கிழவிவந்தாளே
கிழவிவந்தாளெந்தக் கெத்துமறிந்தவள்
விழவிழப்பிள்ளை பிழுக்கத்தெரிந்தவள்-கிழவி

பறித்திபோலான நரைத்ததலையுடன்
கருத்தமுகத்தைக் கழுகாதுருசுடன்-கிழவி

கூனுமுதுகுடன் கோட்டுவாயிட்டவள்
வானுலகெங்கும் மருத்துவப்பட்டவள்-கிழவி

தோனுநரம்பெங்கும் தொங்கியிழுக்கவே
கோனும்யெடுக்க நடக்கவழுக்கவே-கிழவி

கோவிலங்கி சொல்-அகவல்.

என்னென்றுசொல்வேன் யென்னிடத்தாயே
முன்னையான்செய்த மூழ்வினைப்பயனோ

மைந்தனில்லாமல் மன்னனும்யானும்
சிந்தையில்றெம்ப துயரமதாகி
யெப்படியோயென் றிருந்திடும்நாளில்
செப்பினர்காளி திருப்பணிமுதலாய்
வேலைகள்செய்து விளக்கதுவைப்பேன்
பாலனைதந்திடு பருபரியென்று
கோரியும்சிலநாள் குழந்தையில்லாமல்
சிரியேமன்னன் சேவகருலே
சாத்தியேகதவை தாப்பாளிருக்கி
சேத்தினல்மோதி திரவாமல்செய்தார்
மாயமதாயென் வயரினிலம்மா
செய்வந்துதித்து திருவுதென்னுடலை
உட்காந்திருக்க உளைக்குதுமுதுகை
நிக்கவோவென்றால் நெடுமேச்செரியுது
நடப்போமென்றால் நாவதுவரளுது
படுப்போமென்றால் பாம்பாய்புரளுது
கத்திரிக்கோலால் கத்திரிப்பதுபோல்
முற்றிலுமாறை முரிக்குதென்னடி
அடிவயர்தன்னில் அனிந்திடும்புண்ணாய்
மூடியவேவொனுந்து முட்டுதென்செய்வேன்.

மருத்துவக்கிழவிசொல்-கவி.

கோரடியுந்தன் குலதெய்வமெல்லாம்
வீசிடப்பிள்ளை வீழ்ந்திடுமம்மா.

மருத்துவக்கிழவி சொல்-வசனம்.

அடிவாடி பேத்தி உன்குலதேவதையெல்லாம் நினைத்து கோரிக்கொள் வாதையில்லாமல் குழந்தை பிரக்குமடிபேத்தி.

கோவிலங்கி சொல்-கவி.

அரைவதுபோல அன்புடனீங்கள்
நிறைநாழிவைத்து நினைத்திடுவீரே.

கோவிலங்கிசொல்-வசனம்.

அடிவாடிபாட்டி நீ சொன்னதுபோல் நிறைநாழிவைத்து பிரார்த்தனை செய்யடி பாட்டி.

மருத்துவக்கிழவிசொல்-கவி.

வருந்தியபோதுமாது வயத்தினிலிருந்தகெர்ப்பம்
திருந்தியமாலைபூண்டு செஞ்சிலம்பதுவுங்கூட
யிருந்திடுமணிவோர்காண யிடதுகைசெப்போடேந்தி
பொருந்தியவடிவோடிந்த புத்திரிபுரந்ததம்மா.

மருத்துவக்கிழவிசொல்-வசனம்.

இப்படியாகமருத்துவமாது பிரார்த்திக்க சொக்கனுதர்கிருபையால் கழுத்தில்மாலையும் காலிற்சிலம்பும் கையில்செப்போடுடன்புத்திரியாய்பிரக்க அதை கோவிலங்கிகண்டு மகிக்ஷியாயெடுத்து வருகிறவிதங்காண்க.

கோவிலங்கிசொல்-தரு.

புத்திரியுதித்ததம்மா யெனக்குவொரு
புத்திரியுதித்ததம்மா

புத்திரியுதித்ததம்மா சித்திரப்பதுமைபோல
யெத்திசையிலுள்ளமாதர் யேங்கிடுவாரினிமேலே-புத்தி

யிடதுகையில்செப்போடு யேந்தயாவரரிய
திடமாயுதித்தாளிந்த தேன்மொழியாள்சிரிய-புத்தி

வலதுகாலில்செஞ்சிலம்பு வானுலோகமதிக்க
குலமிதுமேலோங்கி குண்ணுமலேகதிக்க-புத்தி

யெழுத்தைதினைந்துபத்து மாதம்சுமந்துபெற்றேன்
கழுத்தில்கொடியைக்கண்ணில் காணமனதுஅற்றேன்-புத்தி

கோவிலங்கி சொல் கவி

வடிவினில்மிகுதியான மாதரேசொல்லக்கேளீர்
படிதனையாளும்வேந்தன் பாண்டியராஜருக்கு
நொடியினிலோடிநீங்கள் உத்தமசேதியாக
குடிபதுவிளங்கவந்தாள் குமாரியென்றுரைசெய்வீரே

கோவிலங்கிசொல்-வசனம்.

வாருங்கள் அழகுநிறைந்ததாதிமார்களே படியாகியபூமியைஅரசாக்ஷிசெய்துவரும் யென்பிராணபதமாயிருகின்றபாண்டியமகாராஜருக்குநீங்கள்போய் கோத்திரம்விளங்கும்படியான குமாரத்தியுதித்தாளென்று உரைசெய்து வாருங்கோள் தாதிமார்களே.

தாதிகள்சொல்-கவி

எத்திசைபுகழுகின்ற யிராஜனேசரணங்கேளீர்
புத்திகள்சிதரவேண்டாம் பூவையாளிருந்தகெர்ப்பம்
சுத்தியும்கொடியும்காவில் சிலம்புடன்செப்போடேந்தி
சித்திரப்பதுமையாக செல்விவந்துதித்தாளையா.

தாதிகள்சொல் வசனம்.

சரணம் சரணமையாபாண்டியராஜனே யிந்தயிரேழுலகம் புகழும்படியாக ஓர்புத்திரியானவள்வந்து உதித்தாள்தங்களுக்குதெரியும்படி சொல்லவந்தோம் மகாராஜனே.

பாண்டியன்சொல் கவி.

வஞ்சியருரைத்தவார்த்தை மனமதுகளித்தேனப்பா
மஞ்சைகள்பரிதேசிக்கும் பாடியகவியோருக்கும்
சஞ்சலந்திரரொம்ப தனங்களைவாரிவாரி
கெஞ்சதுபோலேதந்து நீங்களும்வருகுவீரே

பாண்டியன்சொல் வசனம்.

வாருங்களப்பா மந்திரிமார்களே நமதுகுலம் விளங்கும்படியான ஓர்குமாரிபிரந்திருப்பதினால் நமதுதிரைகோவில்சென்று யேழைபரிதேசிகவியோர்கள் மனமகிழ்ஷியடையும்படியாக அவரவா

ள்களிக்கும்படியான திரவியங்களை வாரிவாரி உங்கள் மனதுபோல் கொடுத்து வாருங்கள் மந்திரிமார்களே.

மந்திரிகள் சொல் கவி

உத்தரப்படியேயிங்கே ஓடியேவந்தபேர்க்கு
பத்தியாய்நிர்க்கவைத்து பரிவுடன்தனங்கள்தந்தோம்
பெத்துசந்தோஷமாக பெருமையாயேகிறார்கள்
மைத்ததைமுத்தரித்து வைத்திங்கேவந்தோமையா.

மந்திரிகள்சொல்-வசனம்.

கேளும் பாண்டியமகாராஜனே தங்களுத்தாரப்படிக்கு அவாளவாளுக்குமனமகிழும்படி தனங்கொடுத்து வந்தோம்மகாராஜனே.

பாண்டியன்சொல்-கவி.

போதவேயளித்தோமென்று புகலுமந்திரிகள்யென்பெண்
சாதகம்பார்க்கவேண்டும் சடுதியிஜோடிநீங்கள்
காதலாயரசனும்மை கடுகெனவழைத்தாரென்று
வேதியர்தன்னையிங்கே வினவியேயழைத்துவாராய்.

பாண்டியன் சொல்-வசனம்.

வாருங்கள் யெனதுமந்திரிமார்களே நமதுகுமாரத்தியினுடைய ஜாதகம் பார்க்கவேண்டும் வேதியருகிய பிருமணனை அதிசீக்கிரமாய் அழைத்து வாருங்கள் மந்திரிமார்களே.

பொது-வசனம்.

அகோதெப்படி யென்றால் பாண்டியராஜனே காணும்படியாய் வேதியர் வருகிற விதங்காண்க.

பிராமணுள்வருகிற-கவி.

சிருடன்நெத்திமீதில் சிரக்கவெண்ணீருபூசி
மாரினில்பூநூலாட வணைந்துபட்டஞ்சிசோமன்
தாருடகனிதசாஸ்திரம் சயந்தனிலெடுத்துக்கொண்டு
பூருவகலையளித்த புரோகிதர்வருகின்றாரே.

பிராமணர்வருகிர-தரு.

வேதியரனவோர்கூடி விபரமரியநாடி
சோதியாய்வெண்ணீறிலங்கவே பஞ்சாங்கியோர்கள்
துருசுடநடந்துவாருரே
முடியுங்கார்க்கூந்தலாட முப்புரிமார்பினிலாட
சுப்பய்யாடவுமென்றுமே பஞ்சாங்கியோர்கள்
சொகுசுடநடந்துவாருரே
ராமாகோவிந்தாரங்கா நாராயணாவாடாயேக
தாமதம்செய்யாதேயென்றுமே பஞ்சாங்கியோர்கள்
சல்தியாய்நடந்துவாருரே
பாருளும்பாண்டியராஜன் பகருவான்குணவிலாசன்
வாருய்வாருய்யென்றுபேசியே பஞ்சாங்கியோர்கள்
வாசன்முன்னே வந்துமேவிநார்

பாண்டியன்சொல்-கவி.

அந்தணரனவோர் வந்ததேயாகில்
குந்திடபீடம் தந்திடுவீரே.

பாண்டியன்சொல்-வசனம்.

வாருங்கள் மந்திரிமார்களே பிறமணாள் வந்தவுடனே குந்திடும் படியாய் பொற்பீடம் கொடுங்கள் மந்திரிமார்களே.

பாண்டியன்சொல்-கவி.

மறையவரனவோருங்கள் மலரடிபோற்றிபோற்றி
யிறையவன்செயலினாலே யெந்தனுக்குத்ததோர்பெண்
தறையினிலுதித்தவேளை தகும்தகாதென்றுநீங்கள்
குறைவிலாதிருக்குமானல் கூருவீரரியத்தானே.

பாண்டியன் சொல்-வசனம்.

கேளும் பிராமணுளே யெங்களுடைய வம்சம் பெயரோங்கயோர்பெண்குழந்தை உதித்திருப்பது ஆகையால் அது உதித்தவேளை நன்றாயிருப்பதும் யில்லாததும் அரிந்துயெனக்கு தெரியச்சொல்லுங்கோள் பிராமணர்களே.

பிராமணர்சொல்-தரு.

சாஸ்த்திரம்பார்ப்போமே அரசனே
சரியாயுரைப்போமே

சாஸ்த்திரம்பார்த்திட சந்தேகம்தோணுது
ஆஸ்த்திகளெல்லா மழிந்திடக்காணுது-சாஸ்

காலில்செஞ்சிலம்பு கையில்செப்போடடன்
நீயியுதிக்கவே நேர்ந்ததுகேடுடன்-சாஸ்

கொடிசுத்திவந்தால் குலமுந்துலங்காது
முடியிதன்மேலுனக் கென்றுமிலங்காது-சாஸ்

மாலையிருக்குது மதுரைக்கடுக்காது
பாலைநிலத்தைப்போல் ஆகும்விடுக்காது-சாஸ்

பாண்டியன்சொல்-கவி.

மைந்தர்களில்லாத்தாலே மனமெலிந்திருந்தேனிப்போ
சந்ததியுதித்ததென்று சாஸ்த்திரம்பாருமென்ன
நிந்தையாய்மதுரைநாடு நீலியாலழியுமென்று
அந்தணருரைத்தாரிந்த அவதிகட்கென்னசெய்வேன்.

பாண்டியன்சொல்-வசனம்.

அரகரா மகாதேவா கர்த்தனேகைலாசவாசா யெனக்கு அருமையாய்யோர் குமாரிபிரக்க சாஸ்த்திரிகள் யிந்தபட்டணம் அழிந்து போகுமென்றுரே யிந்தவிதிக்கென்னசெய்வேன் தெய்வமே.

பாண்டியன் புலம்பல்-தரு.

எப்படிமனங்கொள்ளுவேன் அந்தணர்மொழி
யெவ்விதமாய்தள்ளுவேன்
யெப்படிமனங்கொள்ளும் யினிமதுரையையாள
செப்பியமறையவர் சேதியாகுமோநீள-யெப்
மதுரையரசாண்டிட யெனக்குபின்
மணிமுடியும்பூண்டிட
புதுமையாய்புத்திரி புரந்தாளென்றிருந்தேனே
யிதுவுமனக்குறை யாகப்பொருந்தேனே-எப்ப
ரஞ்சிதப்புத்திரியாள் முடிபூண்டு
நாடாளும்கூடித்திரியாள்
செஞ்சிலம்புங்கைச் செப்போடுமாகாதென்றார்
பஞ்சாய்பரந்திடப் பார்வீண்போகாதென்றார்-எப்ப

பிருமணாள்சொல்-கவி.

சாஸ்த்திரம்பார்த்தோமென்ற சஞ்சலம்வேண்டாமிப்போ
சூஸ்த்திரமாகவொன்று சொல்குரோம்கேளுன்செங்கோல்
நாஸ்த்தியாபோகாமுன்னம் நங்கையைபேழைதன்னில்
வாஸ்த்துவமாகவைத்து வைகையில்விடுகநன்றே.

பிருமணாள்சொல்-வசனம்.

வாரும் ஓ பாண்டியமகாராஜனே நீர் சாஸ்த்திரம்பார்த்து விசனப்படவேண்டியதில்லை ஒருபெரிய பேழையில் உன் குமாரியை வைத்து வைகையில் விட்டுவிட்டால் அந்ததோஷம் நிவர்த்தியாய் விடும் மகாராஜனே.

பாண்டியன்சொல்-கவி.

மந்திரிமாரேமறையோர் வாக்குபோல்யேகியானும்
செந்திருவுக்கொப்பான தேவிகோவிலங்கிதன்னை
சந்ததிகேட்டுவாங்கி சகலமுமுறைத்துநன்றாய்
நிந்தனையொழித்துவாரேன் நீங்களிங்கிருந்திடீரே.

பாண்டியன்சொல்-வசனம்.

வாருங்கள் மந்திரிமார்களே யென்தேவியாளிடத்தில் சென்று புத்திரியை வாங்கிவருகிரேன்நீங்கள் யிவ்விடத்திலேதானே யிருங் கோளப்பா மந்திரிமார்களே.

பாண்டியன் மனைவிக்குசொல்-கொச்சகம்.

பத்தினிகோவிலங்கியேகேள் பாலகியாளுன்வயுத்தில்
சுத்தகொடிமாலைவற தோஷமென்றுமாமறையோர்
புத்திரியைபேழைவைத்து பேரடுமென்றூர்வைகையிலே
சத்தியமாய்கேட்டுவந்தேன் தந்திடுவாய்பெண்மயிலே

பாண்டியன் சொல்-வசனம்.

கேளும் பெண்ணுபிராணநாயகி நமது குமாரிபிறந்ததை ஜோசியம்பார்க்க மாலைகொடிசுத்திவந்தபடியால் ஒருபேழையில் குமாரியைவைத்து வைகையில் விட்டுவிட்டால் அந்ததோஷம் நிவர்த்தியாகும் அப்படிக்கு விடாவிட்டால் நமது பட்டணம் அழிந்துவிடுமென்றூர்கள் நான் உண்மையாகக்கேட்டுவந்தேன் புத்திரியைத்தாரும் பிராணநாயகி.

கோவிலங்கி சொல்-கவி.

தாருமென்றுரைத்தவார்த்தை தையலுங்காதில்கேட்டு
மாருமாரென்றுமோதி மகள்தனையெடுத்துகையில்
பாரும்நீவடிவேயென்று பலவிதசிந்தையாகி
தூருபோல்மண்ணில்வீழ்ந்து தோகையும்புலம்புவாளே.

கோவிலங்கி சொல்-வசனம்.

அய்யய்யோ தெய்வமே நான் தவமாதவமிருந்துபெற்ற குறயோ அல்லது யென்வயர்செய்ததீவினையோ யென்பிராணேசர்வந்து கேட்க்குராரே யிதர்க்கென்ன செய்வேன் தெய்வமே.

கோவிலங்கி புலம்பல்-தரு.

தவமாய்தவமிருக்க	சிவநருளால்ஜெனிக்க
சலிப்பெல்லாம்கெலிப்பானேன்	யென்மகளே
குவலயமுமதிக்க	குமாரியேநீயுதிக்க
குறித்துசாதகம்பார்க்க	யென்மகளே
கொடிசுத்திநீபிறக்க	முடியனர்த்தம்பரக்க
கூருதாம்ஜோசியத்தில்	யென்மகளே
வடிவழகியேயுன்னை	வைகையில்விடயென்னை
வந்துகேழ்க்குரார்தந்தை	யென்மகளே
குடிப்பழுதாகத்தானே	படியிலுதித்தாய்மானே
கோவிலங்கிநானென்செய்வேன்	யென்மகளே

மடிந்துமடியாமலே பிடிந்தயர் துடிக்கவும்
பார்த்தாலும்பசிபோமே பார்வதியென்னலாமே
பாண்டியிறழிவாமே யென்மகளே
வார்த்தைகளாகிநீயும் வைகைதனிலேபோயும்
வலதழிவோ தாயும் யென்மகளே
கூவும்குயில்தொனிபோல் ஆனக்குமாரியேயுன்
கூக்குரலென்றுகேட்ப்பேன் யென்மகளே
அவுமுதகாதென்று சிந்தையில்வேணுமென்று
ஜெனித்தாயோநீயுமின்று யென்மகளே
செஞ்சிலம்பழகென்ன செப்போடொலிவுமென்ன
திலர்தபொட்டழகென்ன யென்மகளே
கொஞ்சிவிளையாடாமல் நெஞ்சில்கபடம்வைத்து
கோதையேயேகலாமா யென்மகளே
தூங்குமஞ்சமும்ஊஞ்சல் பாங்கியர்கள்கொஞ்சல்
தொலைத்துப்பேழைதனிலே யென்மகளே
பாங்குடனேபடுத்து தேங்கிடவேவிடுத்து
பாவிநீயேகலாமோ யென்மகளே
பத்துமாதம்சுமந்து பெத்தக்குறையோனொந்து
பாலகியுனைதந்து யென்மகளே
யித்துவீழ்ந்தருகுபோல் யொத்தப்பாவனையாகி
யெடுத்துக்கொடுக்கலானேன் யென்மகளே

கோவிலங்கி சொல் கொச்சகம்

பத்துதிங்கள்யான்சுமந்தேன் பாடவிதியால்மெலிந்தேன்
சித்திரம்போலீன்றெடுத்தேன் தேங்குவதையான்விடுத்தேன்
நத்தியிந்தநாளிருந்தேன் நானுமினியேபொருந்தேன்
புத்திரியாளேபிரிந்தேன் பிடிபிடியென்மன்னவரே

கோவிலங்கிசொல் வசனம்

வாரும் யெனது பிருணேசா தங்கள்மனதுபிரகாரம் குமாரியைதந்தேன் யெடுத்துக்கொள்ளும் பிராணேசா.

பாண்டியன் சொல் கவி.

வருகுவதரிந்துரைக்கும் மந்திரிமாரேகேளீர்
கருவினிலுதித்தயெந்தன் கண்பணிமகளைநீங்கள்

துளுசுட்ன்பேழைதன்னில் தூக்கியேயெடுத்துவைத்து
பெருகியவைகைவிட்டப் பின்புவந்துரைசெய்வீரே.

பாண்டியன்சொல்-வசனம்.

வாரும்யெனதன்புக்குரிய மந்திரிமார்களே ஒருமாணிக்கப்பெட்டியில் யென்குமாரியைவைத்து வைகையில்விட்டு யெனக்குவந்து பதில்சேதிசொல்லுங்கள் மந்திரிமார்களே.

பொது-கவி.

மங்கையைபேழையோடு வைகையில்விட்டபின்பு
கெங்கைகாவேரிநேராய் கிளப்பியேவருகும்போது
பங்காளம்போனகப்பல் பதில்சேதிகாணேமென்று
சிங்காரமுடன்மாணுக்கன் சேர்ந்துமாச்சோட்டிவாரார்.

பொது-வசனம்.

இவ்விதமாக பேழையைவைகையில்விட கெங்கையானவள்காவேரிவழியே யேந்திக்கொண்டுவர அந்தகாவேரிபட்டணத்தில் வாசமாயிருநின்றவணிகருகிய மாணுக்கன்மாச்சோட்டன் அத்தானும் மைத்துனருமாகையால் யிருவரும் கூட்டுபேரம் செய்தனுப்பியகப்பலானது யின்னம்வரக்காணேம் அதை அரியும்பொருட்டு யிருவரும் றேவுதுரைக்கு வருகிரவிதங்காண்க.

வணிகர்சொல்-கவி.

வணிகன்மாணுக்கன் மாச்சோட்டான்தானும்
வாடைபரிமளமணிந்து பாகைபூண்டு
பணிகள்துபலவிதமு மலங்கரித்து
பால்வெள்ளையானகுடை விரித்துயேந்தி
துணிவாகபலசரக்கு பேரஞ்செய்து
துலைதூரம்போனமறைக் கலத்தைக்காண
கணிதமுடன்றேவுதுரை தன்னைநாடி
கப்பல்யேபாரிகளும் வருகின்றாரே.

வணிகர்வருகிர-தரு.

வணிககுலமர்ஞக்கன் மாச்சோட்டானெனுங்கப்பல்
வியாபாரிவந்தனரே வெகுவேடிக்கையாக-வியாபா

பணியிலங்கிடமார்பில் பூனூல்தரித்து
பால்போல்வெண்குடைவிரித்து கண்கள்
பிணைப்புளபாகை யினிப்புடன்சிரம்பூண்டு
புன்னகையாய் சிரித்து-சுரு

பூமியிலேதன வான்கனவானென
நேமிதமானவ ரேவுகள்போவென-வணிக

சந்தணப்பொட்டிலங்க தரித்தவெண்ணீர்துலங்க
தண்டைச்சிலம்புகொஞ்சவே மெய்யில்
கந்தங்கதம்பம்வீச தந்தமொளிகண்கூச
காண்போர்களிப்பு மிஞ்சவே-சுரு

கச்சிதகுறடிறு காலிலொலித்திட
பச்சைக்கல்மோதிரம் பாங்காய்ஜொலித்திட-வ

கதிரொளிலுமதிக காந்திப்பிரகாசமுள்ள
கடுக்கன்காதினில்மாட்டி நல்ல
அதிவிதமுளப்பட்டு அங்கிநிஜாரணிந்து
ஆரங்களதில் பூட்டி சுரு

அத்தர்ப்புனுகுசவ் வாதுகள்வீசவே
பெத்திசையோரும்வந் நின்பமாய்பேசவே-வணிக

சந்தியாவந்தனைகள் காயேஸ்திரிபூசையும்
சாங்கியப்படிமுடித்து நல்ல
நந்தனன்பாடியைை சிந்தைதனில்தேடியாய்
நாடிநெரியாய் பிடித்து. சுரு
நருமலர்செண்பக வில்வமுஞ்சூடியே
யிருவரும் ஒருமன தாகவேகூடியே வணிக

மாச்சோட்டான்சொல் கவி

பங்காளசிமைநோக்கி பார்க்கவேபோனகப்பல்
பெங்கையும்சேதிகாணேம்யென்றும்நாம்வருகும்போது
செங்கையில்மிதந்துபேழை கிட்டியேயொதுங்கிநிர்க்க
மங்களமாயெடுத்தேன் மாமாநீபார்த்திடாயே.

மாச்சோட்டான்சொல் வசனம்.

ஆ-ஆ-வாரும் மாமாநாமிருவரும் வருகிரபோது யிதோயெதிரில் ஆற்றின் ஓரத்தில் ஒதிங்கிய்ஒருபேழை ஒன்றெடுத்தேன் பாரும் மாமாவே.

மாணக்கன்சொல் கவி

எடுத்திடும்பேழை யேதிதுமருகா
கொடுத்திடவேணும் கூரினேனெனக்கே

மாணக்கன் சொல் வசனம்

வாரும்தம்பி மருகனேநீயெடுத்தபேழையயெனக்கு கொடுத்திடவேணும் தம்பிமருகா.

மாச்சோட்டான் சொல் கவி.

அட்டிகளில்லை யானதால்மாமா
பெட்டியுளிருப்பது பேசினேன்யெனக்கே

மாச்சோட்டான் சொல் வசனம்

நான்யெடுத்த பேழையை கொடுக்க யாதொருதடையுமில்லை பேழையுள்ளேயிருப்பது யென்னிதுமாமா.

மாணக்கன் சொல் கவி.

சொல்லியப்படிநாம் சோதிக்கலாகும்
நல்லதுபேழை நாடிநீதிரவாய்

மாணுக்கன்சொல் வசனம்.

வாரும்தம்பி மருகா நீசொல்லியப்பிரகாரம் பேழையைத்திர வும் மருகனே

பொது கவி

திரந்திடுமென்றுசொன்ன சேதிபோலாகவோடி
கரந்தனிலெடுத்துபேழை கட்டுகளுடைத்துப்பார்க்க
புரந்தரன்மனவிமேலாய் பெட்டியிலிருக்கக்கண்டு
சிரந்திடுமனதாயிந்த சேய்தனைகொஞ்சுவானே

பொது-வசனம்.

இப்படியாக மாச்சோட்டானனவர் ஓடிபெட்டியைத்திரக்க அதில் கோடிசூரியப் பிரகாசம்போல் ஓர் பெண்குழந்தை யிருக்க க்கண்டு ஆசையுடனேயெடுத்து முத்தமிட்டு சொல்லுகிற விதங் காண்க.

மாச்சோட்டான்சொல்-தரு.

வாருங்காண்மாமா தன்னிருபம்
பாருவிண்போமா
வாருமிவட்கிணை வையகந்தனிலுண்டோ
கூருமெனக்கிது குடுப்பனையே துண்டோ-வாரு

ரதியெனுமிவளோ அல்லவென்றிந்
திருணியானவாளோ
நதிசூடிமருவிய நாயகிபோலிவள்
யெதிரிலகப்பட்டாளே பாக்கியசாலியிவள்-வாரு

அருந்ததிமானே குலதெய்வ
மானதிதானே
திருமகளோடுங்கள் தேவிவள்ளியாளோ
யுருவாகவந்து யொதுங்கியபெண்ணாளோ-வாரு

சிலம்பதனைப்பாரும் பிடதுகையில்
செப்போடிதன்பேரும்
தலமெதுவோகெங்கை தன்னில்மிதந்திங்கே
நலந்தரவேவந்த நாரணனார்தங்கை-வாரு

மாச்சோட்டான்சொல்-கவி.

கோடிதிரம்யெரக்தெரந்து குமாரியது
போலெனக்கு கிடைக்குமோதான்
தேடியெனக்காய்பிர்ம்மன் சிருஷ்ட்டித்த
சேய்தனைதந்ததுபோ லாகுதிப்போ
கூடியிருவோருமிந்த வைகைவிட்டு
கொஞ்சிமனக்களிப்புடனே விடுதிநோக்கி
நாடிடவேநங்கைதனை யெடுத்தேநீயும்
நடந்திடாய்மாமா நீ துடர்ந்திட்டாயே.

மாச்சோட்டான் சொல்-வசனம்.

வாரும் ஒய் மாமா நாம்செய்தபூசாபலமோபரமேஸ்வரியே உருவெடுத்ததுபோல் காணுது ஆகையால் யெத்தனை ஜெனனம் நாம் யெடுத்தபோதிலும் யிந்தபெண் நமக்கு கிடைக்குமோ கிடையாது காம்நமது அரண்மனைசென்று மருபடிவரலாம் வாரும் ஒய்மாமா.

மாணுக்கன் மாச்சோட்டான் சொல்-தரு.

எந்திமனங்களித்து வழி
யிருவருங்கூடிநடந்தனரே
காந்திக்கதிர்வீசிடாமல் யெதிர்
கைக்குடையேந்தி துடர்ந்தனரே
பங்காளம்போனகப்பல் சேதி
பாராமல்மாளிகைநாடினாரே
சிங்காரமாய்நகரம் கோர்த்து
ஷேமமென்றுனந்தம் பாடினாரே
சித்திரமுகச்சாவடி தாண்டினார்
தென்னைபிலாச்சோலை தான்கடந்தார்
சுத்திக்கதலிகமுகு யிருவர்
சூழ்ந்தமாஞ்சோலை வழியடந்தார்
செந்தாமறைமலரும் பொய்கை
தீர்ந்தமுந்தாண்டி சொலிப்புடனே
வந்தார்னந்தவனம் தாண்டியே
மாதங்கன்கோயில் மகிலிப்புடனே
குட்டுகள்தோப்பணங்கள் யிட்டவர்
கோடித்தவரிடருள்புரிவார்

நட்டுவர்வீதிவிட்டு வன்னியர்
நாடும்வீதியிலேவருவார்
செட்டிகள்வீதியிலே சொந்த
க்ஷத்திரமாணுக்கன் வந்துநின்றார்
பெட்டிநடந்தனரே மாச்சோட்டானும்
பேசிடக்காவலரை வாருமென்றார்

மாச்சோட்டான் சொல் கவி

வாரும்நீகாவலாய்கேள் வதிதுரிதங்களாக
சேருவாயரண்மனைக்குள் சேடியர்தங்களோடு
கூருவாய்மனைவியாளை கொழுநனுமழைத்தாரென்று
நேருடனுரைத்துநீயும் நிமிஷத்தில்வருகுவாயே

மாச்சோட்டான் சொல் வசனம்

வாரும் பிள்ளாய்காவலனே நமது அரண்மனைக்குள் நுழைந்து நாமழைத்ததாக வணிகமாது தாதியரிடத்தில் உரைசெய்து வாரும் பிள்ளாய்காவலனே.

வணிகமாது வருகிற கவி

சேடியர்மொழியைக்கேட்டு சேயிழைவணிகமாது
நாடியேகணவன்தன்னை நலமுடன்காணவென்று
சூடியேபணிகளெல்லாம் துயிலதுமுடித்துநன்றாய்
கூடியேசேடியோடு குலாவியேவருகின்றாளே

வணிகமாது வருகிற தரு

வாலைப்பருவமிஞ்சி ஞாலம்புகழும்நெஞ்சி
வணிககிரேன்மணிவாராள் ஸ்ரீங்காரமாக வணிக

சேலையிடையுடுத்தி திலர்தம்நெத்தியிலிட்டு
செவியில்பொன்னோலை மின்னவே
தங்கத்தாலேஒட்டியானம் பூட்டி,தண்டைகொலுசுமாட்டி
சசியெனமுகந் துன்னவே-சரு

ஷ்ாமரையிருபுரம் தாதியர்வீசவும்
வாய்தனில்தந்தங்கள் வரிசைகண்கூசவும்-வாலை

கைவளைகள்குலுங்க கண்ணிமைமைதீட்டி
கனகபூஷணமாடவே வெகு-ஒய்யாரமாய்
நடந்துஇங்கு மாளிக்கடந்து
உண்மைமனதில்நாட்டியே சரு

உத்தமிசர்க்குணி சித்தங்களித்தவள்
நித்தமும்சொர்ணங்கள் நேர்ந்தளித்தவன்-வாலை

கங்கணம்பீலிக்கொஞ்ச காணமின்னொளியஞ்ச
கணைபுருவங்கள்நெரித்து யெதிர்
சங்கீர்தராகம்பாட தாளமத்தளம்போட
தையலர்தாம்பூலந்தரித்து சரு

தத்தனிமொழியென வித்தகிவசனிகள்
சுத்தமாய்குயிலென தோன்றும்நடைமயிலென-வாலை

நத்துபுலாக்குதம் பாக்குமுகமிலங்க
நாணயமாயணிந்து மேலில்
கொத்துகொத்தாகமுத்து கோர்த்தசரமணிந்து
குன்றவில்லையைப்பணிந்து சரு

கோங்குமந்தாரை செந்தாமரைதேடியே
பாங்குடன்சிவனிரு பாதமுஞ்சூடியே-வாலை

வணிகமாது சொல்-கவி.

கொண்டலைப்பழித்தசெங்கை கோகனேயுந்தன்பாதம்
தெண்டமுஞ்செய்தேனுந்தன் திருவடிசிரமேற்கொண்டேன்
மண்டலமாதர்மெச்ச மாளியிலிருந்தயென்னை
கண்டிடயிங்கழைத்த காரியமுரைசெய்வீரே.

வணிகமாதுசொல்-வசனம்.

மேகத்தைப்பழித்த கரத்தையுடைய யெனது பிருணேசா உமது பாதாரகமலங்களில் தீர்க்கவந்தனம் அடியாளை யிவ்விடம் அழைப்பித்தகாரியம் யென்க்கு தெரியும்படிசொல்லும் யெனது பிருணேசா.

மாச்சோட்டான்சொல்-கவி.

அரையக்கேள்வைகையென்னும் ஆற்றிலோர்பேழைதன்னில்
நிறைமதிவதனப்பெண்ணே நேயமாயெடுத்துவந்தேன்
முரையுடநாமதேயம் மொழியும்கர்ன்னகியேயாகும்
குறையொன்றும்செய்திடாமல் குணமுடன்வளர்த்திடாயே.

மாச்சோட்டான்சொல்-வசனம்.

வாரும் யெனதுபிராணநாயகி யெனதுமாமாவும் யானும்தேவுதுரைக்குப் போகிரபோது வழியில்யிரர்னின்ற ஆத்தில் ஓர்பேழையில் யிந்தபெண்ணனது ஒதிங்கி யென்னிடத்திலகப்பட்டது யிதன் பெயரோகர்ன்னகியாகும் யிதையெடுத்து வளர்த்துவாரும் யெனது பிராணநாயகி.

பொது-கவி.

தாருமென்றெடுத்துமார்பில் தையலுமணைத்தாள்கொங்கை
பிருபிருகபாலும் பெருகவேபொசித்துநன்ருய்
வீருவீரென்ருகூவ மெல்லியைத்துடையில்வைத்து
சிருடனுரங்கத்தானே சிசுவைதாலாட்டுவாளே

பொது-வசனம்

இவ்விதமாக வணிகமாது குழந்தையையெடுத்து முத்தமிட்டு மார்பிலணைக்க யிரண்டு கொங்கையிலும் பால்பெருககுழந்தைக்குக் கொடுத்து கண்ணுரங்கும்படி தாலாட்டுகிர விதங்காண்க.

வணிகமாது சொல்-தரு தாலாட்டு

அருரோ ஆறரிரோ ஆறரிரோ ஆருரோ
சிரானகாவேரி செட்டியெனுமாச்சோட்டார்
பெருனோன்தன்மகளே பெண்மயிலேநித்திரைபோ ஆராரோ
பஞ்சவர்ன்னகிளியுனை பார்த்தவுடன்தெண்டநிதேம்
செஞ்சொல்மொழிகர்ன்கியே தேம்பாமல்நித்திரைபோ ஆரா

எத்திசையுமீடாமோ யிடதுகைசெப்போடு
பத்தினியான்பார்க்கவென்றல்பாவியென்கண்போதாதே ஆரா

வலதுகால்செஞ்சிலம்பு வானுலோகமீடாமோ
நலந்தருகவந்தவளே நாயகமேநித்திரைபோ ஆரா

மாச்சோட்டான் சொல் கவி

சோதியாய்பாகைசென்னில் துலங்குகாவலாயென்வார்த்தை
ஆதியாய்கேளும்நீயும் அதிதுரிதங்களாக
வேதியரிடத்திற்சென்று வியாபாரியழைத்தாரென்று
சேதிகளுரைத்துநீயும் சீக்கிரம்வருகுவாயே

மாசசோட்டான் சொல்-வசனம்.

வாரும் பிள்ளாய்காவலா வேகமாக பிருமணனிடத்திற் சென்று நாமழைத்ததாக அதிசீக்கிரமாய் சொல்லிவாரும் பிள்ளாய்காவலனே அந்தசமையத்தில் மாச்சோட்டானைகாணும்படி பிருமணள் வருகிர விதங்காண்க.

வேதியர் வருகிர கவி

நெத்தியில்நீருமிட்டு நேர்த்தியாயணிந்துசோமன்
பக்த்தியாய்ஜெபதபங்கள் பாங்குடன்முடித்துமார்பில்
சுத்தியேபூனுலாட சோதிடங்கையிலேந்தி
வெத்தியாய்வருவோமென்று வேதியர்வருகின்றரே

வேதியர் வருகிர தரு.

அந்தணர்வந்தாரே ஆருடஞ்சொல்ல
அந்தணர்வந்தாரே
அந்தணர்வந்தாரே ஆகமுந்தெரியே
சந்தோஷமாயிந்த சபைதனிலேரியே-அந்த

பச்சடிக்கும்பருப்பு நெய்யுடன்மோருக்கும்
யிச்சைமனதில்கொண் டேகியெவ்வூருக்கும்-அந்த

திட்டமாய்பட்டஞ்சி சோமனைக்கட்டியே
வட்டமாய்சந்தனம் மார்பினிலொட்டியே-அந்த

மார்பினில்பூனூல் வளம்பெரக்காட்டியே
நீருடன்குலலாய் சிரசினில்மாட்டியே-அந்த

மாச்சோட்டான் சொல் கவி.

வந்திடுமறையோர் சிந்தையுமகிழ
தந்திடாசனமும் சூந்திடநீரே.

மாச்சோட்டான்சொல்-வசனம்.

வாரும் பிள்ளாய் காவலரே பிராமணர் வந்துமேதயாகில் அவர்களுக்குத்தகுந்த ஆசனம் விடுவியும் பிள்ளாய் காவலனே.

மாச்சோட்டான்சொல்-கவி.

மாவிலைதெர்ப்பையோடு வந்தஅந்தணரேகேளீர்
கூவிநாநழைத்ததேசேதி கூருவேன்கேளுமிப்போ
கோவிலன்கர்ண்ணகிக்கும் குறித்தபேர்பொருத்தம்பார்த்து
நாவினால்சொல்வீராகில் நடத்துவேன்மணமுந்தானே.

மாச்சோட்டான் சொல்-வசனம்.

கேளுங்கள் பிராமணர்களே நானழைத்தசேதி யேதென்றால் யென் அத்தாள் குமாரன்கோவிலனுக்கும் யென்குமாரிகர்ணகிக்கும் பேர் பொருத்தம் சகலமும் நன்றாயிருக்கிறதா சொல்லுங்கள் பிருமணர்களே.

வேதியர் சொல்-கவி.

மருத்திகழலங்கல்பூண்ட வணிகரேசொல்லக்கேளாய்
திருத்தமாய்பார்த்தேனுந்தன் சிந்தனைபடியேயானும்
பொருத்தமும்நேத்திபாகு பூமியிலெவருமெச்ச
கருத்துடன்மணமுஞ் செய்யக்காலம்யின்றிருக்குதையா.

வேதியர் சொல்-வசனம்.

வாரும்வோய் வணிகனாரே பேர்பொருத்தநாள்நக்ஷத்திரம் சகலதும் நன்றாயிருக்குது யின்றைக்கு முகுர்த்தம் நடத்தலாம் வணிகனாரே.

மாச்சோட்டான்சொல்-கவி.

நாவினால்மறையோர் நவின்றசொற்படியே
கோவிலநாறையே கூப்பிடேவலனே.

மாச்சோட்டான்சொல்-வசனம்.

வாரும் பிள்ளாய்காவலா பிராமணாள் சொன்னப்பிரகாரம் நமது அத்தான் குமாரன்கோவிலனை நானழைத்ததாக அழைத்து வாரும் பிள்ளாய் காவலா.

கோவிலன்வருகிர-கவி.

கன்னல்மதனிவனெனவே கூரலாகும்
காந்தியிலே பானுவினுக்கதிகமாகும்
பன்னுசிபதபமதிலே முனிவனாகும்
பாலிக்கும்கர்ணனிரு கறமேயாகும்
சொன்னமொழிபிசகாம லடுமையான
துரையரிச்சந்ரனென சொல்லலாகும்
யின்னவிதசெய்கையுள்ள கோவிலன்தான்
யெழில்பெருகும் சபைதனிலேவருகின்றானே.

கோவிலன்வருகிர-வசனம்.

இப்படியாக வடிவினில்மன்மதனும் பிரகாசத்தில் சூரியனும் ஜெபதபத்தில் முனிவனும் தருமத்தில்கர்ணனும் சொல்லில் அரிச்சந்திரனும் ஒப்பிடக்கூடாதகோவிலன் தனது அத்தானைக்காணும் படியாய் வருகிரவிதங்காண்க.

கோவிலன்வருகிற-தரு.

வாலிபன்வந்தானே — கோவிலனென்னும்
வணிகனும்வாரானே
வாலிபன்வந்தானே — மகரமுயர்த்தோனஞ்ச
காலிற்றண்டைசிலம்பு — கலகலவெனகொஞ்ச சுரு
கனவிலுமொருபொய் — மொழிகள்தவராதவன்
நினைவிலுமறனை — யென்னாளும்மரவாதவன்-வாலி
தருமத்தில்கர்ணனென்று — சாத்துமொழிக்குமேலாய்
ஒருபகலும்மாரா — துகந்தளிப்பவன்மேலாய் சுரு
உதையபானுவி — னொளினிகராகியே
மதியின்வதனமும் — மானவனேகியே வாலி
அளகாபுரிக்குமே — லானக்காவேரிவாசன்
யிளையாதனமிகுத்த — யேகபோககுணேசன் சுரு
யிருகரகடக — கங்கணமொலிக்கவே
பெருகியதோளில் — பூனூல்ஜொலிக்கவே வாலி
அங்கிநிஜாரணிந்து — அம்புலிக்குடையேந்தி
தொங்குமுருமாலையின் — சோதியனேககாந்தி சுரு
தோகையர்கண்டுமே — சோகமதாகவே
வேகமாய்மாமனார் — விடுதியிற்கேகவே வாலி

கோவிலன் சொல் கவி.

சிந்தனையனுகாதென்னை செல்வமாய்வளர்த்தமாமா
வந்தேனானுந்தன்பாதம் மலரடிபோற்றிசெய்தேன்
யெந்தனைநாடிநீரும் யிங்கழைத்திட்டசேதி
சந்தோஷமுடனேனன்றாய் சாற்றுவீரரியத்தானே

கோவிலன் சொல் வசனம்

ஒருகுறைவும் வாராமற்படிக்கு செல்வமாய் வளர்த்தமாமாவே அடியேனையிவ்விடம் அழைப்பித்தசேதி யின்னதென்று தெரிவிக்க வேணும் மாமாவே.

மாச்சோட்டான்சொல் கவி

வந்துமென்னடிபணிந்த மருகவேவாழிவாழி
சிந்தையிலெண்ணங்கொண்ட சேதியைக்கேளுமிப்போ

உத்தனுக்கெந்தன்பெண்ணை உலகினிலெவருங்காண
தந்திடயிங்கழைத்தேன் தாழ்வாகிலுரைசெய்வாயே

மாச்சோட்டான் சொல் வசனம்

ஆ. ஆ. வாரும் மருமகனே உன்னையிவ்விடம் அழைத்தசேதி பென்னவென்றால் பென்குமாரிகர்ணகியை உனக்குவிவாகம் செய்யும்படி நிபமித்து அழைப்பித்தேன் உன்மனதுக் கென்னமாயிருக்கு து சொல்லும் தம்பிமருமகனே.

கோவிலன் சொல் கவி

கண்ணுக்குநிமையைப்போலும் கார்த்தென்னைவளர்த்தமாமா
பெண்ணுனக்களிக்கபானும் பிரியமாயழைத்தேனென்றும்
யெண்ணமப்படியோவென்றும் யேடிக்கலாமோயென்னை
மண்ணுலகரியயுந்தன் மனப்படிநடத்துவீரே.

கோவிலன் சொல்-வசனம்.

வாரும் யெனதுமாமாவே கண்ணுக்கு நிமையானது யெப்படி பாதுகார்க்குதோ அதைப்போல் யென்னைடாது கார்த்துவளர்த்த மாமாவே உமது மனதின்படி நடத்தயாதொறு தடையு மில்லை மாமாவே.

மாச்சோட்டான்சொல்-கவி.

கடினகாவலனேசிந்தை களிப்புடனேகிநீயும்
கொடிமின்னலானதாதி கோதைமார்தங்களோடு
[illegible]வில்மிகுதியான மகளைநானழைத்தேனென்று
ச[illegible]யிலுரைத்துயெந்தன் சமுகத்தில்வருகுவாயே.

மாச்சோட்டான்சொல்-வசனம்.

வாரும்பிள்ளாய் காவலா நமது அரண்மனைக்குச்சென்று குமாரியைநானழைத்ததாக தாதியிடத்தில் உரைசெய்து வாரும் பிள்ளாய் காவலனே.

கர்ணகிசொல்-விருத்தம்.

அன்னம்போல்நடையும் அழகுபட்டாடையும்
அம்புலிவதனமுமிலங்க
கன்னல்மன்மதனார் கணையெனபுருவ
கண்கலைமானெனமிரள

சொன்னசொற்கிள்ளை சோர்ந்திடுங்கண்டு
தொனியினில் குயிலதுவென்ன
புன்னகையான பூவைகர்னகியாள்
பொற்பணிசூடியே வாராள்.

கர்ணகிவருகிற-தரு.

தேவிவந்தாளே கர்ணகியெனும்
தேவிவந்தாளே
தேவிவந்தாளிதோ திங்கள்வதனந்துன்ன
கூவியதந்தையின் குணமரிந்திடவென்ன-சரு

கொஞ்சும்தாதியர் அஞ்சலியாகவே
விஞ்சுசாய்மரை வீசியேகவே-தேவி

செஞ்சிலம்பொலிகண்டு தினகரன்மனம்வாட
வஞ்சியர்தம்பூறுவீணை வாத்தியம்பாட-சரு

வாடைபரிமளம் வாசனைநாடியே
பேடையெனும்பல பெண்கள்கூடியே-தேவி

சரிகைச்சேலையுடுத்தி தண்டைக்கொலுசணிந்து
பிரியமனதாய்சொக்கர் பொற்பாதமேபணிந்து-சரு

பொட்டுத்திலர் தமு மிட்டுநீருடன்
கொட்டுத்தாளமும் குமரசீருடன்-தேவி

யிடையில்தங்கஒட்டியாண மிருக்கிப்பணிகள்கூச
தொடையிளவாழையெனும் தோகையருகிற்பேச-சரு

தொனியும்குயிலென பேசவே
பனினீர்பரிமளம் வீசவே-தேவி

கர்ணகி சொல்-கவி.

களைத்திடும்பயிர்கார் பொழிவதுபோலெந்தன்
யிளைப்பினையகிந்துநித்தம் யெடுத்தமுதூட்டி நின்க
சளைப்பிலாக்கனிகர்க்கண்டு சோர்விலாதளித்ததந்தை
வளையணிந்திடுங்கரத்தால் மலரடிபோற்றினேனே

கர்ணகி சொல் வசனம்

வாடிவதங்கிய பயிர்களுக்குமேகமானது களைதெளிவிப்பதுபோல் நிதம்நிதம்யென்னுடையபிளப்பறிந்து கனிகர்க்கண்டு கச்சாயவர்க்கங்களுடன் அமுதூட்டிவளர்த்ததந்தையே உமதுபாதார விந்தம் தீர்க்கவந்தனம் தேவரீர்யென்னையிவ்விடம் யழைப்பித்த விபரத்தை உரைசெய்யவேணும் பிதாவே.

மாச்சோட்டான் சொல் கவி.

தணைவினுக்கொப்பதான தார்குழல்மகளேவாழி
கணமதிலுனையழைத்த சேதிகளென்னவென்றால்
குணமதையறிந்துவுன்னைக் கொடுத்துநான்கோவிலர்க்கு
மணஞ்செயவழைத்தேனுந்தன் மனதினுக்கென்னமாமே.

மாச்சோட்டான் சொல் வசனம்.

வாருமம்மா யெனதுசெல்வகுமாரியே வந்தால்மகாசந்தோஷமாச்சுது உன்னையழைத்தவிபரம் யென்னவென்றால் யெனது அத்தான்குமாரன் கோவிலனுக்கு உன்னைக்கொடுத்து விவாகம் செய்யும்படிநினைந்து அழைப்பித்தேன் உன்மனதுக்கு யென்னமாயிருப்பது சொல்லுமம்மா குமாரியே.

கர்ணகிசொல் கவி.

சிந்தையிலன்பதாக சிருடன்வளர்த்தெடுத்த
தந்தைதாய்மொழிக்கிரண்டு சாற்றினால்நரகமென்பார்
நிந்தையோர்மொழியேவேண்டாம் நீருந்தன்மனதைப்போலும்
யெந்தனையீய்வதற்கு யிடரில்லைநடப்பீரையா

கர்ணகி சொல் வசனம்

கேளுமையா யெனதுதந்தையே யிதுவரையுலும் யென்னைவளர்த்தெடுத்ததாய்தந்தைக்கி மருமொழிசொல்வாருக்கு நரககெதியென்றார் பெரியோர்சொல்லும் பழமொழியை தடுக்கவெண்ணாது ஆகையால் தேவரீர்மனதின்படிகொடுத்து நடப்பியும்யென்தந்தையே.

மாச்சோட்டான் சொல் கவி.

சித்தமுமகிழ்ந்தேனுந்தன் செல்விவாய்மொழியைக்கேட்டு
குத்தமொன்றில்லைப்பெண்ணைக் கோவிலர்க்களிக்கயானும்

சுத்தநாளிதுவேயென்று சொல்லியப்படியேநீங்கள்
மித்தலத்தோர்கள்மெச்ச யெழில்மணம்நடத்துவீரே.

மாச்சோட்டான் சொல் வசனம்.

ஆ! ஆ! கட்டியக்காரா நமதுபெண்ணை கோவிலனுக்குக் கொடுத்து கலியாணம்செய்ய நாளும் நக்ஷத்திரமும் நல்லசுபகாலத்தில் நடப்பிக்கவேண்டும் ஆகையால் தண்டோராபரைசாத்தி[illegible] வரைப்பந்தலை ஜோடித்துவையும்பிள்ளாய்கட்டியா[illegible]

[illegible] 600 00[illegible]
68570



கலியாணம்பந்த லலங்கரிக்கும்-தரு-கொண்டிச்சிந்து

சோபனம்சோபனமே செயசுப
சோபனம்சோபனம் சோபனமே
கலியாணம்கலியாணம் கோவிலர்க்கு
கர்ணகியாளுக்கும் கலியாணம்
யெல்லோரும்தாமரிய பேரிகை
பெங்கும்பரைசாத்தி தெரியவைத்தார்
வஜ்ஜிரக்கால்நிருத்தி தெருவெங்கும்
வானளவும்பந்தல்கள் போட்டுவைத்தார்

விசித்திரபொம்மைகளும் குலோப்புடன்
வேடிக்கையாய்பந்த லலங்கரித்தார்
தோரணங்கட்டியமைத்தார் லரந்தர்கள்
சோதியாகாசமாய் யேத்திவைத்தார்
பூரணமதிவதன மாதர்கள்
பூரிப்புடன்மெழுகி கோலமிட்டார்
குத்துவிளக்கேத்தி யெரிந்திட
குடவிளக்கேத்தியே யெதிரில்வைத்தார்
சுற்றிலும்தீபம்வைத்தார் மறையவர்
திருசுடன்அரசாணி கால்புதைத்தார்
சாலும்கரகம்வைத்தார் பாங்கியர்
சாங்கியப்பாலிகை பரப்பிவைத்தார்
காலுபேர்தோழியர்கள் கூடியே
கலங்கிட்டார்பெண்பிள்ளை யிருவருக்கும்
மாப்பிள்ளைகோவிலர்க்கும் கர்ணகியும்
மணவரையேரி களிப்புடனே
கூப்பியேயிருகரமும் அவரவர்
கும்பிட்டுகுந்தினர் மணவரையில்
மணப்பொங்கலிட்டார்கள் வேதியர்
மந்திரமுச்சரித்து மாங்கில்யத்தை
குணமுடனவரவர்கள் வாழ்த்தியே
கொடுத்திடக்கோவிலர் தரித்தனரே
அம்மிமிதித்தார்கள் யிருவரும்
அரசாணிசுத்திஅருந் ததிகண்டார்
சம்பிரமாய்சேஷையிட கோவிலரும்
தாலிதரித்திடும் பந்தலுக்கு
திருக்கடையூர்தனிலே யிருந்திடும்
தேவரடியாளென்னும் மாதகியாள்
சுருக்குடன்பந்தலுக்கு நடித்திட
சுழல்விழிமிரட்டியே வந்தனளே

பொது-வசனம்.

இப்படியாக யாதொரு திருக்கடையூரில் வாசம்செய்யும் வசந்தமாலை கெர்ப்பசுதாகரியான தேவரடியாளாகிய மாதகிபெண் கோவிலன் கல்யாணபந்தலுக்கு நடகம்செய்ய வருகிறவிதங்காண்க.

மாதகிவருகிர கவி.

தேவர்களடியாளென்னும் திருக்கடைவசந்தமாலை
ஆவலாயீன்றசெல்வி அருவைமாதகியாள்தானும்.
கோவிலன்மணமுன்னேகி குளிர்ச்சியாய்நடனஞ்செய்ய
போவேனானென்றுசொல்லி பொற்பணியணிந்துவாருள்

மாதகி வருகிர தரு

தத்திமிதிமிதமி தகத்ததிங்கணவென்று
தாசிமாதகியும்வாருள்
ஒத்துமத்தாளம் ஓசையெதிரில்கூட
சுத்திலும்வருபவர் சோகமாய்மனம்வாட சுரு

துடையிளவாழைத் தண்டெனக்குரியானவள்
நடையினில்பேடென நடந்திடவானவள் தத்தி

சென்னிக்கூந்தல்முடித்து சிரந்தபணிதரித்து
பின்னிராகம்படித்து பார்த்தொயிலாய்சிரித்து சுரு

யரிவானவரை யெதிர்பேசியழைப்பவள்
பெரியோர்சிரியோரால் பிழைப்பவள் தத்தி

சேல்கண்டையெனும்விழி திரந்துமையலைக்காட்டி
கால்கணீல்கணீலென கதருந்தண்டைகள்பூட்டி சுரு

கவளையுடனேகங் கணமுமிருக்கியே
தெய்தெய்யவெனமுகம் திரும்பிமுருக்கியே தத்தி
சிங்காரயிடையினில் சேலையுடித்திரங்காய்
தங்காமலெங்குமிவள் தான்வழிநடந்திங்காய் சரு
தத்திரிகிடதிரி தகதரிதிகவென
உத்தமர்சபையினி லொளிமிகமிகவென தத்தி

மாதகிநாட்டிய தரு

சாச்சரிசசரிசா சரிசநிதமமகரிச-சா-சரீ
பாசமுளவணிகாயெந்தன் பாவையுனுடியேசோருதுபார்-சாச்
கனமுள்தனவாளாகொஞ்சம் கருணைபுரியவேணும்குணனேயா
மனமிதங்கெனையாளாயெந்தன் வருமைகள்அருத்திடும்படிஞாயா
ரூஜயோகாதிபரேநின்னே நாடிவந்தேன்யெதிராடிடவே
பாசமுண்டாகுமாயவரோயிருவரும் பரிவுடனேயணைந்துகூடிடவே
மாரன்கணைகள்பாயுதேமனம் வாடுதேநாடுதேவணிகரிடம்
பாராமல்யிருப்பாரோஒருக்கால் பார்வையுண்டாமோயென்மேலிவி [டம்

கோவிலன் சொல் கவி

பந்தலில்நடனஞ்செய்யும் பாவைமாதகியாள்தன்னை
குந்தியேமணம்புரிந்த கோவிலன்உத்துப்பார்த்து
சிந்தையும்கலங்கிமாரன் செய்திடும்வாதையாலே
நொந்துவந்தெதிரில்நின்று நோக்கியேயுரைசெய்வானே

கோவிலன் சொல்-வசனம்.

இப்படியாகபந்தலில் நிர்த்தனம்செய்யும் மாதகியாளை கோவிலன் உத்துப்பார்த்தவுடன் மன்மதபாணம்பட்டு மயங்கிமையல்கொண்டுமாதகியெதிரில்வந்து யேதென்று சொல்லுகிர விதங்காண்க

கோவிலன்சொல்-தரு.

தாசியாரேகிட்டவாரும் யென்னுடன்பேசி
சந்தோஷமாகீயொரு முத்தம்தாரும்
காசினியோர்னத்துமயிலே யென்னை
கண்டுவாடி பேசுங்குயிலே
சித்தக்களிப்புடனே யிருவருமாக
சித்திரம்போல்பேசநல்ல காலமிதுவே- தாசி

கோவிலன் சொல்-வசனம்.

வாரும்தாசியாரே உன்மதபாணம்பட்டு நான் ஆசையானேன் யென்னுடன் கூடிவார்த்தையாடும் தாசியாரே.

மாதவிசொல்-தரு

கிட்டவாயென்றென்னைகூவுரீர் பல்லே
கெஞ்சியேகையினல் தாவுரீர்
செட்டியாருன்தந்தை யேசிடுவார்-கொண்ட
தேவியெனைத்தூரி பேசிடுவாள்
சேதியைநீக்கி மருவார்த்தைகூருவாய்
செப்பினேன்யிப்போது சேர்ந்திடலாகாது-கிட்டவா

மாதகிசொல்-வசனம்.

கேளும் ஒய் செட்டியாரே யென்கிட்டவந்தணைந்து ஆசைதீர்க்கும்படி சொல்லும் வார்த்தைதைதள்ளும் யென்கிட்டவராதே அப்புரம்போம் செட்டியாரே.

கோவிலன்சொல்-தரு.

யேசிடும்யென்தந்தைதாயே கொண்ட
யென்மனையாட்டியும் நீயே
யோசிக்கவேண்டாம்நீயாரும் மன
ஒத்துயிப்போதென்னை நாடியேசேரும்
உச்சிதமாகவோர் மாளிகைகட்டுரேன்
உண்டானரொக்கங்கள் உனக்கேநான்தருகிரேன்-யேசி

மாதகி சொல்-தரு.

வாயினல்சொல்வதுநேரமோ பின்பு
வாவென்றழைப்பது தூரமோ
தாய்தந்தையென்பது ஞயாமோ-தாசி
தரித்தவள்யென்பது உபாயமோ
தந்திரம்சொல்லி தளுக்குகள்பேசுரீர்
தாசியென்றுநும்மீர் பேசிடலாகுமோ-வாயி

கோவிலன்சொல்-தரு.

சொல்வதுசூதென்றுயெண்ணுராய் ரொம்ப
தூரத்துயோசனே செய்குராய்

கல்முத்துப்பூஷணம்வேணுமோ தரவே
கன்னியேயென்மனம் கோணுமோ
கப்பல்பணங்களும் காணிபெருகுவாய்
காமன்கணை தீர்க்க கட்டிமருகுவாய்-சொல்ல

மாதகிசொல்- தரு.

யோசனைவேரில்லைகேளும் யென்
யிருப்பிடம்வந்தென்னை யாளும்
பாசம்வுண்டானாலேசொல்லும் பயப்
ப்ட்டதுண்டானாலே நில்லும்
பாடிநடனமும் ஆடிடும்வேளையில்
பாவையேபேசென்று கூவவும்நியாயமோ யோ

கோவிலன் சொல்-தரு

வந்தென்னையாளென்றமானே யுந்தன்
வார்த்தைக்குரெண்டோ சொல்தேனே
சந்தோஷமானடிகண்ணே தனம்
தந்திடுவாயென் பெண்ணே
சந்திரசூரியர் தேவாரியவே
தப்பாமலேகிட யிப்போவருகிறேன்-வந்தெ

மாதகிசொல் தரு

பஞ்சபாணனைத்தவீரு வழி
பாதையிதுயேக னேரு
கொஞ்சியென்பின்னாலேவாரு யிது
குவலையம்போற்றும்வொய்யாரு கையை
கோர்த்துயிருவரும் கூடியேயேகினல்
கொல்லுமதனையும் வெல்லலாம்யிப்போது பஞ்ச

கோவிலன் சொல் கவி

வெல்லுமோமதனையென்று வினவியமயிலேமாரன்
கொல்லுரான்கணைகள்யேவி கோதையேயென்னசெய்வேன்
செல்லுவாயெனக்குமுன்னே திருக்கடையூரைநோக்கி
நல்லதுன்பின்னல்யானும் நடந்துயான்வருகுவேனே

கோவிலன்சொல் வசனம்.

கேளும்பெண்ணே மாதகிமன்மதபாணம் அதைவெல்லும் படிக்கி உன்பிதாஸ்த்தானமாகியதிருக்கடையூருக்குப்போக உன்பின்னல் வருகிறேன்சீக்கிரமாய்ப்போகலாம் வாரும்பெண்ணேமாதகி.

மாதகிசொல் தரு

திருக்கடையூர்பாதைதெரியுதுபாரும் ஓவணிகனே
செல்கலாம்வாரும்சேந்திருவோரும் ஓவணிகனே
சுருக்காய்நடந்தால்சோகமுமாரலாம் ஓவணிகனே
தொட்டணேந்துஉன்மனமதும்தேரலாம் ஓவணிகனே

கோவிலன் சொல் தரு

தேருவதெப்போதியங்குதென்னெஞ்சம் ஓமாதகியே
செப்புவாயென்னைச்சேரவுங்கொஞ்சம் ஓமாதகியே
மலர்போன்றமுகத்தையும்திரும்பவும்காட்டி ஓமாதகியே
மதனையும்கொஞ்சம்விலகவுமோட்டடி ஓமாதகியே

மாதகிசொல் தரு

விலகவேவோட்டுவேன்வீடுசென்றுலுமே ஓவணிகனே
மெலிந்தலைந்திடலாமோயின்றுமேநீரிப்போ ஓவணிகனே
தொலவில்வந்துநீர்சோர்லாகுமா ஓவணிகனே
சொல்லும்நாமிங்கேசேரப்போகுமா ஓவணிகனே

கோவிலன்சொல்-தரு.

சேரப்போகாதென்னூர்செல்லும்பென்குராய் ஓமாதகியே
செப்பியுன்மனதுள்ளேபொங்குகிறாய் ஓமாதகியே
தூரமோதிருக்கடையூரெங்கையோ ஓமாதகியே
தோகையேவெகுநாளாய்வங்கையோ ஓமாதகியே

மாதகிசொல்-தரு.

வங்கையில்லையென்னூர்வாருமாச்சுது ஓவணிகனே
வந்தமட்டும்வழியாண்டுபோச்சுது ஓவணிகனே
சிங்காரத்தோப்பெதிர்சென்றிடுங்காணும் ஓவணிகனே
திருக்கடையூரிதின்வடக்கிலேதோணும் ஓவணிகனே

கோவிலன்சொல்-தரு.

தோணுமதிலொருசிகரம்நேரிலே	ஓமாதகியே
துலங்கும்ஆலயம்பென்னுவூரிலே	ஓமாதகியே
காணவேயெனக்கரியச்சொல்லடி	ஓமாதகியே
கண்ணேநீமனக்களிப்பாய்சொல்லடி	ஓமாதகியே

மாதகிசொல் தரு

செல்வம்தந்திடும்அமுர்தலிங்கேசர்	ஓவணிகனுரே
தேவியாளபிராமியின்னேசர்	ஓவணிகனுரே
அல்லலறுத்திடும்அம்பலத்தாடி	ஓவணிகனுரே
ஆண்டவனைத்துதிஅன்புடனேடி	ஓவணிகனுரே

கோவிலன்சொல்-தரு

ஓடிவந்தீசனார்பாதமுங்கண்டேன்	ஓமாதகியே
ஊழ்வினைப்பயன்ஆனதைவிட்டேன்	ஓமாதகியே
தேடியுன்மாளிகைசேரலாம்வாடி	ஓமாதகியே
சேவித்தெழுந்தால்செந்தேனேசேரலாங்கூடி	ஓமாதகியே

மாதகி சொல்-கவி.

சேவித்துவாருமென்று செப்பியவணிகனுரே
கோவிக்காதெந்தனேடு கூடியொன்றாயிருந்து
சீவித்துப்போகுமட்டும் சென்றிடேனெங்கும்யென்று
தாவியிப்பெலிடபீத்தின் தலையினிலடித்துடீரே.

மாதகிசொல்-வசனம்.

கேளும் ஓய்வணிகனுரேநீரும்நானுமாய்நம்முடைய உயிர்பிரியளவும் யென்னைவிட்டு நீர்பிரிகிரதில்லையென்று யிந்தபெலிபீடத்தின்தலையில் அடித்துசத்தியம் செய்துக்கொடும் வணிகனுரே.

கோவிலன் சொல் கவி

தலையினிலடித்தேன்பாரும் தாசிமாதகியேயிந்த
நிலையுடனிருப்பேனென்றும் நீங்கிடேன்யென்றுசொல்லி
கலைதனையவிழ்த்துப்போட்டு காலினால்தாண்டிநின்று
விலையிலாஅமுர்தலிங்கர் மீதில்சத்தியம்செய்வாயே

கோவிவன் வசனம்

கேளும் பெண்ணே மாதகி யின்றுமுதல் உன்உயிர்போமளவும் யென்னைவிட்டு பிரியிரதில்லையென்று உன் முந்தாணியைப்போட்

டு அமுர்தலிங்கேசர்மீதில் சத்தியம்சொல்லித்தாண்டி சத்தியம் செய்துக்கொடும் பெண்ணேமாதகி.

மாதகி சொல்-கவி.

ஈசனுமரிவதாக யெந்தனையுரிதிகேட்டீர்
மோசமும்செய்வதில்லை யுந்தனைப்பிரிவதில்லை
பாசமாயிருப்பேன்னெஞ்சில் பகையில்லைசத்யம்செய்தேன்
தேசகாலங்களாச்சு செல்கலாம்மாளிகைக்கே.

மாதகிசொல்-வசனம்.

கேளும் ஒய்மாமா உம்முடைய மனதின்படி உம்மைவிட்டு பிரியாமலும் பகைவஞ்சகம்யில்லாமலும் யிதோசத்தியம் செய்தேன் சந்தோஷகரமா யென்மாளிகைக்கு போகலாம் வாரும்மாமா.

கோவிலன்சொல்-தரு.

வாரும்நடந்துவுந்தன் மாளிகையெங்கேசொல்-மானே
யிருவோரும்சென்றுயிளப் பாரிமருகலாம்-தேனே

மா-யிருக்குதுபாரிந்த யில்லரந்தானிதுவாரும்மாமாவாரும்
வந்துதிருக்கொன்றஞ்சொல்லாமல் யிருக்கும்கட்டினிலுட்காரும்

கோ-கட்டினில்குந்தினேன் கண்மணிமாதகி-மானே
ஒரு-அட்டியும்சொல்லாமல் அணைந்திடவாநீயிப்போதே

மா-வந்ததும்களைதீரா மறுவிடலாகாதுதள்ளும்
யிது-தந்தேநீர்மோரிதை சாப்பிட்டிளைப்பாரிக்கொள்ளும்

கோ-சாப்பிட்டேன்யானும் சயனிக்கலாம்யிங்கேனுமே
சும்மா-நாப்புகள்காட்டி நகைத்திடாதென்னுயிர்போமே

மா-போகுதுயிரென்று புலம்புவதேன்செட்டியாரே
உள்ளே-வேகுதுசாதம்யிளப்பாரி யென்னணைவீரே

கோ-காமப்பசியே களையாய்வருகுதுபெண்ணே
யிப்போ-தாமிஷமாக சமைக்குரேனென்குறுய்நின்னு

மா-சமையலுமாச்சு சலம்யிந்தாரும்சொம்பில்தாரேன்
கைகால்-நிமையில்அலம்பிவா நேசாபரிமாரப்போரேன்

கோ-பரிமாரிவைத்தபடி சாதம்உண்டேநான்போதும்
ரொம்ப-பிரியமதாகவா போகலாம்பஞ்சணைமீதும்

மா-பஞ்சணைமீதுப் படுப்போம்யிந்தாரும்தாம்பூலம்
போட்டு-கொஞ்சிவிளையாடி கூடிணுலேருசிகாலம்
கோ-ருசியானகாலம் முனக்குத்தெரியுதுகேளும்
காம-பசியானதென்னைப் பகட்டுதடியென்னையாளும்
மா-ஆளுமேவாய்வாரும் அழகானமஞ்சத்தில்யேரி
யென்னை-முகத்துடன்முகம்வைத்து சுகித்திடுவீர்காமமீறி

கோவிலன்சொல்-கவி.

பஞ்சணைமீதுசென்று பகைத்திடுமதனைவென்று
நெஞ்சமும்களிக்கச்செய்த நிர்த்தனியாளேயுந்தன்
சஞ்சலம்நீரச்செய்வேன் தருகுவேன்னினைத்ததிப்போ
அஞ்சிடாதெந்தநாலே யாகும்நீயுரைசெய்வாயே.

கோவிலன்சொல்-வசனம்.

கேளடியென் ஆசைக்கிசைந்த பெண்ணே யென் அபிலாஷை தீர்த்தவுடன் யெனக்குதேவேந்திரபட்டம் கிடைத்தது போலாச்சுது ஆகையால் உனக்குவேண்டிய பொருளைகேட்பாயாகில் நான் உனக்குகொடுப்பேன் சந்தோஷமாய்கேளும் பெண்ணேமாதகி.

மாதகி சொல் தரு.

தென்னவேண்டுமாதகிசொல் லென்றுகேட்டீரேமாமா
பேதுரைப்பேன்கொஞ்சமாக யியம்புவன்கேளீர்
பன்னிரண்டுவேலிநஞ்சை பள்ளமாதாய்மாமா
பாங்காகவோர்சதுரம் வாங்கிடவேணும்
தாழ்யிருந்துயேரிபார்க்க தாசியெனக்குமாமா
யேழடுக்குஉப்பரிகை யிக்ஷணம்வேணும்
ஆசையுடன்அடியாளும் யீசனுருக்குமாமா
பூசைசெய்யமண்டபமும் புதுப்பிக்கவேண்டும்
ஆலகாலவிஷமுண்டோன் அன்பனுரேகேள்மாமா
காலக்கடைக்கொள்ளக்கால் மரக்கால்பொன்வேணும்
யிச்சித்தப்படித்துரையே யெந்தனுக்கிப்போமாமா
உச்சிக்கடைக்கொள்ளவோர் மரக்கால்பொன்வேணும்
சிந்தைதனில்அன்புடைய செட்டியாரேகேள்மாமா
அந்திகடைகொள்ளஅரை மரக்கால்பொன்வேணும்
வாக்குதவராதளிக்கும்மாமா யெனக்குமாமா
பாக்குகொள்ளபத்துலக்ஷம் பொன்பாவைக்குவேணும்

எத்திசையும்கீர்த்திபெற்ற	யிராஜபோகரேமாமா
வெத்திலைக்கு ஆயிரம்பொன்	வேணும்நாதனே
நகையினிலழகுடைய	ஸ்ரீதாயெனக்குமாமா
பொகயிலைக்கோர்கப்பல்பொன்	போட்டிடவேணும்
என்றொருமுனைப்பிரியேன்	யெதுமரியேன்மாமா
சு ணும்புக்கு ஆயிரம்பொன்	சொரிந்திடவேணும்
சத்தியம்தவரிடாத	சாந்தசீலனேமாமா
சித்திரைக்காயிரம்பொன்	சேர்ந்திடவேணும்
என்யிடுக்கந்திரவந்துநின்ற	யெந்தன்துரையேமாமா
படுக்கைக்கு ஆயிரம்பொன்	பரிந்திடவேணும்
கொஞ்சிவந்துயென்னைக்கட்டி	கூடிமருவும்மாமா
பஞ்சனைக்குபத்துலக்ஷம்	பாவிக்கவேணும்
கொட்டியமத்தளதாளம்	கூடவருகும்மாமா
நட்டுவர்க்கையாயிரம்பொன்	நாதனேநாரும்
புத்தியிலுயர்ந்தமாமா	பூவையாளிடமாமா
சத்திகாரனுக்கு ஆயிரம்	சொர்னங்கள்வேணும்
எத்திசையிலுள்ளமாதர்	யேங்கிவாடவும்மாமா
குத்தினிரவுக்கைசேலை	குசும்பாவும்வேணும்
நடையிலழகுடைய	நாகரீகரேமாமா
ஜடைபில்லைகுச்சுகிளி	தந்திடவேணும்
எப்போதுமுந்தன்பெயர்	யிருக்கும்படியாய்மாமா
கொப்புடன்கோர்வைமணி	கொடுத்திடவேணும்
சொல்லியெனக்கென்றுவெகு	துருசுடன்செய்துமாமா
கல்லிழைத்தகம்மல்கண்ணில்	காட்டவேவேணும்
சுத்திலும்வருபவர்கள்	சோரும்படியாய்மாமா
முத்திழைத்தமூக்குத்தி	ரத்தினத்தால்வேணும்
தண்டிகையேரும்போது	உன்னுடன்கூடமாமா
சுண்டுவிரல்மோதிரம்	ஜொலித்திடவேணும்
பொங்கமாயெந்தனையாளும்	புஷ்பராகத்தால்மாமா
வங்கியொன்றுயெந்தன்கைக்கு	வாங்கவேவேணும்
கொஞ்சம்கொஞ்சம்கேட்டாளென்று	கோபிக்கவேண்டாம்மா
நெஞ்சினில்சந்தோஷமாய்	நினைத்திடவேணும்

மாதகி சொல்-கவி.

கொஞ்சமாய்கேட்டாளென்று கோபிக்கலாகாதிப்போ
வஞ்சியாள்சொன்னதெல்லாம் வந்தபின் தருவீர்கேளும்
நெஞ்சில்சந்தோஷமாக நீரிதையளித்திரானல்
பஞ்சணைமீதில்கொஞ்சி பாவையாள்யிருப்பேன்மாமா.

மாதகிசொல்-வசனம்.

கேளும் யென்னுசைக்கிசைந்தமாமாவே நான் தங்களைகொஞ்சமாகவும் அல்பமாய் கேட்டாளென்று மனஸ்த்தாபம் வேண்டாம் யிதுகளெல்லாம் வந்தவுடன் பஞ்சணையில் அழகாகவீத்திருந்து அப்புரம் உம்முடைய மனதின்படியின்னம் வேண்டியது நடப்பிப்பீர் அதுவெல்லாம் யெனக்குசந்தோஷம் செட்டியாரே.

கோவிலன்சொல்-கவி.

மாதகியின்யேவலரே கேளீருங்கள்
மாதரசிதாசியர்க்கு தனங்களீய
காதலுடன்யெணியின்ற மாணுக்கர்க்கு
கைப்படவேயெழுதினேன் யிவ்வோலைதன்னை
சாதமிகவுண்டு காவேரியேகி
தாமதிடுவீருடனே பன்னிரண்டுகப்பல்
போதரவாய்தனம்யேத்தி அனிப்பிவைப்பார்
பொருளுடனேவந்தெனக்கு உரைசெய்வீரே.

கோவிலன்சொல்-வசனம்.

கேளுங்கள் யேவலாளிகளே யெனதுதகப்பன் மாணுக்கரிடம் போய் யிந்தஓலையை அவரிடம்கொடுத்திராகில் உடனேபனிரெண்டு கப்பல்பணம் அனுப்பிவிடுவார் அதை சீக்கிரமாய் வாங்கிக்கொண்டு ஜல்தியாய் வாருங்கள் யேவலாளிகளே.

யேவலாளிகள்சொல்-கவி.

ஓட்டமுமடையுமாக ஓடியேசேதிகன்றாய்
கேட்டிடும்வணிகனாரே கெம்பீரமுடனேநாங்கள்
கூட்டமாய்கப்பலெல்லாம் கொண்டிதோ வந்தோம்நீரும்
ஆட்டங்களாடுந்தாசி யவள்தனக்களித்துமடீரே.

யேவலாளிகள்சொல்-வசனம்.

கேளுமையா கோவிலரேநீர்சொன்னபடிக்கி பன்னிரெண்டுகப் பல்பொன் கொண்டுவந்தோம் உம்முடைய மனதன்படிகட்டளை செய்யுமையா செட்டியாரே.

கோவிலன் சொல் கவி

உன்னிதமயிலேதேனே உரைத்தசொற்படியேயானும்
பன்னிருலக்ஷம்செம்பொன் பாவையேயழைத்தேனிப்போ
சென்னியிலெடுத்துவந்து சேர்த்திடமுடியாதன்றல்
அன்னியாசகடுகூட்டி அழைததுநீவந்திடாயே

கோவிலன் சொல் வசனம்

கேளும் பெண்ணேமாதகி உன்மனதின்படி பன்னிரண்டு கப்பல்செம்பொன் வந்துவிட்டது அதைசகடுயென்று சொல்லப்பட்ட வண்டியின்பேரில்யேத்திவந்து ஒப்புக்கொள்ளும் பெண்ணே மாதகி.

பொது கவி.

செட்டிபிள்ளை கோவிலனும் மாதகிக்கி
திரவியங்கள் பன்னிரெண்டுகப்பலிய
பொட்டிகளும்உரியடுக்கும் பழங்கலங்கள்
பின்னுமந்த தொம்பைகளும்வாரிவாரி
கொட்டியபின்னிருவருமாய்க் கூடிக்கூடிக்
குலாவியவர்கொஞ்சிறுக்கும் நாளில்தாலி
கட்டியகர்ன்னகியாளும் தாதியோடு
கணவனையும்நினைந்தழுது கதருவாளே

பொது-வசனம்.

இப்படியாக கோவிலன்கொடுத்த திரவியத்தை மாதகியான தாசியானவள் வீட்டில்ரொப்பிவிட்டு சந்தோஷமாயிருவரும்யிருக்கிறநாளையில் கோவிலன்பெண்சாதியாகிய கர்ன்னகையம்மன் தன்னுடையகணவருடைய வரலாரைச்சொல்லிபுலம்புகிர விதங்காண்க.

கர்ன்னகை சொல் கவி

மன்னவரும்தாலிகட்டி யென்னையிந்த
மணவரையில் விட்டுவந்ததாசியோடு

கன்னலெனுமதன்கணையால் கடையூரேகி
கணக்குபனி ரெண்டுவருஷங்களாச்சு
யென்னையவர்சிந்தையிலே யெண்ணினரோ
யில்லையவளிடமருந்தால் தள்ளினரோ
சின்னமுகம்தனையெப்போ காண்பேனம்மா
செட்டியாரேயென்றழுது தியங்குவாளே

கர்ன்னகை சொல் வசனம்.

கேளுங்கள் யென்னுடைய தாதிமார்களே யென்புருஷர் கோவிலர் பென்னைகலியாணஞ்செய்து மணமாலைசூட்டி பனிரெண்டு வருஷமாச்சுது அப்போதே திருக்கிடையூர் தாசிபிரவேசென்று யிது நாள்வரைக்கும் காணேமேநானென்னசெய்வேனம்மா தாதிகளே.

கர்ன்னகைபுலம்பல் தரு

அய்யோநானென்னசெய்வேன் தாதிகளா-யிந்த
அவலமெனக்குண்டாச்சே தாதிகளா
வய்யகத்தில்யென்னைப்போல் தாதிகளா-பெண்கள்
மாபாவியாருமில்லை தாதிகளா
தந்தைமொழிகள்நம்பி தாதிகளா-யானும்
தாலிக்கிடங்கொடுத்தேன் தாதிகளா
குன்றிமணம்புரிந்த தாதிகளா-கணவன்
கோவிலனுரெதிரில் தாதிகளா
மாதவியென்னும்தாசி தாதிகளா-ஆட
மயங்கிடந்தாரோடி தாதிகளா
சாதங்கறிவகைகள் தாதிகளா-வெந்து
சமையல்அழிந்ததோடி தாதிகளா
கொட்டியமேளக்காரன் தாதிகளாகொட்டி
கொல்லைவழிபோகலியே தாதிகளா
பட்டமங்கிலியந்தந்த தாதிகளா-தட்டான்
படிவாங்கிபோகலியே தாதிகளா
மாலையெடுத்துவந்த தாதிகளா-ஆண்டி
மனையைவிட்டேகலியே தாதிகளா
சேலையெடுத்துவந்த தாதிகளா-சேடன்
தெருவீதியேகலியே தாதிகளா

சாலும்கரகந்தந்த	தாதிகளா-குசவன்
தலைவாயல்யேகலியே	தாதிகளா
காலும்அச்சக்கலியே	தாதிகளா-கட்டின
காப்புங்களயலியே	தாதிகளா
பஞ்சாங்கியோரெழுந்து	தாதிகளா-வீட்டில்
படியேரிபோகலியே	தாதிகளா
குந்திருந்தசபையோர்	தாதிகளா-கும்பல்
கூட்டங்கலயலியே	தாதிகளா
பாலியெடுத்துவந்து	தாதிகளா-செங்கையில்
பாங்காய்விடுகலியே	தாதிகளா
கூலிக்குமோரியெடுத்த	தாதிகளா-யெனையர்
கூடியவரேகலியே	தாதிகளா
பந்தல்பிரிக்கலியே	தாதிகளா-யிங்கே
வந்தமனுயேகலியே	தாதிகளா
சொந்தமனிதரெல்லாம்	தாதிகளா-வந்த
துரையரிங்தேகலியே	தாதிகளா
கோலம்வருகலியே	தாதிகளா-நாங்கள்
கூடியிரங்கலியே	தாதிகளா
ஆலம்யெடுக்கலியே	தாதிகளா-வீதி
அதர்க்குள்யிப்படியாச்சே	தாதிகளா
யிருருவருஷமாய்	தாதிகளா-யென்னை
யெப்படிமரந்தாரோ	தாதிகளா
பாராதவர்முகத்தை	தாதிகளா-நித்தம்
படுக்கைப்பொருந்தலையே	தாதிகளா
நீலியிவள்யென்றெண்ணி	தாதிகளா-மனதில்
நினைந்துப்பிரிந்திட்டாரோ	தாதிகளா
காளியிவளென்றெண்ணி	தாதிகளா-யிப்போ
கைநழுகவிட்டாரோ	தாதிகளா
கணவரிருக்கையிலே	தாதிகளா-யிங்கே
கர்ன்னகிவாடலானேன்	தாதிகளா
துணைவரிருக்கையிலே	தாதிகளா-கொண்ட
தோகைப்புலம்பலானேன்	தாதிகளா
யெண்ணமழிந்துநானும்	தாதிகளா-புவியில்
யிருந்தென்னபலன்சொல்வீர்	தாதிகளா

இன்னுங்காலத்தில்யானும் தாதிகளா-யேங்கி
தெருவில்அலையலானேன் தாதிகளா
அன்றுமுதலாயானும் தாதிகளா-தேம்பி
அழுதுப்புலம்பலானேன் தாதிகளா
கன்றைப்பிரிந்தபசு தாதிகளா-தேடி
கதருவதுபோலானேன் தாதிகளா
திருக்கடையூர்தனக்கு தாதிகளா-சென்று
சேதியரிவதாக தாதிகளா
சுருக்குடன்ஓலையொன்று தாதிகளா-யானும்
தூருசாயெழுதவேண்டும் தாதிகளா

கர்ன்னகைசொல் அகவல்.

தேவரீர்திவ்ய திருவடிதனக்கு
ஆவலாயடியாள் அர்ச்சனைசெய்து
ஓலையைவாரி உந்தனைநாடி
வாலையாள்யெழுதும் வரிசைகேள்மன்னா
ஆதியிலென்னை அருமணம்செய்ய
சோதியாய்சபையில் தோன்றியதாசி
மாதகியோடு மன்னவாநீரும்
காதலுண்டாகி கடையூர்க்கேகி
பன்னிரண்டாண்டாய் பராமுகமாக
யென்னைநீர்விட்டு யிருந்திடலானீர்
கொண்டயுன்தேவி கோதைகர்னகையாள்
கண்டிடாதுன்னை கலக்கமுமாகி
தொண்டையில்ஆவி துடிக்குதேகாமல்
பண்டிதர்வந்து பரிகாரம்செய்து
உற்றார்பெற்றார் ஓடியேவந்து
சற்றும்யென்னாவி தான்விலகாமல்
பொன்னிழைத்தவர்கள் போடவென்னாவில்
என்னிடபிராணன் யேகிடேனென்குது
மன்னவாநீரும் வந்தென்னைக்கண்டால்
கன்னியாளுயிரும் கால்நாரேகும்
வாராதிருந்தால் மாளாதுசிவன்
நேராகவந்து நேசனேபோவீர்

என்னிடகைதாட் டிதுயிதைநன்ருய்
மன்னுவாகண்டுவரிந்திடுவீரே.

கர்ன்னகி சொல் கவி.

சிந்தையிற்பிரியமான சேயிழைமாரேகேளீர்
எந்தன்கையோலைதன்னை யெடுத்துநீர்கடையூரேசி
தந்துயென்கணவனுர்க்குச்சங்கதியரிந்துநீங்கள்
வந்துரைத்திடவேயிந்த வழிதுடர்ந்தேகுவீரே

கர்ன்னகிசொல் வசனம்

கேளுங்கள் தாதிமார்களே இந்தஒலையையெடுத்துதிருக்கடையூர்பட்டணம்போய் மாதகி தாசிவீட்டில் யிருக்கும் கணவர்கோவிலர்கையில் கொடுத்து பதில்வந்துசொல்லுங்கள் தாகளே.

தோழிகள் தரு.

ஓலைசுருளெடுத்து தாதிகள்
ஓங்குங்காவேரித்தனைகடந்தாள்
சேலையிடையிருக்கி யெதிர்
செல்லும்வழியரிந்தேதுடர்ந்தாள்
பாலைவனம்கடந்தாள் யிருண்ட
பக்கம்மலைக்குகைதான்கடந்தாள்
மாலைகுலிங்கிடவும் ஓடியே
மத்தியிலாருகள்சுனைதெரிந்தாள்
கங்காநதியிரங்கி யேரி
காரையடர்ந்துவனங்கடந்தாள்
சிங்கம்புலிகரடி நம்மை
சேருமென்றேபயந்தேநடந்தாள்
வனமாய்வனம்கடந்தாள் ஓடி
வந்தாள்திருக்கடையூர்வீதி
கனமானவர்த்தகனுர் அவரை
கண்டோலைதனை கைகொடுத்தாள் தன்னுதனதனனு

தாதிகள்சொல்-வசனம்.

சரணம் சரணமையா கோவிலரே உமதுதேவியாளாகிய கர்ன்னகையம்மன் யிந்தஓலையை உமதுகையில் கொடுத்து மருமொழிய

ரிந்து வன்கும்படியெங்களையனுப்பிவைத்தாள் யிந்தாரும் ஓலைசெட்டியாரே.

கோவிலன் சொல் கவி.

வந்துகைதந்த ஓலை வாங்கியேபிரித்துப்பார்த்து
சிந்தையும்கலங்கிநெஞ்சம் திடுக்கிட்டுபுவியில்வீழ்ந்து
பொந்தியிலரைந்துமோதி புலம்பிமாதகியைநோக்கி
சொந்தவூரேகிவாரேன் சொல்லுமென்றுரைசெய்வாரே

கோவிலன் சொல்-வசனம்.

அய்யய்யோ தெய்வமே யெனது தேவியாள்கர்ன்னகிஓலையைப்பார்க்கயென்மனம் பதருதே துடிக்குதே யென்றுபுலம்பிகோவிலர் மனவேதையோடு தன்னிட மிரானின்ற தாசியாகிய மாதகியை நோக்கி யேதென்றுசொல்லுகிரவிதங் காண்க.

கோவிலன் சொல் தரு.

மனம்பொருபீவ்வேளை மாதகியேநான்
வருகிரேன்போய்காளை
யெனதுமனைவியாளை யேகிகண்ணால்கண்டு
உனதுபஞ்சணைவந்து உலவுவேன்மனம்கொண்டு-மன

மாதகிசொல்; தரு.

என்னிலுமதிவடிவோ கர்ன்னகியுமக்
கேனிந்தமனமிடிவோ
பன்னிபன்னீபேசாதீர் பஞ்சணைதனிலேறும்
சின்னப்பொய்யோலைவந்தால் செல்கலாமோயிந்தாரும்-என்

கோவிலன் சொல் தரு.

அரியாதநாளையிலே கொண்டமனவி
ஆவிப்போம்வேளையிலே
பிரியமுடகிருக்கப் போகாதுன்னுடன்பேசி
தெரியாதவளைப்போலே செப்புராமகராசி-அரியா

மாதகிசொல் தரு.

கொண்டவள்மாண்டாளென்று அண்டையில்வந்து
கூறுருயென்முன்னின்று
சண்டாளாநானிருக்க தையலிரந்தாலென்ன
கண்டபேர்நகையாரோ கதையைக்கேட்டாலேமன்று-கொண்

கோவிலன்சொல்-தரு.

தாழ்வென்றுயெண்ணாதே மாதகிமனம்
தயங்கியேகுண்ணாதே
வாழ்வுக்குதவாவிட்டால் சாவுக்குதவவேணும்
யேழ்மைத்தனமரிந்து யேகுமென்றன்புபூணாய்-தாழ்

மாதகிசொல்-தரு.

அக்கரைதீர்ந்தாச்சோ வணிகனாரே
ஆனதாலிப்பேச்சோ
சக்கரையென்றகாலம் சரிப்பட்டுசிரந்தீரோ
யெக்காலமும்பிரியே ரென்றதைமரந்தீரோ-அக்க

கோவிலன்சொல்-கவி.

அக்கறைதீர்ந்தேனென்றும் ஆனதால்போறேனென்றும்
மக்கிடவேண்டாம்சொல்லி மனமகிழ்ந்தனுப்பிவைத்தால்
திக்காமலேகிமாதை நிமிஷத்தில்பார்த்துயானும்
பக்கலில்வருவேனுந்தன் பக்ஷமுமறந்திடேனே.

கோவிலன் சொல்-வசனம்.

கேளும் பெண்ணே மாதகி யென்னுடைய அக்கரைத்தீர்ந்து போய் விடுகிரதாகநினைந்து மனதில் விசனம் வேண்டாம் யிப்பவும் யென்னை அனுப்பிவைத்தால் நான்போய் கர்ன்னகை பத்தினியைப் பார்த்து வந்து சேருகிறேன் பெண்ணே மாதகி.

மாதகி சொல்-கவி.

எந்தனூர்க்கேகிவாறே னென்றுவுத்தாரங்கேட்கும்
சிந்தையிற்பிரியமுள்ள செட்டிமன்னவரேகேளும்
உந்தனைப்போலோர்பொம்மை உச்சிதமாகச்செய்து
தந்தபின்போவதர்க்கு தடையிலைதருகுவீரே.

மாதகிசொல்-வசனம்.

கேளும் யெனதாசைக்கிசைந்த வணிகனாரே நீர் போய் வருமிரவரையிலும் உம்மைப்போல் நான் பார்த்துயிருக்கதக்க வோர் பொற்பதுமை செய்துகொடுத்துவிட்டுப் போய்வாரும் நாயகா.

கோவிலன்சொல் ஜம்பை-தரு.

உந்தனைப்போல்பார்த்திருக்க ஓர்பதுமைதாருமென்றாள்
யெந்தவிதமாயளித்து யேகுவன்கர்ன்னகியே
பத்தினிநான்யுந்தனையும் பார்த்திடவுமிப்பொழுது
புத்துமண்ணாலேபதுமை பிடித்தேன்கர்ன்னகியே
கர்ன்னகையேயென்றுமிரு கண்களிலும்நீரொழுக
மன்னவன்போலேபதுமை வமைத்துக்களிப்பானர்
பதுமையதைதனையெடுத்து பார்த்தவள்தன்கைகொடுத்து
யினிமேலெனையனுப்பிவிடும் யேந்திழையேயென்றார்
யெந்தனுடன்பொற்பதுமை யேடித்துப்பேசியபின்
சந்தோஷமாய்யேகுமென்றாள் தயங்குரேன்கர்ன்னகியே
பாதகியேகேட்டபடி வந்துதுயிர்பாரடிநீ
பேதமில்லாதனுப்பிடுவாய் பெண்ணேபோய்வாரேன்

மாதகிசொல்-வசனம்.

ஆனால்போய்வாருமையாசுவாமி.

பொது-கவி.

போய்வாருமென்றுறைத்து ஓடிவந்து
பொற்பதுமைதனைபாற்க மாயமாக
வாய்பேசாதெரிந்திடவே கூவிகூவி
வயிரிலும்மார்பிலு மரைந்துமோதி
பேய்போலேஓடிவந்து மாமாவென்று
பிரியமுடனழைத்துவந் துட்காருமென்று
ஓய்பதுமையெரந்ததுபா றென்னசெய்வே
னென்றவளும்பகையெண்ணி யியம்புவாளே.

பொது-வசனம்.

மாதகியாகிய தாசியானவள் பதுமையை கூவிகூவிபேசாதிருக்க அரிகில் வந்துபார்த்து சவமாயிருக்கக்கண்டு நம்மை சூதுசெய்து போகிர வணிகனை நாம் அவமானம் செய்யவேண்டுமென்று மனதில் நினைத்து பேய்போல் பரந்து ஓடிவந்து ஓய்வணிகனாரே போகாதீர் வாருமென்றழைத்து வந்துநீர்கொடுத்த பொற்பதுமை யெரந்துபோய்விட்டது யென்று சொல்லிதடுக்க வணிகனாகிய கோவிலன் சொல்கிரவிதங்காண்க.

கோவிலன்சொல்-கவி.

யெரந்ததுபதுமையென்றும் யேகிடவேண்டாமென்றும்
கரமதைபிடித்திழுத்தக் கன்னியேசொல்லக்கேளாய்
மரந்திருக்கின்றேனெந்தன் மனைவியாள்சபித்ததாகும்
திரந்துவுன்வாயாலென்னை செல்லுமென்றுரைசெய்வாயே.

கோவிலன் சொல்-வசனம்.

வாரும் பெண்ணேமாதகி நான்வுன்னிடத்தில் பனிரெண்டு வருஷகாலமாய் தங்கினபடியால் மருக்கால்வரயில்லையென்று கர்ன்னகைஜபித்ததுபோல் காணுது யிப்பவும் யென்னை அனுப்பிவைத்தால் நான்போய் சலுதியாய் வருகிரேன்பெண்ணேமாதகி.

மாதகி சொல்-கவி.

போகவிடைதாருமென்ற வணிகனுரே
யெந்தனிடமொழியதனை நன்ருய்கேளும்
போகவொருதடையுமில்லை யுந்தன்மீதில்
பொற்பணி யருணகயர்சீர்சிலை
ஆகயிது முதலாக குடிமிமீசை
அருத்தபின்பற்காவி யதைசீவிதந்தால்
சோகமதுநீங்கிஉன்போல் பார்த்திருப்பேன்
துருசுடனேயேகிவிடம் வருகுவீரே.

மாதகிசொல்-வசனம்.

கேளுமையா வணிகனுரே பதுமை யெரந்துபோனபடியினுல் யிப்பவும் உமதுபேரில் பூட்டியிருனின்ற ஆடையாபரணங்களும் அருணகயர் சீலை பற்காவி குடிமிமீசை யிதுகளெல்லாம் கொடுத்தீரேயானுல் நீர்போய்வருகிரவரையினும் உம்மைப்போல் பார்த்துக் கொண்டிருப்பேன் தாரும்ஐய்வணிகனுரே.

கோவிலன்சொல்-தரு.

தாசிமாதகியாரேயிந்தா தந்தேன்தலப்பாகைவாங்கிடுவாய்
மாசிமருவிலாதமுத்து மாணிக்கக்கடுக்கன்யிந்தாரும்பெண்ணே
தங்கச்சரிகையுருமாலை தனியானபட்டங்கிவஸ்த்திரமும்
கங்கணம்காப்புகடகமும் கைக்கொலுசுக்கணையாழியிந்தா
காலில்ஜொலித்திடும்தண்டையும் கர்னகையாளிட்டகால்மிஞ்சியும்
வாலிபமாதகியேயுந்தன் வாக்குபோல்தந்துவிட்டேன்

மீசையுடன்குடுமிரெண்டும் மெல்லியேகொய்துகொடுத்தேனே
ஆசையுடயவளே அருணாக்கயர்சிலை யெனக்களிப்பாய்
வாழைப்பட்டைக்கொடுத்தாயிதை வாங்கிவரிந்துயிருக்கியபின்
யேழைபோலாகினேனென்னருணக்கயர்சிலை யெடுத்திடுவாய்
காவிசெதிக்கிடுவாய்பல்லைகாட்டினேன் வாய்திறந்தேவுனக்கு
ஆவியொன்றானவளேயென்னை அன்புடன்சொல்லியனுப்பிடுவாய்

மாதகிசொல் கவி.

எந்தனாள்செல்லுமோதான் யெந்தனைப்பார்க்கநீரும்
யிந்தநாள்பெண்ணையிட்டு ஸ்தானமென்கையால்செய்து
வெந்திடும்சாதமுண்டு வெத்திலைவாயிலிட்டு
சொந்தவூரேகிநீரும் துரிதமாய்வருகுவீரே

மாதகிசொல் வசனம்.

கேளும் ஓய்வணிகனாரே யெனைப்பிரிந்து நீர்போகிறபடியி னாலே யின்னம்யெந்தகாலஞ் செல்லுமோ தேவரீர்யெந்தன் கையி னால் ஸ்தானபானம்செய்து போஜனமுண்டுபோவீர் வாருமையாவ ணிகனாரே.

மாதகிசொல் தரு.

சந்தோஷமுடனெழுந்தார் கோவிலர்
தலையில்நல்லெண்ணையிட்டு தாளமிட்டாள்
முந்திவழிநடந்தாள் ஆற்றினில்
மூழ்கிடலாம்நன்றாய் வாருமென்றாள்
சரசரென்றேநடந்தாள் ஆற்றங்கரை
தானிதுவந்து உட்க்காருமென்றாள்
அரப்புகள்தானெடுத்து தடவியே
ஆனபின்றடியே தேடியவள்
ஓணான்கொடிபிடுங்கி கோவிலரை
யுருட்டியிருக்கிக் கைகாலைகட்டி
மாணக்கனீன்றமைந்தா யெழுந்திந்த
மடுவினில்ஸ்தானமும் செய்யுமென்றாள்
கள்ளனைப்போல்விழித்து கோவிலர்
கரைகடந்தாற்றினில் மூழ்கையிலே
பள்ளம்படுகுழியாய் பார்த்தவள்
பக்குவமாய்நெக்கியே முக்கிவிட்டாள்

கெங்கையிலழுந்தழுந்தி கிளம்பிட
கேலிப்பண்ணிதாசியும் நடந்தனளே
மங்கிமனங்கலங்கி கோவிலன்
மனைவியைநினைந்தழும் போனாலே
தேவியின்கிருபையினால் காவேரியில்
தெப்பம்போல்மிதந்தொதுங் கிருக்கையிலே
கோவிலநாருருவை தாதியர்
குரிப்பரிந்தோடினார் கூரிடவே-தனனதனதன

தாதிகள்சொல் கவி.

கர்ன்னகிதாயேஆற்றங் கரையிலுன்கணவன்குந்தி
சின்னமாஆடையில்லா திருக்குரார்வேடமாரி
மன்னவன்சேதிதன்னை வந்துனக்கரிக்கைசெய்ய
அன்னமேவந்தோமேகி அரிந்துநீவருகுவாயே

தாதிகள்சொல் வசனம்.

கேளுமம்மா கர்ன்னகிதாயேநாங்கள் ஆற்றில் குளித்துகரை யேரிவருகிரபோது உன்கணவன் கோவிலர் ஆடை ஆபரணவஸ்த்திரமில்லாமல் பரதேசியைப்போல் உருதெரியாமல் குந்தயிருக்குரார் நாங்கள்பார்த்துவந்தோம் நீபோய்பார்த்துவாருமதாயே கர்ன்னகி.

கர்ன்னகிசொல் கவி.

மன்னவாயென்னைவிட்டு மாதகியுடனேசென்று
பன்னிருவருஷமாக பாராமலிருந்தரங்கே
அன்னிதஞ்செய்துவுன்னை அருந்தகோருடியிதன்னை
கனினயாட்குரைதருவஸ்த்திரம் கட்டிவருகுவாயே

கர்ன்னகிசொல் வசனம்.

வாரும் யென்பிராணநாயகா உன்னையிவ்விதமான அலங்கோலஞ்செய்து அனுப்பினவர்களார் அதைதெரியச்சொல்லும் யிதோ வஸ்த்திரம் தந்தேன் உடுத்திக்கொள்ளும நாயகா.

கோவிலன் சொல் கவி

கண்டுயிர்வாடாநின்ற கர்ன்னகிமானேதேனே
ரண்டுநாளாகசாதம் நான்பொசித்திடவேயில்லை
உண்டிளைப்பாரிசற்றே உரக்கியபின்புயானும்
விண்டுநான்வந்தவாரை விபரமாயுரைசெய்வேனே.

10

கோவிலன் சொல்-வசனம்.

வாரும்பெண்ணே பிராணநாயகி யெனக்கானால்ரொம்பவும் பசியாயிருக்கின்றது யெனக்கு சாதம் தந்தால் யிளப்பாரி உரங்கிய பின்பு நான் வந்தவிபரங்களை ஆதியோடந்தமாய் சொல்லிவருகிரேன் பிராணநாயகி.

கர்ன்னகி சொல்-கவி.

எப்படிபசிபொருப்பே னென்றிடும்பிராணநாதா
அப்பளம்போளிலட்டு அதிரசம்வடைபாயாசம்
முப்பழம்தயிர்நெய்பாலும் முகந்தளித்திட்டேனன்றாய்
யிப்பவேநீருமுண்டு யிளைப்புகளாறுவீரே.

கர்ன்னகிசொல்-வசனம்.

தேவரீர் மனதைப்போல் யிதோசாதம் பரிமாரிவைத்தேன் போஜனம்செய்து களையாரும் பிராணநாயகா.

கோவில்ன்சொல்-தரு.

அய்யோயெப்படியிந்த அன்னத்தையெந்தன்கையால்
அள்ளிபொசிப்பநடி மாதகியே-உன்
கையாலெனக்குசாதம் களிப்பாயளிக்காமலே
கலங்குதேயெந்தன்னெஞ்சம் மாதகியே
பெண்ணேவுன்னினவாலே பிசைந்தசாதமும்வாயில்
போகாமல்கட்டுதே மாதகியே
கண்ணேயிப்போகதலி கனியெடுத்துன்போமென்றால்
கசக்குதென்வாய்களெல்லாம் மாதகியே
அப்பளம்போளிலட்டு அதிரசம்வடைகளும்
அகட்டிக்குமட்டுதடி மாதகியே
ஒப்பியுண்டாலும்வயர் உள்ளப்போமல்சாதம்
உதைந்துக்கிளம்புதடி மாதகியே
கொஞ்சியிருவோருமாய் கூடிசாதங்களுண்டு
குகாலன்பிரிந்தேனே மாதகியே
நெஞ்சிலென்னநினைந்து நின்றுதயங்குராயோ
நினைந்தால்துயராகுதே மாதகியே
தேம்பியழுதுவாடி தேடித்திரியுராயோ
திருக்கடையூரைவிட்டு மாதகியே

சாம்பலடைந்துமுகம் சாதமுண்ணாமலேங்கி
தத்தளிப்பாகினாயோ மாதகியே

கர்ன்னகிசொல் தரு.

கொண்டவளிட்டசாதம் மன்னவரே-யுமக்கு
கொமட்டியெடுக்கலாச்சோ மன்னவரே
கண்டவளிட்டசாதம் மன்னவரே-அது
களிம்பாயிருந்துதோதான் மன்னவரே
பெண்சாதியிட்டசாதம் மன்னவரே-யிப்போ
பிரட்டியெடுக்கலாச்சோ மன்னவரே
கண்காட்டும்தாசிசாதம் மன்னவரே-தின்ன
கர்க்கண்டாயிருந்ததோ மன்னவரே
பார்த்தவளிட்டசாதம் மன்னவரே-உத்து
பார்க்கமனம்வேகுதோ மன்னவரே
கூத்தியாளிட்டசாதம் மன்னவரே-மனம்
கொண்டுதோபொசித்திட மன்னவரே
அப்பளம்போளிலட்டு மன்னவரே-யிந்த
அதிரசமகட்டாச்சோ மன்னவரே
உப்புவரவோடுமுதல் மன்னவரே-நம்மை
உரிந்தவள்னினவாச்சோ மன்னவரே
மீசைக்குடுமிதாசி மன்னவரே-பரித்த
வேசியின்னினவாச்சோ மன்னவரே
ஆசையுடன்கர்ன்னகை மன்னவரே-வந்து
அளித்தசாதம்வேம்பாச்சோ மன்னவரே
அரணைக்கயர்சிலையும் மன்னவரே-உன்னை
அருத்தவள்னினவாச்சோ மன்னவரே
ஒருநாழியாகசாதம் மன்னவரே-குந்தி
உண்ணாமலிருப்பதேன் மன்னவரே

கோவிலன்சொல்-கவி.

என்னமாயுண்பேன்பெண்ணே யெந்திழைதாசியாட்க்கு
சொன்னதோர்மரக்கால்பொன்னும் தோகையேதந்தாயாகில்
அன்னமும்பொசித்துயேகி அளித்துசந்தோஷமாக
உன்னிடம்வந்துசேர்வேன் உத்தமியாளேதாராய்

கர்ன்னகிசொல்-தரு.

போகுதென்மனமேங்கியே வயரும்பத்தி
வேகுதிப்போதுயேங்கியே
போனால்வருவதில்லை பொரும்பொரும்துடியாதே
தானுயேகியேதலை தந்துயிர்மடியாதே-போகு.

கோவிலன்சொல்-கந்தார்த்தம்.

மடிந்துயிர்போவேனென்று மங்கையேமனதிலெண்ணி
யிடிந்துநொந்திருக்கவேண்டாம் யேகினான்மதுரைதன்னில்
முடிந்ததோர்விலைகள்பேசி முனதுசெஞ்சிலம்பைவித்து
கடிந்திடாமுன்னேவந்து.

கோவிலன்சொல்-தரு.

காவேரிவந்துசேருவேன் சிலம்பையிந்த
திவைவிட்டேகிகூருவேன்
காவேரிவாசகியே கர்ன்னகிமானேதேனே
ஆவனுடனேசிலம்பை அளியும்கைமீதில்தானே-காவேரி

கர்ன்னகிசொல்-கவி.

மன்னவாவுந்தன் மனமதுபோல
யென்சிலம்பதனை யீய்ந்தேனந்தாரும்.

கர்ன்னகிசொல்-வசனம்.

கேளும்யென்மன்னவரே உம்மிடமனம்போல் யென்சிலம்பை கழட்டித்தந்தேன் வாங்கிக்கொண்டு போகுவீர்மன்னவா.

கர்ன்னகிசொல்-தரு.

போய்வாரேனென்றுரைத்திர் போகும்வழியிலெதிர்
பொல்லாசகுணமாகுதே மன்னவாயிப்போ
சொல்லாதேமனம்வேகுதே

கோ-பொல்லாசகுணமெல்லாம் போயரிந்துநான்வாரேன
பூவையேநில்லும்நில்லும் அரண்மனைக்கு
பாவையேசெல்லும்செல்லும்

கர்ன்-செல்லுமென்றேநடக்கும் செட்டியாரேகுருக்காய்
செங்கருடனுமோடுதே சிரியும்ஆந்தை
வங்கைபோலதுஙாடுதே

கோ-நடுங்கெருடநாங்கை நற்கிரிவந்துமென்றாய்
நல்மாச்சேபத்தினியே யேகவும்வழி
பலமாச்சேஉத்தமியே

கர்ன்-யேகவும்பலமென்று யெடுத்துரைத்திர்மன்னவா
யெதிரில்வானரம்பாயுதே வலியன்பூனை
விதியின்முடிவேசாயுதே

கோ-சாயும்வலியன்பூனை நடுக்கவானரம்பாய
தான்கண்டால்கெலிப்பாகும் யில்வளதூரம்
என்வந்தாய்அலுப்பாகும்

கர்ன்-அலுப்பென்றெனக்குரைத்து அதர்க்குப்பின்யேகுரீரே
அரவம்வலமாபாச்சுதே விச்சுள்ளிகாகம்
ஆகாததுவும்போச்சுதே

கோ-ஆகாததுவுமென்ற அரம்விச்சுளிகாகம்
அகப்படாதுந்தனுக்கு யேகினால்வந்து
சுகப்படாதெந்தனுக்கு

கர்ன்-சுகப்படவோவிரகு தோகையெடுத்துவாருள்
துருசாய்நரியும்ஓடுதே கோட்டானும்கூவி
வருவாவாவென்றுபாடுதே

கோ-பாடுங்கோட்டான்விரகு பாயும் நரியும்கண்டால்
பலிப்பென்றுஅரிந்திடுவாய் போகுமிடங்கள்
கெலிப்பென்றிருந்திடுவாய்

கர்ன-போனால்சுகம்பெரவோ புலம்பியழுகுரார்கள்
புதுப்பானைமுன்வருகுதே பின்னால்நெருப்பு
புகையெழும்பியேதருகுதே

கோ புகையெழும்பும்நெருப்பு புதுப்பானையழுகுரல்
புரப்பட்டால்ஆபத்தில்லை நம்பியேகலாம்
குறைப்பட்டால்ரொம்பதொல்லை

கர்ன் ஆபத்துயில்லையென்றாய் வாணியன்யெண்ணைக்கொண்டு
வருவதுஉயிர்சேதம் போகதேவாரும்
மருமொழியேன்வாதம்

கோ வாதங்கள்பென்னையெண்ணை வாணியன்றனைக்கண்டால்
வந்திடுவேன்னொடியில் மயங்காதேநீ
தந்தனுப் ...பிந்தனொடியில்

கர்ன் கடியவனுப்புமென்ற கணவாசெம்போத்துகிள்ளை
காட்டோணான்காணுதையோ கொக்குமுசல்கண்டு
அரட்டையாய்காணுதையோ

கோ. அரட்டையென்றுசெம்போத்து கிள்ளைகாட்டோணானும்
ஆனால் துயரமொழிந்தேன் கொக்குமுயலும்போனால்
பயங்களொழிந்தேன்

கர்ன்னகி சொல் கவி.

ஒருபயமில்லையென்று உரைத்திடுமன்னாயானும்
வருகிறேனுந்தனோடு வாரும்நீர்மதுரைநோக்கி
யிருவரும்சென்றபின்பு யென்சிலம்பதனைவித்து
தருகுவாய்தாசிரொக்கம் தந்தபின்வந்திடீரே.

கர்ன்னகிசொல் வசனம்

கேளும் மன்னவாயிப்பேர்ப்பட்டசகுணம் தள்ளி உம்மைஒண்டியாக அனுப்பமாட்டேன்நானும் வருகுரேன்சிலம்பைவித்து தாசிகடனை கொடுத்துவருவோம் வாரும் மன்னவா.

கோவிலன் சொல் தரு.

வாரும்நீநடந்துயிந்த வழிகள்தன்னிலே-வந்து
பாரும்பெதிராகவைகை ஆருமுன்னிலே
கர்ன்-வையார்பிரங்கி யேரிவந்தேனேநில்லும் வழி
செய்கையெனக்குநன்றாய்தெரிய தெளியவேசொல்லும்
கோ-சொல்லும்வனபாலவனங்கள் தோகையேபாராய் யிதை
செல்லுவாயெதிரில்மலை தெரியுமேநேராய்
கர்ன்-பாலைவனமலைகுகைகள் பார்த்தபின்மன்னா யிந்த
சாலையாகதெரியுதென்ன சாற்றிடுமன்னா
கோ-காரைகூரைகிடாவனம் கன்னியிதுவே வெகு
பேரைக்கொன்றவேங்கையுண்டு பேசாய்மெதுவே
கர்ன்-வேங்கைவனம்தாண்டியாச்சு வேந்தனேபாரும் யிப்போ
யேங்குதுமனம்மதுரைகண்டு யிங்கேயுட்காரும்
கோவி-யெங்கைபோமதுரை நகரென்றிடுமானே யிதோ
சங்கையில்லாமல்பாரும் சன்னதிதானே
கர்ன்-சன்னதியைகண்டேனெந்தன் சஞ்சலம்தீர்த்தேன் யிப்போ
மன்னவாபசியாயுந்தன் மனையாளும்நலிந்தேன்.

கோவிலன்சொல் கவி.

போதவேபசிக்குதென்று புலம்பியமயிலேகேளும்
யாதவர்கிரகம்சென்றால் அகப்படும்நெய்பால்மோரும்
சாதமும்சமைப்பதர்க்கு தருகுரேன்அமுதுவாங்கி
பேதகம்யெண்ணிடாமல் பெண்ணேநீவருகுவாயே.

கோவிலன்சொல்-வசனம்.

கேளும்பெண்ணே கர்ன்னகியிந்த மதுரைப்பட்டணத்தில் யாதவாள்வீட்டுக்குப்போனல் மோர்நெய்பால்தயிர் அகப்படும் அமுது வாங்கி பேதகம்யெண்ணிடாமல் சமைத்து உண்டு யிளப்பாரிபோகலாம் பெண்ணே கர்ன்னகி.

கோவிலன்சொல்-கவி.

ஆரம்மாதாயேயிந்த யாதவாளிடவசத்தில்
கூரம்மாபசித்துவந்தோம் கோதையும்யானுமாக
பாரம்மாபரிதாபங்கள் பார்த்துமோர்அளித்தாயாகில்
பேரம்மாயிருக்கும்பாரில் பேசினேன்உண்மைதானே.

கோவிலன்சொல்-வசனம்

கேளுமம்மா யாதவர்களே யென்தேவியும் யானும்மாகபசியால் மெலிந்துவாடுகிரோம் யெங்களுக்கு நீர்மோர் அளிப்பாயாகில் வெகுநாளைக்கு உம்மிடபேர் பூமியில்விளங்குமம்மா தாயே.

பொது-வசனம்.

இப்படியாக கோவிலர் சொன்னதைக்கேட்டு யாதவவீட்டில் மோர்கொண்டு வருகிர விதங்காண்க.

யாதவாள்-தரு.

ஆரம்மாவென்றுசொல்லி அழைத்தசத்தமுங்கேட்டு
மோரதைமொண்டுயெடுத்து மெல்லியும்வாராள்
மெத்தப்பசியாகுதென்று விடுதியில்வந்துநின்ற
உத்தமர்களாரோவென்று ஒடியேவாராள்
சேலையிடைநழுகி தெத்தியிழுத்துவர
காலைப்பின்னினடந்து கண்டிடவாராள்
அரண்மனைதன்னில்பசி யானல்வந்தவருக்கு
சரசமுடன்வந்துமோரை தந்துப்பணிந்தாள்

கோவிலன்சொல்-கவி.

மெத்தபசியென்றவர்க்கு உதவிசெய்வோர்
மேதினியிலுந்தனைப்போ லாருமில்லை
உத்தமியேகாவேரிச் செனனம்நாங்க
ளுரைத்திடுவேன் குலமதிலேவணிகனுகும்
நத்தியெனைபார்த்தழுகு மாதகிக்கு
நாயகியாள்சிலம்பைவித்து அளிக்கவேணும்
பத்தியுன்னடைக்கலமாய் வைத்தேனிப்போ
பரிந்தவளைகார்ப்பதுவும் பாரந்தானே.

கோவிலன் சொல்-வசனம்.

கேளுமம்மாயாதவச்சிஉன்னைப்போல்உத்தமியைநாங்களெங்குங் கண்டதில்லைநாங்கள் காவேரியிருப்பிடம் எங்கள்ஜாதியோவணிகர் யெனக்கொருதாசி அவள்கடன்கிர யென்பெண்சாதிசிலம்பையிந்த மதுரையில்வித்து கொடுத்துவருகுமட்டில் யென்தேவியாரை உன அடைக்கலமாய் விட்டுப்போறேன் பதனமாககாத்துயிருமம்மாள் தாயே.

யாதவள் சொல் கவி.

வெண்ணைநெய்பாலுமோரு விளைவிடாதயிரும்
உண்ணவேதருவேன் உத்தமாபோவீர்

யாதவள் சொல் வசனம்.

தாங்கள்சொன்ன பிரகாரம் யென்விட்டில் பிராநின்றசகலமான அமிர்தமும்தந்து பதனமாக வைத்துக்கொண்டிருக்கிறேன் நீர் போய்வாரும் வணிகனுமே.

கர்ன்னகிசொல் கவி.

அடைக்கலமாய்வைத்துயென்னை மதுரைக்கேகி
அவசருமானபடி மான்மராகில்
யெடையர்அகத்தினிலிருக்கு மனையாட்சேதி
யெப்படிதான்காண்பேன் வதுசொல்மன்னு
தடைகளிலாதெனைப்பறைத்து மதுரைவிட்டு
தாசியருக்களிக்கசிலம் பதனைவித்து
நடைநடையாயேபேசியவள் களித்திடின்பு
நாடியெக்தனிருப்பிடமே வந்துசேர்வீர்

கர்ன்னகிசொல் வசனம்.

கேளும்மன்னவரே யென்னைவிட்டு மதுரைக்குப்போகுரீர் அவசகுனப்படிக்கி உமக்குத்தாழ்வுவந்தால் யெப்படியெனக்குத்தெரியும் அதைசொல்லும் மன்னவரே.

கோவிலன் சொல் கவி.

நீதியில்லாபாண்டியநிட மதுரைதன்னில்
  நீயவடம்வரத்தகுதி யல்லபெண்ணே
சோதியாயோர்திருவிளக்கு யேத்திவைத்தேன்
  சோதினைப்பார்மாங்கனியும் தேங்கனியும்வைத்தேன்
ஜாதிமல்லிபுஷ்ப்பம்வைத்தேன் யானுமங்கே
  சபமாகில்விளக்கவியும் புஷ்ப்பம்வாடும்
பாதியாய்தேங்காயுடையும் பழமுஞ்சோரும்
  பார்த்திடுவாயடையாளம் பதராய்பெண்ணே.

கோவிலன் சொல் வசனம்

கேளும் பெண்ணே கர்ன்னகி நீதியில்லாத பாண்டியநிட மதுரைப்பட்டணத்தில் நீவரவொண்ணாது ஆகையால் திருவிளக்கேத்திவைத்தேன் மாங்கனிதேங்கனி சாதிமல்லிபுஷ்ப்பம் வைத்தேன் நான் போகிரவிடத்தில் மாண்டுப்போவேனாகில் விளக்கவியும் தேங்காய் உடையும் மாங்கனிதேன்கனிவாடும் புஷ்பங்களெல்லாம்வாடிப்போம் யிது அடையாளம் பார்த்துக்கொள்ளும் பெண்ணேகர்ன்னகி.

பொது-கவி.

கர்ன்னகிக்குஅடையாளம் தந்தபின்பு
  காவேரிவணிகனுங்கால் சிலம்பையேந்தி
மன்னவர்கள்மதுரையிலே வேணபேர்கள்
  வாங்கிடுவார்விலைகூரி வருவோமென்று
மின்னலொளிமழுங்கிடும்பொற் சிலம்பையேந்தி
  விசையுடனேவழிநடந்து வருகும்போது
சென்னிமுடிபூண்ட பாண்டியனுந்தேவி
  இலம்பொடியமந்திரியோ டுரைசெய்வானே.

பொது- வசனம்.

இப்படியாக யிருக்கிரசமையத்தில் பாண்டியன் பெண்சாதி கால் சிலம்பு ஒடிந்தபடியினால் பாண்டியன் மந்திரிகளுக்கு சொல்லு கிரவிதங்காண்க.

பாண்டியன் சொல்-கவி.

யென்னிடமந்திரிமாரே யியம்புவேன்கேளீர்தேவி
கன்னிகோவிலங்கியாளின் காற்சிலம்பதுமுரிந்து
வின்னமாயிருக்குதிப்போ வேலைசெய்வஞ்சிபத்தன்
தன்னைநானழைத்தேனென்று தருவித்துவருகுவீரே.

பாண்டியன் சொல்-வசனம்.

கேளுங்கள் மந்திரிகளே யென்னிடதேவியாள் சிலம்பு ஒடிந்து விட்டதாம் அது செய்யும்படி தட்டாரவன்னிபத்தனை அழைப்பித்து கொடுத்துசொல்லும்மந்திரி அந்தசமையத்தில் வஞ்சிபத்தன் வரு கிரவிதங்காண்க.



வஞ்சிபத்தன் வருகிர-கவி,

மந்திரிவசனம்கேட்டு வஞ்சிபத்தனெழுந்து
சிந்தையுமகிழ்ஷியாகி திருநீருநெத்திலிட்டு

சந்தணப்பொட்டணிந்து தரணியாள்பாண்டியராஜன்
யெந்தனையழைத்தம் தன்று வென்றவன்வருகின்றானே.

வஞ்சிபத்தன்வருகிற-தரு.

வஞ்பத்தனும்நானே பணிகள்செய்து
மாரும்யெத்தனும்நானே
வஞ்சிபத்தனும்நானே வாங்கும்கொடுக்கேனே
கெஞ்சிஓயாமல்கேட்டால் கிளம்பாமல்படுப்பேனே-வ
ஏழைகள்தரும்பணம் யெந்தனுக்கதுவாட்டம்
வாழைப்பழமாவாயால் வாவென்றெடுப்பேன்ஓட்டம்-வ
பருத்தசமுசாரத்தில் பாதிபங்கெனக்குண்டு
நிருத்துயிருத்துவிடுவேன் நிதானமரிந்துக்கண்டு-வஞ்
தங்கைமங்கில்யத்திலும் தரிப்பனுன்துண்டாமே
யெங்கையென்றால்நாளைக் கென்றுரைக்கும்வழக்கமே-வ

வஞ்சிபத்தன் செல்-கவி.

மன்னனேயுந்தன் மலரடிசரணம்
இயன்னையிச்சபையில் யேனழைத்திட்டீர்

வஞ்சிபத்தன் சொல்-வசனம்.

சரணம்சரணமையா ராஜகெம்பீரா அடியேனை அழைப்பித்த சேதியின்னதென்று தெரிவிக்கவேண்டும் ராஜசேகரா.

பாண்டியன் சொல்-கவி.

வஞ்சிபத்தனேகேளுந்தன் மனவிகால்சிலம்பொடிந்து
நஞ்சியேயிருக்குதிந்தா நாளையந்தினத்தில்செய்து
கொஞ்சியதேவியாட்கு கொடாதிருந்தாயேயாகில்
பஞ்சுபோலுந்தன்சென்னி பரக்கடித்திடுவேனனே.

பாண்டியன் சொல் வசனம்.

கேளும்பத்தனே யென்மனைவியாள் கால்சிலம்புஒடிந்து விட்டது யிதைநாளையப்பொழுதுக்குள் சுத்தப்படுத்தி கொண்டுவந்து கொடுக்காவிட்டால் உன்னைசிரசாக்கினை செய்வேன் யிந்தாபெற்று க்கொள்ளும் வஞ்சிபத்தனே.

பொது கவி.

பாராளும்பாண்டியராஜன் பாரியாள்சிலம்பைவாங்கி
சீராகசெய்வோமென்று சிந்தையில்நினைவதாக
நேராகவிடுதிவந்து நின்றதோர்சுவரின்மீதில்
மாராதபசியினாலே வைத்தவன்யேகினானே.

பொது வசனம்.

இப்படியாக வஞ்சிபத்தன் ராஜாவினிடத்தில் சிலம்பைவாங்கிவந்துதன்பசியால் வீட்டு அரைச்சுவரின்மீது வைத்து சாப்பிடப்போகையில் பசியால்மரந்துபோன பின்புகெருடாழ்வார் சொல்லுகிற விதங் காண்க.

கெருடன் சொல் தரு

ஆராச்சுவரில்வைத்த சிலம்பை
அழகும்கெருடன்கண்டுதே
போரானேபோஜனம்செய்ய வென்று
பிள்ளைநினைவைவிட்டுதே
யிரந்ததோர்பிள்ளையெழுந்தாற் போல
யெண்ணிமனம்பொங்காச்சுதே
பரந்துஓடிசிலம்பைக் காலில்
பத்தியெகிரிப்போச்சுதே
யேழுகடல்தான்தாண்டி அங்கே
யிருக்கும்புத்தில்ஒளித்துதே
வாழுங்குலைந்துமடிவான் வஞ்சி
பத்தன்யென்றுக்களித்துதே
யிருந்தயிடத்தில்வந்து குந்தி
யெட்டியெட்டிப்பார்க்குதே
இருந்தப்பொகித்துவஞ்சி பத்தன்
சிலம்பைத்தேடிவேர்க்குதே

பொது கவி.

சிலம்பதைவஞ்சிபத்தன் தேடியேமனதுவாடி
கலங்கியேபுவியில்வீழ்ந்து கரத்தினால்மோதிமார்பில்
புலம்பியேயினிமேல்யானும் பிழைத்திடேனென்றுயெண்ணி
சலம்பெரிகிடவேகண்கள் தலையுடைத்தலருவானே.

பொது-வசனம்.

இப்படியாக சிலம்பைக்காணமல் மார்பிலும்வாயிலும் வயரிலு ம்ரைந்துக்கொண்டு புரண்டு அழுதுக்கொண்டு பேசிதனறு சொல்லுகிரவிதங்காண்க.

வஞ்சிபத்தன் சொல் தரு.

ஏதுசெய்வேன்
என்றுசெய்வேன்
பொறுத்திருமேவாரீர்மகிதவா
மன்னன்பாண்டியனும்தந்த
மணிசிலம்புமாயமாச்சே
அராக்ஷவர்தன்னில்வைத்து
அன்னமும்பொசித்தேனையோ
போருமையிலுமேயாரோ
பொற்சிலம்பையொளித்தாரையோ
நாளைய தினத்தில்
ராஜனுக்களிக்காவிட்டால்
ஜனகள்சிரிப்போமே
மோசம்செய்தபாவியாரோ
பெண்டுபிள்ளையையிழந்தேன்
பிரிந்தேதமனைக்காணலானேன்
உண்டென்றுசொடுப்பாரில்லை
உடலழியப்போரனையோ
மனைவிமஞ்சள்பொட்டிழந்தாள்
மங்கிலியம்தானிழந்தாள்
எனதுயிரைநாளைபாண்டியன்
யெப்படியும்காவிடுவான்
நினைவுதடுமாறுதையோ
நெஞ்சலர்ந்துபோகுதையோ
சினம்பெருகும்பாண்டியனுக்கு
சேதியென்றுசொல்வேனையோ
மாயமாய்ச்சிலம்புபோச்சு
மடியாயின்றளுமாச்சு
சேயருமனைவியாளும்
தியங்கியேவாடலாச்சு
ஞாயமோசிவனேயென்று
நலந்தவனிருக்கும்போது
கோவிலசின்லம்புவிர்க்க
கூரியேவருகின்றானே.

பொது-வசனம்.

இப்படியாக வஞ்சிபத்தன் புலம்பிக்கொண்டுயிருக்கிரபோது அத்தெருவில் கோவிலன்சிலம்பை விலைகூரிவருகிரவிதங்காண்க.

கோவிலன்சொல்-தரு.

சிலம்பு
சிலம்போசிலம்போ
சிலம்போசிலம்பு
தென்மதுரைப்பெண்கள்
கொள்வாருமுண்டோ
பச்சைச்சிலம்பை
கொள்வாருமுண்டோ
பத்தினியாள்சிலம்பை
கொள்வாருமுண்டோ
உத்தமியாள்சிலம்பைக்
கொள்வாருமுண்டோ
உமையவள்பொற்சிலம்பைக்
கொள்வாருமுண்டோ
ரிக்தச்சிலம்பை

யிதர்க்கேத்தவிலைகண்டு யீய்வாருமுண்டோ
தென்மதுரைப்பெண்கால் செலம்போசெலம்பு
தேவியுண்டானவர்க்கு சிலம்போசிலம்பு
வெள்ளானைக்கட்டினன் வாழ்ந்ததும்போதும்
வேசிமருந்தாலேநான் ஞைந்ததும்போதும்
தங்கானைக்கட்டிநான் வாழ்ந்ததும்போதும்
தாசிமருந்தாலேநான் ஞைந்ததும்போதும்
மூவாயிரங்கப்பல் தண்ணீரில்விட்டேன்
மோகத்தினலிங்கே விர்க்கவும்வந்தேன்
கப்பலும்சோங்கும் கரைதட்டிப்போச்சு
கடனுக்குநானிங்கே விர்க்கவும்வந்தேன்
வர்த்தகம்கெட்டுயிங்கே சிலம்பெடுத்துவந்தேன்
வாழ்மதுரைதன்னில் சிலம்புகொள்வீரோ-சிலம்

வாத்தியார்சொல்-கவி.

வீதியினில்சிலம்பு விலைக்கூரிவந்த
வேதாந்தியானவரே நில்லுநில்லு
நீதியில்லாதலையருக்கும் மதுரைதன்னில்
நீயேகநலமல்ல னிந்தைசெய்வார்
ஜாதியிலேதாசியென்றமாதகிக்கி
தந்திடுவேன்காருவைவித்துதாரேன்
சேதிபதில்சொல்லாமல் பழம்பால்உண்பாய்
ஸ்ரீரங்கஉபாத்தியரும் செப்பினேனே.

வாத்தியார்சொல்-வசனம்.

ஓ சிலம்புவிர்க்கும் வேதாந்தியாரே நான் சொல்வதைக்கேளு ம் நீதியில்லாமல் தலையருக்கும் பாண்டியன் மதுரைபட்டணத்தில் போனதேயாமாகில் உம்மைப்பழிசெய்வார் யிதோயெனது காராம் பசுவைவித்துதாரேன் யென்னிடம்பால்பழம் சாப்பிட்டுபிரகு தாசி கடன் திருமையா நான் சொன்னேன் கோவிலரே.

கோவிலன்சொல்-கவி.

செப்பிடும்ஒய் ஸ்ரீரங்கவாத்தியாரே
திருவுளத்தின் செயலதுபோலாகுமல்லால்
தப்புவொன்றும்நேராது பிசகிவேரே
தந்தபழம்பால்அன்னம் உண்டேனையா

கப்புவென்பசிகளையும் விண்டேனுந்தன்
காராவும்போதாது கடனுக்கிய
யெப்படியும்மதுரையிலே சிலம்பைவித்து
யீய்ந்திடவேபோய்வாரேன் யிருந்திடீரே.

கோவிலன் சொல்-வசனம்.

கேளும் ஸ்ரீரங்கவாத்தியாரே நீர்தந்தபால்பழம் உண்டு யிளப்பாரினேன் ஆகையால் உமது காராம்பசுவை வித்தபோதிலும் தாசிகடனுக்காகாது யென்தலையிலெழுத்துபோலாகும் யெப்படியாகிலும் வித்துக்கொண்டு தாசிகடன்கொடுத்து வருகிரேன் நான்போய் வருகிறேனையா உபாத்தியாரே.

கோவிலன்சொல்-தரு.

ஸ்ரீரங்கவாத்தியார் சொல்தட்டிவந்தேன்
தென்மதுரைபெண்காள் சிலம்புக்கொள்வீரே
காவேரிதன்னில் பிரந்ததும்போதும்
கண்காட்டும்தாசிக்கி யீய்ந்ததும்போதும்
தீவெங்கும்சுத்தி திரிந்ததும்போதும்
திரேகமெங்கும்புண்ணாய் நொந்ததும்போதும்
தாசிக்கிறுக்கமும் தந்திடவேணும்
தனிமதுரைபெண்காள் சிலம்புக்கொள்வீரே

பொது-கவி.

கோவிலனும்மதுரையினில் சிலம்போவென்று
கூரிவரும்போதினிலே வஞ்சிபத்தன்
ஆவியொழிந்திடபாண்டியன் செய்வானென்ற
அழுகுரலையிட்டவனும் ஓடிவந்து
கூவியவன்சிலம்புடனே களவாக்கி
கொண்டரசன்முன்விடுவோ மென்றுயெண்ணி
தாவியிருகரத்தாலும் தழிவியெந்தன்
தமையநிடபுதல்வனென்றே சாற்றுவானே.

பொது வசனம்.

இப்படியாக கோவிலன் சிலம்புவித்து வருகிரவனைக்கண்டுவஞ்சிபத்தன் அழுகுரலைவிட்டு ஓடிவந்து சிலம்பைகைகொள்ளுகிரவிதமாய்கோவிலனை அணைத்துத்தழுவி கட்டிக்கொண்டு யேதென்று சொல்லுகிர விதங்காண்க.

வஞ்சிபத்தன்சொல் தரு

தமையனார்யீன்ற தனையன்போலாகுதே மகனே-சின்ன
தந்தையான்காணத் தயங்குதேயென்னெஞ்சம் மகனே
பள்ளியில்நீயும் படித்திடும்நாளையில் மகனே-உன்னை
டார்த்துயனைவோரும் பக்ஷமுண்டானோமே மகனே
வாத்தியாரடிக்க வனவாசம்போனாயே மகனே-உன்னை
வந்தெங்குந்தேடி வலைந்துக்காணாமலே மகனே
தந்தைதாய்நாங்களும் தயங்கிப்புலம்பியே மகனே-உன்னை
சாதமுந்தங்காமல் தரையைத்துழவினோம் மகனே
நித்ரையில்வுன்னிட நினைவாயிருந்தோமே மகனே-அந்த
நினைவாகிவுன்னை நினைந்திடும்வேளையில் மகனே
வீதியில்வந்து விலைகூறிவந்தாயே மகனே-நம்ம
விடுதியில்சத்தங்கேட்டு வெழுந்தோடிவந்தேனே மகனே
வநதுன்னைபார்க்கவென் வயருமெரியுதையோ மகனே-பசி
வாண்தயினாலெங்கே வாங்கிசோருண்டாயோ மகனே
பால்பழம்சர்க்கரை பசிக்கிப்பொசித்திட மகனே-வைத்தேன்
கால்கைமுகமும் கழுகியேவந்திடாய் மகனே

கோவிலன் சொல் கவி

கைகால்முகமும் கழுகியேவாரேன்
வையும்சிலம்பை வந்தபின்தருவீர்

கோவிலன் சொல் வசனம்

கேளுமையாபத்தரே நீர் சொன்னபடிக்கி கைகால் சுத்திசெய்துக்கொண்டு வருகிறேன் யிந்தசிலம்பையும் யிந்தா பிடித்துக்கொள்ளும் பத்தரே.

வஞ்சிபத்தன் செய்-நொண்டிச்சிந்து.

தந்திடும்சிலம்பையெடுத்தான் வஞ்சிபத்தன்
தவடையிலடித்திரு கரம்பிடித்தான்
மைந்தரேவாருமென்றான் திருடனும்
வகப்பட்டான்சிலம்புடன் பாருமென்றான்
மூவரும்கூடிக்கொண்டார் முதுகினில்
முன்னும்பின்னும்பாரமலே மோதியடித்தார்
தீவதைத்திலும்பிடவோ அகப்பட்டாய்
திருடன்திருடனென்று தெரிவிலெழுத்தார்

கம்பளிகயரெடுத்தார் புயங்களில்
கட்டியிருக்கியெட்டி காலாலுதைத்தார்
வம்பனேநடவுமென்று மண்டையில்
வரட்டுலக்கையெடுத்து மாரியடித்தார்
உதிரங்கள்பெருகிடவே மூவரும்
ஓய்ந்துஓய்ந்தடித்திட புலம்பிடவே
எதிரினில்அரசனிட கொலுவினில்
யிழுத்துவந்தான்சிலம்பை யொளித்தானென்றான்-தந்தி

வஞ்சிபத்தன் சொல்-கவி.

இன்னகருளும்பாண்டிய யிருஜரேசருணங்கேளீர்
என்னிடத்தினிலேதந்த யிரத்தினசிலம்புதன்னை
கன்னமும்செய்தான்யாளும் கண்டுகைகளவோடுந்தன்
முன்னமேகொண்டுவந்தேன் முகிவுசெய்தனுப்பிடிரே.

வஞ்சிபத்தன்சொல்-வசனம்.

சரணம் சரணமையா ருஜேஜந்திரா யென்னிடத்தில் நீர் கொடுத்தசிலம்பை செய்துவைத்தேன் அதையிந்ததிருடன் கன்னக்களவு செய்து யெடுக்கும்போது நான் கண்டுபிடித்துஉம்மிடம் கொண்டு வந்துவிட்டேன் யெனக்குவிடைதாரும் நான்போய்வருகிரேன் ராஜேந்திரா.

பாண்டியன்சொல்-கவி.

சேவகமாரேநமது சிலம்புடன்கள்ளன்தன்னை
கூவவேயிருக்கிக்கட்டி கொண்டிதோவந்துயெந்தன்
நாவதுபோலேயேகி நடனவொய்யாரியாட்க்கு
காவதுகொடுத்துரத்தம் கைதனில்கொண்டுவாரீர்.

பாண்டியன் சொல்-வசனம்.

கேளும்சேவகமாரே நம்மிடசிலம்பை அச்சம்பயமில்லாதபடிக்கிவஞ்சிபத்தன் வீட்டில் கன்னங்களவுசெய்த திருடனைகையுங்களவுமாகபிடித்துவந்து நம்மிடம்விட்டான் அவனைகொண்டுபோய்காளிகோவில் யெதிரில்நிருத்தி வெட்டிப்போட்டு வாருங்களப்பா சேவகமாரே.

சேவகர்சொல்-கவி.

மன்னவரேகள்ளன்மொழிக் கேட்கவேண்டும்
வஞ்சிபத்தன்அதர்க்குபதில் சொல்லவேண்டும்
யின்னவிதமென்றதைதீர் அரியவேண்டும்
யெடுத்துசட்டப்படிதீர்ப்பு செய்யவேண்டும்
கன்னஞ்செய்தானென்றவனும் சொல்லக்கேட்டு
காளியருக்கிவனைபெலி யிடுங்களென்ற
அன்னீதநீதியிதைப் போலேயிந்த
அவனிதனில்கிடையாது அரிகிலோமே.

சேவகர் சொல்-வசனம்.

கேளுமையா ராஜேந்திரா ஆ ஆ நல்லவார்த்தைப்புகன்றீர் உம்மைப்போல் அரசர் யெங்குங்கிடையாது யேனென்றால் திருடனுடையவாய்மொழிகேட்டு அதர்க்குப்பதில் தட்டான் சொல்லவேண்டும் அதை ஆராய்ந்துசட்டப்படி தீர்ப்புசெய்யவேண்டும் அதைதள்ளிவிட்டு நிர்கிமித்தியமாய் வாதிமூலம் கேட்காமல் ஒருதலைவழக்காய் சொன்னதைகேட்டு சிரசாக்கினை செய்யச்சொல்லும் ருஜாக்களையிந்த பூமியிலெங்குங் கண்டதில்லை ராஜனே.

பாண்டியன் சொல்-கவி.

கள்ளனென்றுன்னை கட்டியேபத்தன்
தள்ளிவந்திட்ட சங்கதிசொல்வாய்.

பாண்டியன்சொல்-வசனம்.

வாருமப்பாகள்ளனே வஞ்சிபத்தன் உன்னைப்படித்து கட்டிவந்ததும் உன்கையில் சிலம்புவந்ததும் யின்னசங்கதியென்று சொல்லும்பிள்ளாய் கள்ளனே.

கோவிலன்சொல்-தரு.

என்னென்றுரைப்பேனையோ	யீசன்அளித்தவயது
யின்றேடேமுடிந்துதையோ	பாண்டியரே
கன்னம்செய்தேனென்று	கட்டியிழுத்துவந்த
கதையையுரைப்பேன்கேளும்	பாண்டியரே
பிறந்தயிடங்காவேரி	பேருங்கோவிலனென்பார்
யெண்சாதிகன்னகையாள்	பாண்டியரே
சிரந்தமாணக்கனென்னும்	செட்டியெனதுதந்தை

தேடியதனமெல்லாம் பாண்டியரே
திருக்கண்டையூர்மாதகி தேவரடியாட்கியந்து
செப்பிவந்ததைக்கேளும் பாண்டியரே
யிருக்குமரக்காலொன்று யேந்நிழைக்குபொன்யானும்
யிவனென்றேகிவந்து பாண்டியரே
மனவிகால்சிலம்பைநான் வாங்கிமதுரைதன்னில்
வந்துவிலைகூறினேன் பாண்டியரே
தனுவாயென்னிடம்வந்து தமையன்மகனேயென்று
தட்டானுமழைத்தேகி பாண்டியரே
பாலும்பழமும்வைத்து பசிக்கிப்பொசித்திடென்றான்
பாவியைமெய்யென்றுநம்பினேன் பாண்டியரே
காலுங்கழுகிடவே கையில்சிலம்பைத்தந்தேன்
கையுங்களவாக்கினான் பாண்டியரே
கயரெடுத்திருக்கியே கட்டிமூவருங்கூடி
கசக்கியிழுத்துவந்தார் பாண்டியரே
தயவினிவேரில்லை சத்தியமாயுரைத்தேன்
சங்கதியிதுதானே பாண்டியரே

பாண்டியன்சொல்-கவி.

கள்ளன்மொழிகூருவதும் குடுமிமீசை
காணுமலிருப்பதையும் பாரும்நீங்கள்
உள்ளபடிகூத்தியருக் களிக்கவென்று
உலகினிலேதிருடிபங்கமானதாகும்
யெள்ளளவும்நம்பிடவே கூடாதிந்த
யிடக்கணையும்காளியருக் கெதிரில்வெட்டி
தள்ளவிருசேவகரே யேகிநீங்கள்
தடைகளிலாதலையருத்து வருகுவீரே.

பாண்டியன் சொல் வசனம்.

வாருமப்பாசேவகரே யிவனேவந்து கூத்தியருக்கு கொடுக்க ஆசைவைத்து திருடிதிருடியிவனை மொட்டையடித்து மீசையருத்து அகப்பட்டவன் யிவன்னம்முடைய சிலம்பையொளிக்கசந்தேகமில்லை யிவனைக்கொண்டுபோய் நம்மூர் காளிகாதேவிக்கி பலிகொடுத்து வாருங்கள் சேவகரே.

கோவிலன் சொல் புலம்பமல் தரு

என்னசெய்குவேன்சிவனே யேதுசெய்குவேன்-யென்னை
யிழுத்துப்போவென்றுதலையி லடிக்குறார்களே
கர்ன்னகிசொன்னசொல்லை கடந்துவந்தனே-யிந்த
கால்சிலம்பினுல்கள்ள நாகினேந்தனே
கப்பல்பேரமும்செய்த காலம்போச்சுதே-தாசி
கடனடைத்திடவந்து கதரலாச்சுதே
எப்படிஉயிர்மீண் டிருக்கப்போகுரேன்-யெனக்
கிடர்நினைந்துதேதெய்வ மென்றுநோகுரேன்
பஞ்சணைதனில்படுத் திருந்துதேவுடல்-பாவி
பாண்டியநுரையைக்கேட்டு பதருதேஜடலம்
வஞ்சகம்நினைந்தோர்யென்போல் மாளவோநாளை-தேவி
வந்துமண்டைகள்சிதரவுதிரம் யெடுப்பாளோதான்மூளை

சேவகர்சொல் கவி

கட்டியேகள்ளன்தன்னை காளியினெதிரில்வந்தோம்
அட்டிகளென்னுதம்பி அரசனுக்கிணையைப்போல
வெட்டியேசென்னிதன்னை வெடுத்துதிரத்தைக்காட்ட
வெட்டியேநடக்கவேண்டும் யெழுந்துநீவீசிடாயே

சேவகர்சொல் வசனம்.

வாரும் சினேகிதா நம்முடைய யெஜமானுகிய பாண்டியராஜன் உத்தாரப்படிக்கியிந்தகள்ளனுடையசிரசை உன்கையிலிரானின்றவாளினுல் வீசிவிடும்தம்பி சேவகா.

சேவகன் சொல் கவி.

கட்டியேவந்த கள்ளனைவாளால்
வெட்டினேன்சென்னி வீழ்ந்ததுபாராய்

சேவகன் சொல் வசனம்.

கேளும் அண்ணேகள்ளனுடைய சிரசை யிதோயிருதுண்டாய் வெட்டினேன்பாரும் அண்ணே.

பொது கவி.

சென்னிகண்டித்துரத்தம் சேவகர்கையிலேந்தி
தன்னிடவரசன்முன்னே தாண்டியேவருகும்போது

மன்னவன்தந்துபோன வடையாளந்தன்னைப்பார்த்து
கர்ன்னகிதணவன்தன்னை காணவேவருகுருளே.

பொது வசனம்.

இப்படியாக கோவிலனை சேவகர்காளிபிடனதிரில் கொண்டுவந்து சிரசையருத்துபோக யாதவாளிட வீட்டில்பிருந்த கர்ன்னகியம்மனுக்குகோவிலர்கொடுத்த அடையாளம் தவரிப்போக கணவனுக்கு யேதோகெடுதிநேரிட்டது யினிசும்மாயிருக்கலாகாதென்று வருகிரவிதங்காண்கா.

கர்ன்னகி யாதகிக்கிசொல்-கவி.

மோருபால்தயிர்நெய்வெண்ணை முகந்தளித்திட்டதாயே
பாரும்நீஅடையாளங்கள் யென்பத்தாவுமாண்டேபோனர்
நேருடன்யேகியானும் நிலையரிக்திடவேவேனும்
கூரும்நீபோய்வாவென்று குருக்குசொல்லாதேயம்மா.

கர்ன்னகிசொல்- வசனம்.

கேளுமம்மாயென்னை பாதுகார்த்து அமுதளித்த யாதவதாயே யெனக்குயென்புருஷன் கொடுத்த அடையாளம் ஒன்றும்சரியாயில்லை நான்போய்பார்த்து வருகிரேன் செலவுதாரும் தாயே.

யாதவியாள்சொல்-கவி.

உத்தமிதாயே உன்மனம்போலே
புத்தியாயேகி புருஷனைப்பாராய்

யாதவியாள்சொல்-வசனம்.

கேளும் உத்தமியேயிந்த நீதியில்லாமதுரையிலே புத்தியாய் சென்று பார்த்துவாரும் தாயேகர்ன்னகி.

கர்ன்னகிபுலம்பல்-தரு.

எங்கைக்கண்டுதேடுவேனுன் யென்னுடையமன்னன்தன்னை
சங்கராவுன்செயலிதுவோ தையலும்புலம்பலானேன்
கல்லெரடிகால்களெல்லாம் கசிந்துரெத்தங்காணுதையோ
கொல்லுதேதுரட்டுமுள்ளுங் கூந்தலைப்பிடித்திழுத்து
சேலையைச்செடிகள்பற்றி சின்னபின்னஞ்செய்யுதையோ
மாலைப்பொழுதாகாமுன்னம் மன்னவனைக்காணவேணும்
அன்னமேகருங்குயிலே ஆளனையுங்கண்டதுண்டோ
கொக்குகள்குருவிகள்ா கொற்றவனைக்கண்டதுண்டோ

நிர்க்கும்மதயானைகளா	நேசனையும்கண்டதுண்டா
யெங்கும்திரிந்துவோடும்	யேனங்களாகண்டதுண்டோ
சிங்கங்கரடிகளா	சேதியென்னுசொல்லுவீரே
ஆடுமேய்க்கும்அண்ணமாரே	அரிந்திருந்தால்சொல்லுவீரே
மாடுமேய்க்குமைந்தர்களா	மதுரையதிசயமென்னு
சொல்லவேணும்யெந்தனுக்கு	சுகம்பெருவீர்பாலர்களா
நல்லமுர்தமுண்பீர்கோவும்	நான்குநூருகுமப்பா

யாதவர்சொல்-கவி.

தேங்கியதாயேபாண்டியன் சிலம்பதைவஞ்சிபத்தன்
வாங்கியேபழுதுபார்க்க வைத்ததைகன்னஞ்செய்த
பாங்கிலாதவனைகாளி பாரைமேல்வெட்டிப்போனுர்
தீங்குவேரில்லைவொன்றும் தெரிந்ததைசெப்பினேமே.

யாதவர்சொல்-வசனம்.

கேளும்தாயே உம்மைப்பார்த்தால் பார்வதியோ லக்ஷிமியோ சரஸ்வதியோ அல்லதுயிந்ராணியோ ரதியோ நீபிரலாபிப்பது யெங்களுக்கு பரிதாபமாயிருக்குது யென்னவென்ருல் மதுரைப்பாண்டியன் சிலம்பைவஞ்சிபத்தன் பழுதுபார்த்து வைத்ததைதிருடினனென்று ஒருவனைபிடித்துவந்து காளிமுன்னே பெலியிட்டார்கள் யிது தவிரவேரொருசேதியும் கிடையாதுஅம்மணி.

கர்ன்னகைசொல் கவி

மைந்தரேசொன்னவகை யரிந்திட்டேன்
சந்தோஷமுடனேசாற்றுவீர் போரேன்.

கர்ன்னகைசொல் வசனம்

வாரும் குமாரர்களே நீங்கள் சுகமாயிருப்பீர்கள் நான்போய் வருகிரேன் அப்பாபாலர்களே.

பொது கவி.

பாலர்கள்மொழியைக்கேட்டு பதரியேயோடிவந்து
காலமும்குரிகிப்போச்சோ கணவனேயென்றுசொல்லி
ஜாலஞ்செய்யாமலோடி தலையெடுத்துடலில்வைத்து
ஓலமிட்டழைத்தாளப்போ ஒயிலுடனெழுந்திட்டானே.

பொது வசனம்.

இப்படியாக கர்ன்னகியம்மன் ஓடிவந்து பார்த்து தன்பிராண ஞயகருடையசிரசை யெடுத்து உடலில்வைத்து கூப்பிட்டமாத்தி ரம் நித்திரைசெய்தெழுந்தவன்போல் யெழுந்து சொல்லுகிற விதங்காண்க.

கோவிலன் சொல் கவி.

என்னைநீதேடியேனிங்குவந்தாய்
கர்ன்னகிபாண்டியன் கழுத்தரிவானே

கோவிலன் சொல் வசனம்.

வாரும்பெண்ணே கர்ன்னகி நீ யென்னையேன் தேடிவந்தாய் பாவிபாண்டியன் கண்டால் உன்னையும் கொலை செய்வானே பிராண நாயகி.

கர்ன்னகிசொல்-கவி.

என்னைநீவிட்டு யேகியேவந்து
மன்னவாயிங்கே மாண்டதைசொல்வாய்.

கர்ன்னகி சொல்-வசனம்.

கேளும் பிராணனாயகாயென்னைவிட்டு சிலம்பு விர்க்கவிந்தீரே நீர் யிவ்விடத்தில் மாண்டவிபரம் தெரியச்சொல்லும் நாயகா.

கோவிலன்சொல் கவி.

கூறுகிறேன்கர்ன்னகியே யெனக்குநீயும்
கொடுத்தசிலம்பெடுத்துவிலை கூரிவந்தேன்
வாருமெனவஞ்சிபத்தன் அழைத்துயேகி
மடலொடியகட்டியெனைப் பாண்டியன்முன்னே
பாருமிவன்கள்ளன்சிலம் பொளித்தானென்ருன்
பாண்டியனும்பாராமல் சிரசைவாங்கி
தாருமிகைகாரியருக் கென்றுசொன்ஞன்
தலைபருத்து சேவகருமேவினரே.

கோவிலன்சொல்-வசனம்.

வாரும்பிராணநாயகி நீ கொடுத்தசிலம்பை நான் மதுரையில் நான் விலைகூரிவருகும்போது வஞ்சிபத்தனனவன் தன்சிலம்பென்

றுபாண்டியனிடத்தில் கொண்டுபோய்விட யென்சிரசைகண்டித்தான் பெண்ணே கர்ன்னகி.

கர்ன்னகிசொல்-கவி.

பொல்லாதவரை புகலவும்வேண்டாம்
நல்லோர்தன்னை நாடியேசொல்வாய்.

கர்ன்னகிசொல்-வசனம்.

வாரும் பிராணநாயகா யுனக்குயிந்த மதுரையில் நல்லவருர் பொல்லதவரார் சொல்லும் பிராணநாயகா.

கோவிலன்சொல்-கவி.

பாதுகார்த்தன்னம் பகர்ந்திட்டதாயும்
ஓதும்வாத்தியரும் உத்தமராமே.

கோவிலன் சொல்-வசனம்.

கேளும் பெண்ணேகர்ன்னகி உனக்கு அன்போடு பாதுகாற்று அன்னம்பகர்ந்த யாதவதாயும் யெனக்குவரும்போது அன்னமளித்த உபாத்தியாரும்தவிர மற்றவர்களெல்லாம் யெனக்காகாதவர்கள் தான் பெண்ணே கர்ன்னகி.

பொது-கவி.

உத்தமரிருவரென்று யுரைத்திடும்கணவன்தன்னை
செத்திடும்படியோசித்து சிவந்துகண்ரெத்தம்போலே
சுத்துயேழ்கோட்டையாளும் துடுக்கனைநொடியிலிப்போ.
மொத்துவேனென்றுகோப மூண்டுமேவருகின்றாளே.

பொது-வசனம்.

இப்படியாக நாயகனனவர் சொல்லைக்கேட்டு யிரண்டுகண்ணும் சிவப்பேரி முன்போலே புருஷனைசபமாக்கிவிட்டு கோபாக்கினி மீரிடபாண்டியனையின்றேடே அதாகுதம் செய்வேனென்றுமதுரைலை நாடி வருகிரவிதங்காண்க.

கர்ன்னகைசொல்-தரு.

மன்னனையெப்படிகொல்லலாகும் பாண்டியன்
மதுரையிலிருந்துல காளப்போகும்
கன்னஞ்செய்தானென்றுரைத்ததட்டான் அவன்
காலமுமுகிந்து தினிக்கெட்டான்

யேழுசுத்துகோட்டையுமிடிப்பேன் பாண்டியன்
யிரலெடுத் துதிரங்குடிப்பேன்
வாழுவதினிஅருமைதானே பாண்டியன்
வரசழிக்க வந்தவளும்நானே
ஆனைபரிதேரதையழிப்பேன் பாண்டியன்
ஆண்மைகளையின்றே டேயொழிப்பேன்
சேனைகளுடன்கொடிபரிப்பேன் பாண்டியன்
சிரமரிந்தபின் னுயிர்தரிப்பேன்
யென்பகைமுடிக்காமல்போவனே ப்கை
யில்லைநமக்கென் றெண்ணுனையேனே
முன்கதவைமுடிமரித்தானே யினி
மோசமில்லையென்று நகைத்தானே

கர்ன்னகிசொல்-கவி.

ஆரடாகதவை அடைத்திருப்பவனே
நேரதாயேக நீ திரந்திடடா.

கர்ன்னகிசொல்-வசனம்.

அடாவழிக்காவலா கதவைத்திரவும்பிள்ளாய் முண்டமே.

சேவகன்சொல்-கவி.

வழிவிடுமென்று வந்தவளாரு
பழியதுநேரும் பாவையேகேளாய்

பொது கவி.

பழிநேறுமென்றுரைத்த வார்த்தைகேட்டு
பல்லைநிறநிறவென்று கடித்துவோடி
கிழிபடவேகதவையெட்டி உதைத்துத்தள்ளி
கொர்ச்சித்துகாவலன் முகத்தில்மோதி
விழியாதேதிருடனிட தேவியாகும்
வேந்தனென்னும் பாண்டியனைக்கண்டுநீயும்
அழிவாகசெய்திடவே வந்தாளென்று
அகத்தியம்போய்சொல்லென்று அனுப்பினளே

பொது-வசனம்.

இப்படியாக வழிக்காவலன்சொன்னதைக் கேட்டுகோபமாகி கோட்டைக்கதவை காலினாலுதைத்து பொடிபொடியாக்கி காவலன் முகத்திலரைந்து அடாவாடாகாவலா உங்களரசனாகியபாண்டியனைக்கண்டு யெதிர்காணவரச்சொன்னாள் திருடன்தேவியென்றுசொல்லியனுப்ப காவலன்பாண்டியனைக்கண்டுசொல்லுகிறவிதங்காண்க.

சேவகன் சொல் தரு.

அபையமய்யாபாண்டியராஜே
சபையழிந்துபோகும்போலே
சொல்லவேவெந்தனுக்கு
நல்லநினவில்லாமலே
வல்லவியொருத்தியாரோ
அல்லல்நேரும்போடியென்று
காலினாலுதைத்தாலெட்டி
சீவியுமெனைப்பிடித்து
திருடன்தேவிவந்தாளென்று
புருஷனைசிரமருத்த
பித்தனையுஞ்சொல்லியிவள்
உத்தசேதிதுவுரைக்க
யாகாதென்னால்சேவுகங்கள்
தட்டுபடுதென்மனது
துயரமெத்ததோணுதையோ
நான்கலங்கலானனையா
வந்துவழிவிடுமென்றாள்
அதட்டியேயுரைத்தேனையா
கதவுபொடியாச்சுதையா
நேரிலுரைத்ததைக்கேளும்
செப்புமென்றாளுந்தனுக்கு
புலையனுக்குரையுமென்றாள்
யெதிர்காணவரச்சொன்னாள்
ஓடிவந்தேன்மன்னவனே

பாண்டியன் சொல் கவி

ஆரடிகோட்டைக்குள்ளே அச்சமில்லாமல்வ...
கூரடிபேருமென்ன கோதையுன்னூருமென்ன
பாரடிநவிலாவிட்டால் பதைத்திடபாணத்தாலே
சூரனுன்சிரசைரண்டாய் துணிப்பேனுனுரைசெய்வாயே.

கர்ன்னகி சொல் தரு.

அரிவேனுன்வீரமெல்லாம் பாண்டியாயென்
ஆளன்பழிகொடடா
தெரியாதோசிலம்பெடுத்த கள்ளநிட
தேவியுநானல்லவோ
பழிகொடடாமடையா யெந்தனிட
பத்தாவைக்கொன்றபழி
விழியாதேயென்கணவன் உத்தநிட
வீட்டில்திருடினரோ
திருடியகைகளுக்கு முண்டமேபோ
சேர்விலங்காகாதோ
கருவுடனேயழிய உன்னலேயோ
காலங்கள்நேர்ந்துதடா
அள்ளியகைகளுக்கு படுபாவி
அழுவிலங்காகாதோ
துள்ளியேசிரமறுத்த கைகள்ரெண்டும்
துணிக்காமல்போவேனோடா
செங்கோல்நிலைக்குமென்று பாண்டியாயுன்
சிந்தையிலெண்ணதோடா
அங்கமும்பதருதடா மடையாயிப்போ
அருத்திடஞாயமென்ன
அய்யய்யோஉங்கள்குலம் யின்றேடே
அழிந்திடப்போகுதடா
செய்யாதகாரியங்கள் மன்னவுன்னே
செய்ததைச்சொல்லடாநீ

பாண்டியன்சொல் கவி.

சொல்லுவாயென்றுரொம்ப துடுக்குடன்பேசவந்தாய்
நல்லதுகேள்சிலம்பை உன்நாயகன் ஒளித்ததாலே
யெல்லையோர்காணபத்தன் யிருக்கியேகட்டிவந்தான்
கொல்லவேசொன்னேன்துள்ளிக் குதிக்குராய்குதித்திடாதே

பாண்டியன்சொல் வசனம்.

கேளும் திருடன்தேவியே யென்சிலம்பை உன்புருஷன்திருடினபடியினாலே வஞ்சிபத்தன் கைகள்வாகபிடித்து வந்தான் ஆகையால் அவன்சிரசைகண்டித்தேன் நீரொம்பவும்குதிக்காமல் வெளியேபோடிதிருடன் தேவியே.

கர்ன்னகிசொல் தரு.

குதிக்குராயென்றுநீ மதிக்காமல்பேசுராய்
அதிக்கிரமாய்தலை அருத்திடப்போமா

பா தலையருத்தேனென்று தத்தியேவீழ்குராய்
விலையிலாசிலம்பை யெடுத்திடப்போமா

கர்ன்-கொடுத்ததுன்சிலம்பென்றும் யில்லைவேர்சிலம்பென்றும்
கொடுத்தவன்பார்த்தல்லோ கொலைசெய்யவேண்டும்

பா பாராமலேதலை பாவயேகொய்வேனோ
வீராப்பாய்பேசுருய் வெளியேநீபோகாய்

கர்ன்-வெளியேபோவென்றுகை விசியேசாதே
ஒளியாதேசொல்சிலம் புன்னுதாபாண்டியா

பா யென்சிலம்பல்லாமல் யேன்குலைசெய்குரேன்
துன்மார்க்கியேரொம்ப துள்ளுருய்போபோ

கர்ன்-துள்ளுராய்போவென்ற துஷ்ட்டாவுன்சிலம்புல்ல
கொள்ளுமென்வார்த்தையை குருக்குசொல்லாதே

பாண்-குருக்குசொல்லாதென்ற கோதைவுன்சிலம்பானல்
சுருக்குடன்சபைகாண தோகையேயழையும்

கர்ன்னகிசொல் கவி

யென்னுடன்பிரக்துபாலுண்டிருந்தது மெய்யேயானல்
மன்னவன்சபையின்முன்னே வாவெனசத்தங்கேட்டு

உத்

உன்னிதபேழைதன்னை உதைந்துமேயெழும்பிவந்து
கர்ன்னகிகரத்தில்நிர்க்க கண்டுஷரசெய்குவாளே

கர்ன்னகிசொல் வசனம்

என்னுடன் கூடப்பிரந்து கூட்டுப்பர்லுண்ணது மெய்யாகில் யென்கரத்தில் வரவேணுமென்ன பாண்டியன்பேழையில் வைத்திருந்தசிலம்பு கணீலென்றசத்தத்துடன் பெட்டியையுடைத்து மேலேயெழும்பி கர்ன்னகிகரத்தில்வந்து நிர்க்ககர்ன்னகி பாண்டியனிடத்தில் சொல்லுகிரவிதங்காண்க.

கர்ன்னகிசொல் கவி

மண்டலம்புகழ வாழும்பாண்டியனே
கண்டரிவாயென் கால்சிலம்பிதுவே

கர்ன்னகிசொல் வசனம்.

உலகமுழுதும் புகழும்படியாளப்பட்ட பாண்டியனே யிதுதான்யென் கார்ச்சிலம்பு பாரும் பாண்டியனே.

பாண்டியன்சொல் கவி.

உன்சிலம்பென்று உரைத்திடுமாதே
யென்சிலம்பெங்கே யிருப்பதைஅழையும்

பாண்டியன் சொல் வசனம்.

கேளும் திருடன்தேவியே யிதுஉன்சிலம்பென்று சொல்கிறாய் ஆனால் யென்சிலம்பெங்கேயிருக்குது காண்பியும் பார்ப்போம்துர்ச்சனி.

கர்னன்கி சொல் கவி.

சிந்தையின்படியேயுந்தன் சிலம்பதையழத்துயானும்
தந்ததுண்டானால்பாண்டியா தருவதுயெனனுசொல்லும்

கர்ன்னகிசொல் வசனம்.

வாரும் பிள்ளாய் பாண்டியனே அப்படி உன்சிலம்பையயான் அழைத்துக் கொடுத்தால் யென்னதருவாய் சொல்லும் பாண்டியா.

பாண்டியன் சொல் கவி.

வந்துகைதந்தாலுந்தன் மன்னவன்பழியொன்றுக்கு
சொந்தயென்குலத்தோரெல்லாம் தோகையேபழிதாரோமே

பாண்டியன் சொல் வசனம்.

கேளும் திருடன்தேவி அப்படிக்கி நீயழைத்துக்கொடுத்தால் உன்பழியொன்றுக்கு யென்குலத்தோரெல்லாம் பழிதருகிறோம் காண்பியும் பெண்ணே திருடன்தேவியே.

பொது-கவி.

கர்ன்னகிகெருடனதன்னை கருத்தினில்னினைக்கும்போது
புன்னகையோடுவந்து போட்டிடக்கரத்தில்விழ
சொனனசொல்போலேபாண்டியன துடுக்கடக்கிடுவேனென்று
முன்னிலேவந்துநின்று மூடனேபாரென்றாளே.

பொது- வசனம்.

கர்ன்னகையம்மன் கெருடாழ்வாரை நினைக்ககெருடனானது சிலம்பையெடுத்து கர்ன்னகிகரத்தில் வைத்து உயரவட்டமிட அப்போது கர்ன்னகைபாண்டியன் யெதிரேவைத்து யிந்தசிலம்பானது யாருது பாரும் முண்டமேயென்ன பாண்டியன்கண்டு பயந்து யேதென்று சொல்லுகிர விதங்காண்க.

பாண்டியன்சொல்-கவி.

போர்த்திடுமென்ற பராபரினியே
கார்த்திடுவதுவுன் கடமைகளாமே.

பாண்டியன்சொல்-வசனம்.

அகிலாண்டகோடி பிர்மாண்டநாயகி யான்தெரியாமல் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும் தயாபரி.

பொது-கவி.

கார்ப்பதுவுன்கடமையென சொல்லக்கேட்டு
கர்ன்னகைதன்னுருவமதை யேகச்செய்து

நாற்பதுயோஜனை நிகளம்சிங்கம்தொங்க
　　நடனமிடும் திரிசூலியாகிநின்று
ஆர்ப்பரித்தென்பகையதனை முடிப்பேனென்று
　　அம்புகெதைவாள்சூலம் கையிலேந்தி
பார்ப்பவர்கள்பணிந்திடவே பாண்டியன்முன்னே
　　பழிக்கிபழிவாங்கிடவே வருகின்றாளே.

கர்ன்னகியம்மன் பழியைத்தீர்க்க

காளிஉருக்கொண்டு வருகிற தரு

சத்திசாமுண்டியவளே　　　திசைகலங்கிட
வெத்திபெரவந்துமேவினாள்　　　பாண்டியனெங்கே
மொத்திடுவேனென்று　　　தாவினாள்
அண்டத்திலுள்ளதேவர்கள்　　　கண்டவர்பயமெடுக்க
பிண்டிசூலம்வாளம்வாரினாள்　　　வல்லுலக்கை
கொண்டுகோப　　　மாகிசீறினாள்

மாடானதருக்கும்சூரிவரிக் தறையினில்கட்டி
கோடாலிதந்தங்கடித்து விழியிரண்டும்
கோழிமுட்டைபோலே னெரித்து
திக்கெட்டுமதிர்ந்திட உக்ரகோரரூபமாகி
தேவிதிருசூலிவந்தனள் பூமாதேவி
ஆவியதரியே லைந்தனள்

காளிசொல்-தரு.

பாண்டியனேயெதிர்வந்திடடா வந்து
பழிக்கிப்பழிஆவிதந்திடடா
வேண்டிநின்றாலுன்னைவிடுவேனோ விட்டு
வேறொருவேலைக்குள்படுவேனோ
சிங்கப்பல்லூறுதுமென்றிடவே சிம்மா
தனத்தைவிட்டிழிந்துவாநின்றிடவே
சங்கரிவாளுங்கைபிடித்தாளே சென்னி
தரித்துதிரத்தையுங்குடித்தாளே
வங்கையெல்லாம்வந்தொழித்தாளே ஓடி
வருபவரைக்காலைக்கிழித்தாளே
தொங்கும்பீரலைப்பல்லால்கடித்தாளே வரும்
துரைகளைநெஞ்சிலேயிடித்தாளே
கோவிலங்கியேவயர்பிளந்தாளே மணிக்
குடலைப்பிடுங்கிமுழமளந்தாளே
கூவியழுபவரைபிடித்தாளே அவன்
குலத்தைவேரறுத்துமேமுடித்தாளே
மாடருக்கும்சூரியை யெரிந்தாளே குலம்
மாண்டபின்னப்புரம்பரிந்தாளே
கூடமும்மேடையுமுடைத்தாளே பத்தன்
கூக்குரலிட்டழவதைத்தாளே
பெண்டுபிள்ளையுங்கையால்குத்தினளே குடலை
பிடுங்கிமண்ணிலிழுத்துமொத்தினளே
கண்டுகெருடனும் நகைத்தாரே பின்பு
காளியினுருவினல் திகைத்தாரே
வாத்தியிடைச்சியையும் வாவென்றாள் யிந்த
மதுரைவிட்டேகியேபோவென்றாள்

காத்துவாடைக்கையால் மறைத்தாளே பாலே
கரந்துமதுரையிலே யிரைத்தாளே
பால்படமதுரையுமெரிந்ததுவே அப்போ
பரிந்துபூமாரியும் சொரிந்ததுவே
மால்தங்கையோர் மொழிந்தாளே தாசி
மயிரவிழ்ந்திட டிவந்தாளே
வந்திடும்தாசியே நில்லென்ருள் மன்னன்
மாண்டாருன்சேதியை சொல்லென்ருள்
யெந்தனையுங்கூட தகியென்ருள் யினி
இருந்திடஞாயமோ முகியென்ருள்
உடன்கட்டையேரியேபடுத்தாளே வரம்
உருமையாய்கேழ்க்கவே கொடுத்தாளே
குடம்தட்டிகொள்ளியும் மூட்டினாளே சபம்
குமுரியெரிந்திட கூட்டினாளே
அங்கத்தையெடுத்தவள்நடந்தாளே காசி
ஆரெனும்நதிக்கிவள் துடந்தாளே
மங்களநதியினில்விடுத்தாளே பின்பு
மலையாளந்தன்னையே அடுத்தாளே
திருவொற்றியூர் தனைச்சென்ருளே பகவன்
தியாகரைஜலங்கேட்டுநின்ருளே
தருகிரேன்கிணற்றிலிரங்கென்ருரே வந்து
தலையில்பாரையால் மூடிநின்ருரே.

மங்களம்.

மங்களம்ஜெயமங்களம் சுபமங்களம்

கோவிலன் கர்னகி நாடகம்

முற்றுப்பெற்றது.